413 K

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

2086

இயற்பா.

திருமழிசையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

நான்முகன் திருவந்தாதி.

இந்த க்ரந்தம்

அபாரகருணாஸாகரரான பெரியவாச்சான்பிள்ளை

திருவாய்மலர்ந்தருளிய

மணிப்ரவாள வ்யாக்யாநஸஹிதம்

இச்சபாபண்டிதரான

சிங்கப்பெருமாள்கோயில்

தர்க்கதீர்த்தர்-ராமாநுஜாசார்யரால்

எழுதப்பட்ட ப்ரதிபதஸஹிதம்

அநேக தேசாநீத ஸ்ரீகோசங்களின் ஸஹாயத்தினால்

லேககப்ரமாதாதி ஜநிததோஷங்களில்லாமல்

மேற்படி

ராமாநுஜாசார்யராலும்

ஸி. முத்துக்ருஷ்ணநாயுடு அவர்களாலும்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்) யாரால்

சென்னப்பட்டணம்,

ஸ்ரீநிகேதந முத்ராக்ஷரசாலையில்

ஸ்ரீ பராங்குசதிருவவதாராதி - ௫௦௦௨.

சுபக்ருத் ஸம்வத்ஸரத்தில்

பதிப்பித்துப் ப்ரசுரம் செய்யப்பட்டது.

௧௯௦௨.

விஜயதேதராம்.

http://acharya.org



திருமழிசையாழ்வார்திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

ஸ்ரீவைஷ்ணவக்ரந்த முத்ராபகஸபை (லிமிடெட்)

இயற்பா

நான்முகன் திருவந்தாதி.

இந்த க்ரந்தம் திவ்யப்ரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமான இயற்பாவில் நான்காவது ப்ரபந்தம். இதில் பாசுரங்கள்-௯௬. இதை அருளிச்செய்தவர்-பகவந் நிர்ஹேதுக ஜாயமான கடாக்ஷலப்த திவ்யஜ்ஞாநமுடைய திருமழிசையாழ்வார். இவர் தொண்டமண்டலத்தில் திருமழிசையென்னும் மஹீஸாரக்ஷேத்ரத்தில் த்வாபரயுகாதி, அ௩ ௭௯௮௯-வது ஸம்வத்ஸரமான விபவஸம்வத்ஸரம் தைமாஸம் க்ருஷ்ணபக்ஷதசமி குருவாரம் மகா நக்ஷத்ரம் துலாலக்நத்தி லவதரித்தவர். இவர் தகப்பனார்-பார்க்கவ மஹர்ஷி. இவர் தாயார்-கநகாங்கியென்னும் அப்ஸரஸ்த்ரீ. இவரை வளர்த்தவர்-ஹரிதாஸர். இவர் திருமழிசையிலவதரித்தவராகையால் இவருக்குத் திருமழிசையாழ்வாரென்று திருநாமமாயிற்று. இவர் ஸுதர்சநாம்சஸம்பூதர். இவருடைய நாமாந்தரங்கள் - ஸ்ரீபக்திஸாரர், மஹீஸாரபுராதீசர், பார்க்கவாத்மஜர், திருமழிசையையர், மழிசைப்பிரான் என்பவை. இவருக்கு வித்யை - அஷ்டாங்கயோகம். இவர் திருவாராதநம்- சொன்னவண்ணம்செய்தபெருமாள். ஆசார்யர்-பேயாழ்வார். சிஷ்யர்-கணிகண்

னன், த்ருடவ்ரதர் என்பவர்கள். இவர் செய்தருளின க்ரந்தாந்தரம் ௧௨௦-பாசுரங்களுள்ள திருச்சந்தவிருத்தம், இவர் மங்களாசாஸநம் செய்த திவ்யதேசங்கள் - கோயில், திருமலை, பெருமாள்கோவில் யதோக்தகாரிஸந்நிதி, திருக்குடந்தை, திருப்பேர், அன்பில், கபிஸ்தலம், திருவூரகம், திருப்பாடகம், திருக்குறுங்குடி, திருவல்லிக்கேணி திருக்கோட்டியூர், திருஎவ்வுளூர், திருத்துவாரகை, திருக்கூடல், திருப்பார்கடல், ஸ்ரீவைகுண்டம். இவர் யோகாப்யாஸத்தினால், ௭௦௦௦-ஸம்வத்ஸரமெழுந்தருளியிருந்து இதரமதங்களை நிரஸித்து விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை ஸ்தாபித்துக்கொண் டெழுந்தருளியிருந்தார்.

இவருடைய ப்ரபாவ ஸங்க்ரஹம்.

முன்பொருகாலத்தில் ஸமஸ்தருஷிகளும்சேர்ந்து இந்த பூலோகத்தில் ஸர்வோத்க்ருஷ்டமான க்ஷேத்ரமெதுவென்றாலோசித்துவிஸ்வகர்மாவைக்கொண்டு ப்ரஹ்மா ப்ரபஞ்சத்திலுள்ளஸகல க்ஷேத்ரங்களொருபுறமும், திருமழிசை யொருபுறமுமாகவைத்து நிறையிட, அப்பொழுது திருமழிசையிருந்தபக்கம் கனத்துத்தாழ்ந்திருப்பதைக் கண்டு திருமழிசைக்கு மஹீஸாரக்ஷேத்ரமென்று திருநாமம் சாத்தினார்கள். பின்பொருகால்இந்தக்ஷேத்ரத்தில் பார்க்கவர்ஷிதபோநிஷ்டராயெழுந்தருளியிருந்ததைக்கண்டு, இந்த்ராதிகள் அந்த தபஸ்ஸை பங்கம்செய்யநினைத்து, கநகாங்கியென்னுமொரு அப்ஸரஸ்த்ரீயை அவரிடமனுப்ப, பார்க்கவர்ஷி அவளைக்கண்டு மோஹித்து யோகாப்யாஸத்தைவிட்டு அவளுடன் க்ரீடித்துக்கொண்டிருக்கையில் அவ்விருவருக்கும் திருமழிசையாழ்வார் பிண்டாகாரமா யவதரித்தார். பின்பு கநகாங்கியென்பவள், ஸூர்யனைப்போல் தேதீப்யமானமான ப்ரஹ்ம தேஜஸ்ஸையுடைய தன்பிள்ளையாகிய இவ்வாழ்வாரை ஓர் பிரப்பம்புதரில்வைத்துவிட்டு, தனக்கிருப்பிடமான ஸ்வர்க்கமடைந்தாள். ருஷியும் தபோநிஷ்டராயிருந்துவிட்டார். பிறகுஅந்தப் பிண்டத்துக்குக் கைகால்கள்முதலிய அவயவங்களேற்பட்டுக் குழந்தையாய், பசியினாலழத்தொடங்க, அவ்வூரிலெழுந்தருளியிருக்கிற ஸ்ரீஜகந்நாதன் அங்கு லக்ஷ்மீஸமேதனாயெழுந்தருளி பக்தசிரோமணியான இவ்வாழ்வாருக்கு ஸேவைஸாதித்து இவர்பசியைப்போக்கினார். பின்பொருகால் குறவஜாதியரான ஹரிதாஸரென்றொருவர் பிரம்பறுக்க அப்புதரண்டையில்வந்து அங்கிருந்த இவ்வாழ்வாரைப்பார்த்து ப்ரேமாந்தரா யெடுத்துக்கொண்டுபோய், தன் பார்யையான பத்மவல்லியிடத்திற்கொடுத்தார். அவள் தனக்கு ஸந்தானமில்லாததினால் அதிக

http://acharya.org

ப்ரீதியுடன் இவரையெடுத்து வளர்த்துக்கொண்டிருந்தாள். ஆயினும் ஆழ்வார் அவளகத்துப்பாலுங்கூட அமுதுசெய்யவில்லை. இவ்வாச்சர்யத்தைக்கேட்டு மகிழ்ந்து அவ்வூரில் ப்ராஜ்ஞனென்றொரு ஸத்சூத்ரர் வந்துபார்த்து அடியேனகத்துப்பாலமுதுசெய்தருள வேணுமென்று அநேகவிதமாக ப்ரார்த்திக்க, அதை யங்கீகரித்துத் தாம் அமுதுசெய்து மிகுந்தபாலை நீர் ஸ்வீகரியுமென்று ப்ராஜ்ஞனுக்கு ஆழ்வார் ப்ரஸாதித்தருள, அவரும் அவர் பார்யையுமாக அப்பாலை ஸ்வீகரித்துக் கிழத்தனத்தைவிட்டு நவயௌவனமுடையவர்களாய்க் கணிகண்ணனென்றொரு பாகவதோத்தமரைப் பெற்றார்கள்.

இவ்வாழ்வார் ஏழுதிருநக்ஷத்ரம்வரையில் அந்நபாநாதிகளைவிட்டு, கேவல பகவத்கடாக்ஷத்தினால் அந்த ஹரிதாஸாகத்தில் வளர்ந்துகொண்டு கூடைமுடைதல் முதலான தஜ்ஜாத்யுசிதமான வ்யாபாரங்களைச் செய்துகொண்டிருக்கையில், அப்போது ஸர்வேஸ்வரன் இவர்க் கந்நபாநாதிகளில் ருசியை விளைப்பிக்க, அது முதல் ஆழ்வார் ஹரிதாஸாகத்தைவிட்டு தீர்த்தயாத்ரை செய்துகொண்டு சிறிதுகாலமெழுந்தருளியிருந்தார். பின்பு யோகாப்யாஸத்தி லிழிந்து, ஜகத்காரண வஸ்துவை த்யாநிக்கக் கருதி, அது இன்னதென்றாராயக் கோலி, சாக்யோலூக்யாதி வேத பாஹ்யமதங்களையும், வேதத்துக்கபார்த்தம் சொல்லும் பாட்ட ப்ராபாகர மாயாவாதாதி குத்ருஷ்டிஸித்தாந்தங்களையும் ஆயிரம்வருஷம் பரிசீலநம்பண்ணி அவற்றை அஸாரங்களாக நினைத்துக்கைவிட்டு கடைசியில் சைவ ஸித்தாந்தமே மேலென்று அதில் ப்ரவேசித்து சிவபக்தாக்ரேஸராய்பஸ்மருத்ராக்ஷங்களை யணிந்து அம்மதத்துக் கநுகுணமாக அநேக க்ரந்தங்களையும் செய்து அம்மதத்தை ப்ரவசநம்செய்து ஸ்தாபித்துக்கொண்டிருந்து கடைசியாய் மௌந வ்ரதத்தை யவலம்பித்தார்.

இந்த வ்ருத்தாந்தத்தைப் பேயாழ்வார் கேட்டருளி இவரைச் சீர்திருத்தினால் இவர் தர்சந ப்ரவர்த்தகராவரென்று திருவுள்ளம்பற்றி, தம்முடைய நிர்ஹேதுக க்ருபையினால் இவரிருக்குமிடத்துக் கெழுந்தருளி இவருடைய மௌந வ்ரதத்தைக்கண்டு இவரை வார்த்தைசொல்விக்க உபாயமேதென்றாலோசித்து, இவரிருக்கும் தோட்டத்துக்கு ஸமீபத்திலொரு தோட்டமிட்டு, அதில் செடிகளைத் தலைகீழாக நாட்டி நீர் நில்லாத ஓர் ஓட்டைப் பானையினால் அம்மரங்களுக்கு நீர் வார்த்துக்கொண்டிருக்க, இதைக்கண்ட திருமழிசையாழ்வார் அட்டஹாஸம் செய்து இதென்ன உந்மத்த க்ருத்

http://acharya.org

யம் செய்கிறீரென்று கேட்டார். அதற்குப் பேயாழ்வார், நானு உந்மத்தன்; நீரல்லவோ என்று கேட்டு, ஸகல ஜகத்காரணனானவன் ஸ்ரியஃபதியாயிருக்க, அவனுக்குப் பௌத்ரனாய், மண்டையோடும் கையுமாய்ப் பிச்சையெடுத்துத் திரியுமவனாய், ஒரு பூர்த்தியின்றிக்கே ஜடையைத்தரித்துத் தவம் செய்யுமவனாய், ஸ்ரியஃபதியினுடைய ஸ்ரீபாததீர்த்தமான கங்கையை சிரஸாவஹித்துப் பவித்ரனானவனுமாயிருக்கிற ருத்ரனை நீர் ஜகத்காரணமென்று உபாஸிப்பது சேரும்விதமென்னென்று பேயாழ்வாரருளிச்செய்தார். அப்போது இருவருக்கும் ப்ரசண்ட வாதம் நடந்தது. அதில் பேயாழ்வார், ஸ்ருதி ஸ்ம்ருத்யாதிகளினாலும் ஸத்யுக்திகளினாலும் சைவ ஸித்தாந்தத்தைக் காட்டினும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமே பரமோத்க்ருஷ்டமென்று உபந்யஸிக்க, அதற்குத் திருமழிசையாழ்வார் பதில் சொல்லமாட்டாமல் தோற்று, அப்படி ஸர்வோத்க்ருஷ்டமான ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் என்னைப் ப்ரவேசிப்பித்து ஸ்ரீவைஷ்ணவனாக்கி விசேஷார்த்தங்களையுபதேசித்து க்ருதார்த்தனாக்கியருளவேணுமென்று ப்ரார்த்திக்க, பேயாழ்வார் அதை ஓமென்றங்கீகரித்து, சைவராயிருந்த திருமழிசையாழ்வாருக்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைச் செய்து மந்த்ர மந்த்ரார்த்தங்களையுபதேசித்துப் ப்ரபந்நாக்ரேஸராக்கிக் கடாக்ஷித்தருளினார்,

அநந்தரம் திருமழிசைப்பிரான் கைரவிணீ தீரத்துக் கெழுந்தருளி ஸ்ரியஃபதி விஷயமாய், ஸததாராவதவிச்சிந்ந ப்ரீதிரூபாபந்ந ஸ்ம்ருதிஸந்தானரூபமான பரமபக்தியை யநுஷ்டித்துத் தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயை வர்த்திப்பித்துக்கொண்டு ஆதித்யனுதித்தாற்போல் பெரிய தீப்தியுடையராய்ப் ப்ரகாசித்துக் கொண்டெழுந்தருளியிருந்தார். அப்போதொரு ஸமயத்தில் ருத்ரன் பார்வதீ ஸமேதனாய் வ்ருஷபவாஹநத்தின் மேலேறி ஆகாசமார்க்கமாகத் திரிந்து வரும்போது ஆழ்வார் அவனுடைய நிழல் தம்மேல் விழாமல் ஒரு பக்கமொதுங்க, அதைக்கண்ட பார்வதி, இம்மஹாநுபாவர் ஆரென்று தன் ப்ராணநாதனைக் கேட்க, அவனும் இவருடைய ப்ரபாவத்தைவர்ணிக்க, அதைக்கேட்டு அவரைப் பார்ப்போம் வாவென்று நிர்ப்பந்தம் செய்து அழைக்க, ருத்ரனும் பார்வதீஸமேதனாய் ஆகாசத்திலிருந்திறங்கி ஆழ்வார் முன்னே போய்நின்றான். ஆழ்வார் இவர்களைக் கண்ணெடுத்துப் பாராமல் தன் கிழிந்த வஸ்த்ரத்தைத் தைத்துக்கொண்டிருந்தார். ருத்ரன் பாகவத வைபவ மறியாத துரபிமாநியாகையால் ஆழ்வாரைப் பார்த்து ஓய்! உமக்கு வேண்டும் வரம் கேளும், நாம் தரு

http://acharya.org

கிறோமென்று சொல்ல, அதற்குஆழ்வார், தர்மார்த்த காமமோக்ஷங்களென்கிற சதுர்வித புருஷார்த்தங்களில் முதல் மூன்றும் நமக்கு வேண்டா; நமக்குவேண்டியமோக்ஷம் இவனுக்கும்இவனைப்படைத்த ப்ரஹ்மாவுக்கும் கொடுக்கச்சக்தியில்லை ; ஆகையால் இவனிடத்தில் நாம் பெறவேண்டுவதொன்றுமில்லை யென்றெண்ணி, நமக்குன் பக்கலில் பெறவேண்டியதொன்றுமில்லையென் றருளிச்செய்தும் ருத்ரன் வெகுவாய் நிர்ப்பந்திக்க, அவன் நிர்ப்பந்தத்துக்காக ஏதோ ஒன்றைக்கேட்போமென்று நினைத்து, இந்த ஊசியின்வழி நூல் போகும்படிவரங்கொடுக்கவேணுமென்று கேட்டார், அந்தப்பரிஹாஸச்சொல்லைகேட்டு தாமஸ ப்ரக்ருதிகனான ருத்ரன் அதி குபிதனாய், ஓய்! நீர் என்னைப்பரிஹாஸம் செய்தீரல்லவா, உம்மை நானிப்போதென்செய்துவிடுகிறேன்பாரும், மந்மதனைக்கொளுத்தினாற்போல் உம்மை இப்போதே பஸ்மமாக்கிவிடுகிறேன் என்று பருஷோக்திகளைச் சொல்லித் தன்னுடைய நெற்றிக்கண்ணைத்திறந்தான். அப்போது அக்கண்ணில் நின்றும் காலாக்நி புறப்பட்டு பூம்யந்தரிக்ஷங்களையும் ஸமஸ்த திக்குக்களையும் வ்யாபித்து தஹித்துக்கொண்டு ஆழ்வார்மேல் திரும்பிற்று. ஆழ்வாரும் தம்முடைய பாதாங்குஷ்டத்தி லிருந்த நேத்ரத்தைத்திறக்க, அதில் நின்று புறப்பட்ட, அக்நி மேற்கிளம்பி ரௌத்ராக்நியைப் பகலில் மின்மினியைப்போ லாக்கிவிட்டு ருத்ரன்மேல்பாய, அதையவன் ஸஹிக்கமாட்டாமல் தனக்கு ஸஹாயமாகக் காளமேகங்களைக்கூப்பிட அம்மேகங்களும்வந்து தங்கள் சக்தியுள்ளவளவும் வர்ஷிக்க, ஆழ்வாருடைய பாதாங்குஷ்டாக்நி அதற்குச் சலியாமல் படபாக்நி ஸமுத்ரஜலத்தைப் பானஞ்செய்வதுபோல் அந்தஜலங்களையெல்லாம் வற்றடித்தது. அதைக்கண்டு ருத்ரன், இனி நமக்கு வேறுபாயமில்லையென்று நிச்சயித்து ஆழ்வார் திருவடிகளில் சரணம்புகுந்து, ஓ பாகவதோத்தமரே! தேவரீருடைய ப்ரபாவமொருவராலும் வர்ணித்துச் சொல்லமுடியாது, என்னுடைய பா (ஶா) லாக்நியும் உம்முடைய பாதாக்நிக்கொவ்வாது. பூர்வகாலத்தில் அம்பரீஷனென்றொருபாகவதனால் துர்வாஸர் அவமானப்பட்டாற்போல்நான் இப்போது தேவரீரால் பரிபவமடைந்தேன். இவ்வளவு ப்ரபாவமும் தேவரீருக்கு பகவத்பக்தியினாலுண்டாயிருந்ததாகையால் இதுமுதல் தேவரீருக்கு பக்திஸாரரென்று திருநாமமாகக்கடவதென்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் தம் பாதாங்குஷ்டாக்நியையும் ஸம்ஹரிக்க ருத்ரன் பார்வதீஸமேதனாய் சிரஃகம்பநம் செய்துகொண்டு கைலாஸத்தையடைந்தான்.

http://acharya.org

பின்பொருகால், சுக்திஹாரனென்கிற ஒரு ஸித்தன் தன் தபோமஹிமையினால் புலியை வாஹநமாகக்கொண்டு ஆகாசசாரியாய்த் தடையின்றி ஸஞ்சரித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் ஆழ்வாருக்கு மேற்புறமாக வரும்போது தன் வாஹநமான புலி முன்னே போகமாட்டாமல் ஸ்தப்தமாய் நிற்க, இதற்கென்ன காரணமென்று சித்தன் யோசித்து நாற்புறங்களிலும்பார்த்து ஒன்றையுங்காணாமல் கீழ்நோக்கிப் பார்க்கும்போது அங்கெழுந்தருளியிருக்கிற ஆழ்வாரைப்பார்த்து இதுஇவருடையமஹிமைதானென்று நிஸ்சயித்து அங்கிருந்து கீழிறங்கிவந்து ஆழ்வாரை ஸேவித்து, ஓஸ்வாமீ! நான் தேவரீருக்கு வஸ்த்ரகவசங்கள் கொடுக்கிறேன். இவைத யணிந்திருந்தா லொருபாதையும் வாராது; ஸகல கார்யங்களும் ஸித்திக்கும் அங்கீகரித்தருளீரென்று வஸ்த்ரகவசங்களைக்கொடுக்க, ஆழ்வார், ஓ ஸித்தேஸ்வரனே! நான் உனக்கொரு ரத்நகவசமும் வஸ்த்ரமும் கொடுக்கிறேன்; இவைதயணிந்து பாருமென்று அந்தக்ஷணத்திலேயே தம் ப்ரபாவத்தினால் ஸ்ருஷ்டித்துக்கொடுத்தார். பின்பு ஸித்தன் தன் கழுத்திலிருக்கும் நவரத்நமாலையைக்கழற்றி, இதை ஜபமாலிகையாகச் செய்துகொள்ளுமென்றுகொடுக்க, ஆழ்வார் தாம் சாத்தியிருந்த துளஸீ நளிநாக்ஷமாலைகளைக்கழற்றி இவைதப்பாரென்று காண்பிக்க, ஸித்தன், நவரத்நங்களிழைத்துக் கண்தெறிக்கும்படி கோடிஸூர்ய ப்ரகாசமாயிருக்கிற அம்மாலையை வாங்கிப்பார்த்து ஆஸ்சர்யப்பட்டு, ஓ ஸ்வாமீ! நான் தேவரீருக்குத் தோற்றேன், இப்படிப்பட்ட பாகவதோத்தமரை ஸேவித்ததினால் எனக்கின்றையதினம் ஸுதிநமாயிற்று; தேவரீருடைய ப்ரபாவத்தை ஸரஸ்வதி ப்ருஹஸ்பத்யாதிகளும் வர்ணிக்கச் சக்தரல்லர். இனி எனக்கு நியமநம் ஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்து நியமநம் பெற்றுக்கொண்டு ஸ்வஸ்தாநத்தையடைந்தான்.

அநந்தரம் சிலகாலங்கழித்து ரஸவாதத்தில் ஸமர்த்தனான கொங்கண ஸித்தனொருவன், ஆழ்வார் ப்ரபாவத்தைக்கேட்டு இவரை ஸேவிக்கவேணுமென்று வந்து, ஓ ஸ்வாமீ! இந்த ரஸகுளிகையைத் திருவுள்ளம்பற்றி ஜாக்ரதையாய் வைத்துக்கொண்டருளவேணும்; இதனால் இரும்பு பொன்னாகுமென்று சொல்லி ஒரு ரஸகுளிகையைக்கொடுக்க, ஆழ்வார், ஓ ஸித்தனே! அதப்படியிருக்கட்டும்; இந்த குளிகையை நீ வாங்கிப்பார்; இதனால் கல் தங்கமாகிறது என்றுசொல்லி தம் திருமேனியிலிருந்து அழுக்கைத்திரட்டி

http://acharya.org

உருண்டையாக்கிக்கொடுக்க, ஸித்தன் அதைவாங்கிக்கொண்டுபோய் ஒருமலைமேல் தடவ அம்மலை அப்போது பொன்மலையாய் மேருபர்வதம்போல விளங்கிநிற்பதைக்கண்டு ஆஶ்சர்யப்பட்டு ஆழ்வாரைக்கொண்டாடி க்ருதார்த்தனாய்த் தன் தேசத்திற்குச்சென்றான்.

பின்பு சிலகாலம் ஆழ்வார் யோகாப்யாஸ நிஷ்டராய் ஒரு குஹையிலெழுந்தருளியிருக்கும்போது ஒருநாள் பொய்கைபூதம் பேயாழ்வார்கள் அவ்வழியாயெழுந்தருளி திருமழிசைப்பிரானுடைய தேதீப்யமானமான திவ்யதேஜஸ்ஸைக்கண்டு அந்த குஹைக்குள்ளெழுந்தருள, திருமழிசைப்பிரான் எதிர்கொண்டுவந்து தண்டம் ஸமர்ப்பித்து அர்க்யபாத்யாத்யாஸநாந்தமான உபசாரங்களை ஸமர்ப்பித்து குசலப்ரஶ்நம்பண்ணினார். அப்போது முதலாழ்வார்களு மிவரும் பரஸ்பரம் பாகவதஸமாவேசத்தினால் ஸந்துஷ்டராய், பகவதநுபவம் பண்ணிக்கொண்டு ஏகமேயெழுந்தருளியிருந்தார்கள். சிறிதுகாலங்கழித்து முதலாழ்வார்கள் இவரிடத்தில் நியமநம்பெற்றுக்கொண்டு லோகஸஞ்சாரார்த்தமாக எழுந்தருளினார்கள்.

பின்பு திருமழிசைப்பிரான் தம்முடைய அவதாரஸ்தலமான திருமழிசைக்கெழுந்தருளினார். அங்கு அநுஷ்டாநத்துக்குத்திருமண் காப்பகப்படாமல் சிந்தாக்ராந்தரா யெழுந்தருளியிருக்கையில், திருவேங்கடமுடையானெழுந்தருளி திருமண் பெருமாள் கோயிலிலிருக்கிறது, அதைப் பரிக்ரஹியுமென்று ஸாதிக்க, பெருமாள்கோயிலுக்கெழுந்தருளி திருமண்காப்பையெடுத்துக்கொண்டுவந்து அநுஷ்டாநம் செய்துகொண்டெழுந்தருளியிருந்தார்.

அநந்தரம் சிலகாலம்கழித்துப் பெருமாள்கோயிலில் யதோக்தகாரியை ஸேவித்துக்கொண்டு பொய்கைப்புஷ்கரிணிக்கரையில் யோகாப்யாஸம் செய்துகொண்டு அங்கு எழுநூறு ஸம்வத்ஸரமெழுந்தருளியிருந்தார். அப்போது கணிகண்ணன் ஆழ்வாரையாஶ்ரயித்துப் பரமபாகவதரா யெழுந்தருளியிருந்தார். அங்கொருகிழவி ஆழ்வார் யோகாப்யாஸம்செய்யும் தேசத்தை ப்ரதிதிநம் ஸ்தல சுத்திசெய்துகொண்டிருக்க, அவளிடத்தில் ஆழ்வார் ப்ரஸந்நராய், உனக்கு வேண்டும்வரம் கேட்டுக்கொள்ளென் றருளிச்செய்ய, அந்தக்கிழவி, எனக்கு யௌவநம் வேணுமென்று ப்ரார்த்திக்க, அப்படியே நீ யுவதியாகக்கடவாயென்று ஆழ்வார் அநுக்ரஹித்தார். அவள் அப்போதே யுவதியாய் அப்ஸரஸ்த்ரீபோல் அதி ஸுந்தரியாயிருந்தாள். ஒருநாள் அத்தேசாதிபதியான பல்லவராயனென்பவன் அவ்வழியாய்ப் போம்

http://acharya.org

போது இவளைப்பார்த்து மோஹித்து இவளை காந்தர்வவிவாஹஞ்செய்துகொண்டு தனக்குப் பட்டமஹிஷியாக்கித் தன்னுடையஸகலைஶ்வர்யங்களையும் அவளதீநமாக்கி ஸுகமநுபவித்துக்கொண்டிருந்தான்.

பின்பு பல்லவராயன் நாள்தோறும்தலைக்குண்டானகிழத்தனத்தையும் தன் பட்டமஹிஷிக்குண்டான நவயௌவநத்தையும்பார்த்து இதுக்கென்னகாரணமென்று தன் மஹிஷியைக்கேட்க, அவள், திருமழிசைப்பிரான் ப்ரஸாதத்தினால் எனக்கு யௌவநம் நித்யமாய் வ்ருத்தியடைகிறதென்றுசொல்ல, அதைக்கேட்டு, ஆனால் ஆழ்வாரையழைத்துக்கொண்டுவந்து என்னையு மப்படியே கடாக்ஷிக்கும்படி நீ செய்யவேணுமென்று பல்லவராயன்சொல்ல, அவர் இங்கெழுந்தருளமாட்டார்; அவர் ப்ரியசிஷ்யரான கணிகண்ணனை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருகிறேனென்றுசொல்லிக் கணிகண்ணனையழைத்துக்கொண்டுவந்தாள். ராஜா அவரைப்பார்த்து, உம்முடைய ஆசார்யரான ஆழ்வாரை இங்கெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரவேணுமென்று ப்ரார்த்திக்க, அதுக்கு, ஆழ்வார் இங்கெழுந்தருளமாட்டாரென்று கணிகண்ணன் ஸாதித்ததைக்கேட்டுக் கலக்கமுற்றிருந்தான். அங்குள்ளார், இந்தக் கணிகண்ணர் உன்விஷயமாக ஒரு கவிபாடினால் அதுஸபலமாகுமாகையால்உன் அபீஷ்டத்தைஇவரைக்கொண்டு பாடுவித்துக்கொள்ளென்றுசொல்ல, ராஜாவும் கணிகண்ணனைத் தன்விஷயமாக ஒரு கவிசொல்லவேணுமென்று பகுவிதமாக ப்ரார்த்தித்தாலும், நான் மநுஷ்யனைக் கவிபாடமாட்டேனென்று ஒரேபிடியாய்க் கணிகண்ணன் சொன்னதைக்கேட்டு, ஆனால் ராஜபக்தியில்லாத நீர் என்தேசத்தி லிருக்கவேண்டாமென்று சொன்னான். கணிகண்ணன்இந்த வ்ருத்தாந்தத்தை ஆழ்வாருடன் விண்ணப்பம்செய்ய, ஆழ்வாரும், நீர் போனபின் நமக்கிங்கென்ன ப்ரயோஜநம்? நான் உம்முடனே வருகிறேனென்றுசொல்லி எழுந்திருந்து இதுகளைப் பெருமாளிடம் விண்ணப்பஞ்செய்து தேவரீரும் என்னுடனே எழுந்தருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய,உம்மைப்பிரிந்த நமக்கும்இங்கொருகாரியமுமில்லை; நான்உம்முடனேகூட வருகிறேனென்று திருவநந்தாழ்வானாகிற தன் படுக்கையைச் சுற்றிக்கொண்டு பெருமான்புறப்பட, அதைக்கண்டு மற்ற எம்பெருமான்களும், இதரமான தேவதாந்தரங்களும், அவரவர்கள் பக்தஜநங்களும் புறப்பட்டு காஞ்சிநகரத்திற் கொருக்ரோசம் வெளியில்போய்விட்டார்கள். அப்போது நகரம் அழகழிந்து இருள்மூடிப்போக, பல்லவராயன்

http://acharya.org

அப்பொழுது மந்த்ரிகளைத் திரட்டி இந்த அநிஷ்டத்துக்கென்ன ஹேதுவென்று விசாரித்து, பெருமாளிடத்தி லபசாரப்பட்டோமென்று நிஶ்சயித்து பஶ்சாத்தாபத்துடன்போய், யதோக்தகாரியைத் தன் பட்டணத்துக் கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, அவர், ஆழ்வாரெழுந்தருளினால் வருகிறேனென்ன, ஆழ்வாரைப் ப்ரார்த்திக்க, ஆழ்வாரும், நம் கணிகண்ணன் வந்தால் வருகிறேனென்ன, பல்லவராயன் கணிகண்ணன் திருவடிகளில் விழுந்து அபராதக்ஷாபணம்பண்ணிக்கொண்டு பட்டணத்துக் கெழுந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க, கணிகண்ணனு மவனிடத்தில் ப்ரஸந்நராய் பட்டணத்துக்கெழுந்தருள அவருடன்கூட ஆழ்வாரும் யதோக்தகாரியும் மற்ற எம்பெருமான்களும் தேவதாந்தரங்களும் அவரவர்கள் பக்தஜநங்களுமாகக் காஞ்சீநகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அந்நகரமும் இருள்நீங்கி முன்போலவே சோபாயமாநமா யிருந்தது. பல்லவராயனும் பாகவத ப்ரபாவத்தைக் கண்டு ஆஶ்சர்யப்பட்டு ஆழ்வாரை யாஶ்ரயித்து ஜந்மத்தைக் க்ருதார்த்தமாக்கினன். ஆழ்வார் எம்பெருமானிடத்திற் கெழுந்தருளி, தேவரீர் பக்தபராதீநராய் அடியேன் விண்ணப்பம் செய்தபடி செய்தருளிற்றுகையால் இதுமுதல் தேவரீர் யதோக்தகாரி, சொன்னவண்ணம் செய்த பெருமாளென்று திருநாமம் சாத்தியருளவேணுமென்று ப்ரார்த்திக்க ஶ்ரிய꞉பதியும் அதுமுதல் அத்திருநாமத்தைத் திருவுள்ளம் பற்றினன்.

சிலகாலமங்கே யெழுந்தருளியிருந்து பின்பு திருக்குடந்தைக் கெழுந்தருள வேணுமென்று திருவுள்ளம்பற்றி யெழுந்தருளும் போது நடுவழியிலொருநாள் மஹாவ்யாக்ரபுரத்திற் கெழுந்தருளினர். அங்கு வேதாத்யயநம் செய்துகொண்டிருந்த சிலப்ராஹ்மணர்கள் ஆழ்வாரைக்கண்டு சூத்ரர் ஸமீபத்தில் வேதாத்யயநம் செய்யக்கூடாதென்று நிறுத்திவிட்டார்கள். ஆழ்வார் இவர்களத்யயநத்திற்கு விரோதம் வேண்டாமென்று தாமப்புறமெழுந்தருளினர். அந்த பாகவதாபசாரத்தினு லவர்களுக்குமேல் அத்யயநம் செய்யவேண்டிய வாக்யம் மறந்துபோய்த் தடுமாறிக்கொண் டிருக்கையில், பரமதயாளுவான ஆழ்வார் மேல்வாக்யத்தி னர்த்தத்தை யவர்களறியும்படி ஒரு கறுப்புநெல்லை நகத்தினல் பிளந்து பொகட்டார். அப்போது (க) "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம் க்ருஷ்ணகலோபாகதி

(க) யஜுர்வேதம், க-காண்டம் கூ-அநுவாகம்.

http://acharya.org

ணா-க்ருஷ்ணநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிண்ணம் க்ருஷ்ணகூடாதகஷி ணா''என்கிற வாக்யம் ப்ராஹ்மணர்களுக்கு ஜ்ஞாபகம் வந்தது, அவர்கள் ஆழ்வாருடைய ஜ்ஞாநவைபவத்தைக்கண்டு ஆஸ்சர்யப்பட்டு ஆழ்வாரை பஹுவிதமாகவாராதித்தார்கள். இதனால், சூத்ரரெவ்வளவு பாகவதர்களானாலும் வேதார்த்த மறியலாமத்தனையொழிய வேத வாக்யத்தை யுச்சரிக்கக்கூடாதென்றும், அக்ரவர்ணஸ்தர்கள் அந்த பாகவதர்களை நிந்திக்கக்கூடாதென்றும் ஆழ்வார் தம்மநுஷ்டாநத்தினால் ப்ரகாசிப்பித்தருளினார்.

பின்பு ஆழ்வார் அந்தக்ராமத்தில் உஞ்சவ்ருத்திசெய்துகொண்டு வீதிகள்தோறு மெழுந்தருளிக்கொண்டிருக்கும்போது அவ்வூர் கோயிலிலெழுந்தருளியிருக்கிற பெருமாள் ஆழ்வாரெழுந்தருளுமவ்வவ் வீதிகளுக்கெதிர்முகமாகத் திரும்பிக்கொண்டிருந்தார். இதை அர்ச்சகர் கண்டுசிலருடன் சொல்ல,அவர்கள் வந்து யஜ்ஞவாடத்தில்ப்ராஹ்மண ஸமூஹத்தில்சொல்ல,எல்லாருமெழுந்து போய்ப்பார்த்து யதார்த்தமென்று நம்பினார்கள். அவ்வளவில் யஜ்ஞத்துக்கு யஜமாநன் ஆழ்வார் ஸந்நிதிக்குப்போய்த்தன் யஞ்ஜவாடத்துக் கெழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித் தெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து ப்ராஹ்மணோத்தமர் நிறைந்திருக்கும் ஸபாமண்டபத்தி லக்ராஸநத்திலெழுந்தருளப்பண்ணி அக்ரபூஜை பண்ணினான். யாகம் செய்விக்கும் ருத்விக்குக்களு மத்வர்யுக்களு மதைப்பொறாமல் கோபித்துக்கொண்டு, ப்ராஹ்மணோத்தமரான எங்களை யநாதரித்து முதலில் சூத்ரனைப் பூஜித்த உனக்கு யாகம் நஷ்டமாய் விட்டதே. ப்ராஹ்மணாவமாநம் செய்த இந்த அந்யாயமெங்காவது நடக்குமா? என்று அவர்கள் வாய்க்கு வந்தபடி பருஷோக்திகளைச் சொல்லி யஜமாநனைக் கலங்கப்பண்ணினார்கள். யஜமாநன் பாகவத வைபவமறிந்த மஹாநுபாவனானதால் ஆழ்வார் ஸந்நிதிக்குவந்து விநீதனாய்நின்று, ஓஸ்வாமீ! இந்த மூர்க்கர்களுடைய பருஷோக்தி கர்ணகடோரமா யிருக்கிறது; ஸஹிக்கக்கூடவில்லை; தேவரீர் ப்ரபாவத்தை மறைத்துக்கொண்டெழுந்தருளி யிருக்க இது ஸமயமன்று; தேவரீர் ப்ரபாவத்தைக் கொஞ்சம் வெளியிடவேணுமென்று ப்ரார்த்திக்க ஆழ்வாரவனிடத்தி லநுக்ரஹம்பண்ணி ஸ்ரீயஃபதியை த்யாநித்தார். ஸ்ரீயஃபதியும் போது ஆழ்வார் திருமுடியில் சேஷசாயியாய், சங்கசக்ரதரனாய், பூர்ணசந்த்ரநிபாநநனாய், நீலமேக ஸ்யாமனாய், பீதாம்பரதரனாய் வந்தெழுந்தருளி நிற்க, ஆழ்வார் திருவடிகளி லபசாரப்பட்டவர்களெல்லா

http://acharya.org

ரும்பார்த்து ஆஶ்சர்யமடைந்து பயப்பட்டு ஆழ்வாருடைய ஸ்ரீபாதத்தையாஶ்ரயித்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு பஹுமுகமாக ஸ்தோத்ரம்பண்ண ஆழ்வார் அவர்களுக்கு விசேஷார்த்தங்களை யுபதேசித்து க்ருதார்த்தராக்கினார்.

பின்பு ஆழ்வார் அங்கிருந்து திருக்குடந்தைக் கெழுந்தருளி பள்ளிகொண்டிருந்த ஆராவமுதாழ்வாரை ஸேவித்து அவர் விஷயமாக (க)“நடந்தகால்கள் நொந்தவோ” என்கிற பாசுரத்தை விண்ணப்பம் செய்ய ஆராவமுதனும் அந்த பரமபோக்யமான பாசுரத்தைத் திருச்செவிசாத்தி எழுந்திருக்க(உ)“வாழிகேசனே” என்று எழுந்திருக்கவேண்டா, அப்படியேயெழுந்தருளியிருக்க வேணுமென்று ஆழ்வார் விண்ணப்பம் செய்ய, அதுமுதல்திருப்பள்ளியிலிருந்தெழுந்திருப்பதுபோலவே இப்போதும் ஸேவை ஸாதித்துக்கொண்டிருக்கிறார். அதுமுதல் ஆராவமுதனுக்கு உத்தானசயனனென்று திருநாமமாயிற்று. ஸமஸ்தபாபஹரமான திருக்குடந்தையில் இரண்டாயிரத்து முந்நூறு ஸம்வத்ஸரம் ஆராவமுதனை ஸேவித்துக்கொண்டு தர்சநப்ரவர்த்தநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்து அந்த திவ்யதேசத்திலேயே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

திருமழிசைப்பிரானுடைய பரமபாவநமான இந்த சித்ரசரித்ரத்தை பக்தியுக்தராய்க்கேட்கும் மஹானுபாவரும் வாசிக்கும் பாகவதர்களும் எழுதும் மஹான்களும் ஐஹிகத்தில் ஆயுராரோக்ய ஐஶ்வர்ய ஸத்ஸந்தாநாதி பலங்களை யடைந்து, சரீரபாதாநந்தரம் ஸ்ரீவைகுண்டத்தை யடைந்து நித்யஸூரிகளோடு கலந்து நித்யகைங்கர்ய நிரதராய் அபரிச்சிந்நாநந்த யுக்தராயிருப்பார்கள். இந்த ப்ரபாவம் யதாமதி ஸங்க்ரஹமாக எழுதப்பட்டதாகையால் பக்திஸாரபதாம்போஜ பக்தராஜஹம்ஸர் இதில் நீரைவிட்டுப் பாலையே கொள்வார்களென்று ப்ரார்த்திக்கிறேன்.

(க) திருச்சந்தவிருத்தம்-௬௧. (உ) திருச்சந்தவிருத்தம்-௬௧.

http://acharya.org

இவர் திருநக்ஷத்ரதனியன்.

மகாயாம் மகரே மாஸி சக்ராம்ஸம் பார்க்கவோத்பவம் ।
மஹீஸாரபுராதீசம் பக்திஸாரமஹம் பஜே ॥

மகாயாம்மகரேமாஸி சக்ராம்சம்பார்க்கவோத்பவம்
மஹீஸாரபுராதீசம் பக்திஸாரமஹம்பஜே

இவர் தனியன்.

சக்திபஞ்சமயவிக்ரஹாத்மநே சுக்திஹாரஜிதசித்தஹாரிணே ।
முக்திதாயகமுராரிபாதயோர் பக்திஸாரமுநயே நமோ நம: ॥

சக்திபஞ்சமயவிக்ரஹாத்மநே சுக்திஹாரஜிதசித்தஹாரிணே
முத்திதாயகமுராரிபாதயோர் பக்திஸாரமுநயேநமோநம:

வாழி திருநாமம்.

அன்புடனந்தாதி தொண்ணூற்று றுரைத்தான் வாழியே
அழகாரும் திருமழிசையமர்ந்த செல்வன் வாழியே
இன்பமிகு தையின்மகத் திங்குதித்தான் வாழியே
எழிற்சந்த விருத்தம்நூற் றிருபதீந்தான் வாழியே
முன்புகத்தில் வந்துதித்த முனிவனார் வாழியே
முழுப்பெருக்கில் பொன்னியெதிர் மிதந்தசொல்லோன் வாழி
நன்புவியில் நாலாயிரத்து முந்நூற்றுன் வாழியே [யே
நங்கள்பக்தி சாரரிரு நற்பதங்கள் வாழியே.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

இப்படிக்கு,
ஸபாபண்டிதர் தர்க்கதீர்த்தர் ராமாநுஜாசாரியார்.

http://acharya.org

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

இயற்பா

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

நான்முகன் திருவந்தாதி,

தனியன் வ்யாக்யாநம்.

அவதாரிகை.— (நாராயணன் படைத்தா னித்யாதி) ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஸ்மாத் பரத்வத்தை ஸாதித்த பக்திஸாரருடைய ஸ்ரீஸூக்தியான திவ்ய ப்ரபந்தத்தை யநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி மநஸ்ஸே! பக்திஸார க்ஷேத்ராதிபதியானவர் ஸ்ரீபாதங்களையே ஸ்தோத்ரம் பண்ணென்கிறது.

ஸ்ரீராமப்பிள்ளை யருளிச்செய்த தனியன்.

நாராயணன்படைத்தான் நான்முகனை, நான்முகனுக்கு
ஏரார்சிவன்பிறந்தானென்னும்சொல்—சீரார்
மொழிசெப்பிவாழலாம் நெஞ்சமே, மொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து.

அந்வயம்.— நாராயணன் நான்முகனை படைத்தான். நான்முகனுக்கு ஏர் (5) ஆர் சிவன் பிறந்தான் என்னும் சொல் (15) சீர் ஆர் மொழி செப்பி வாழலாம் (15) நெஞ்சமே! மொய் பூ மழிசைப் பரன் அடியே (25) வாழ்த்து. (21)

அர்த்தம்.— ஸ்ரீமந்நாராயணன் நான்குமுகங்களையுடையப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான். ப்ரஹ்மாவுக்கு ஸாதநாநுஷ்டாநத்தினால் (ரு) பூர்ணனான ருத்ரன் பிறந்தான்; என்கிற வர்த்தத்தை ப்ரதிபாதிக்குமதாய் (க0) கல்யாணகுணங்களினால் நிறைந்த ப்ரபந்தத்தை யநுஸந்தித்து உஜ்ஜீவிக்கலாம். (கரு) நெஞ்சே! அழகிய பூக்களையுடைய திருமழிசைப்பிரானுடைய திருவடிகளையே (உ0) மங்களாசாஸநம்பண்ணு. (உக)

http://acharya.org

வ்யாக்யாநம் —(நாராயணன்படைத்தான்நான்முகனை)(க)"ஏகோ ஹ வை நாராயண ஆஸீந் ந ப்ரஹ்மா நேஸாந:-ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மாநேசாந:" என்றும்,(உ)"நாராயண பரோஜ்யோதி:-நாராயண பரோஜ்யோதி:" என்றும்,(ங)"நாராயணே ப்ரலீயந்தே-நாராயணேப்ரலீயந்தே" என்றும்,(ச)"ஏகஸ்திஷ்டதி விஸ்வாத்மா ஸ ச நாராயண: ப்ரபு:-ஏகஸ்திஷ்டதி விஸ்வாத்மாஸ சநாராயண:ப்ரபு:" என்றும்(ரு) "ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம்-ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம்" என்று தொடங்கி,(சா)ஏக ஏவ ஜநார்த்தந:-ஏக ஏவ ஜநார்த்தந:" என்றும்,(எ)"ஏக ஏவ ஜகத்ஸ்வாமீ ஸக்திமாநவ்யய: ப்ரபு:-ஏகஏவஜகத்ஸ்வாமீ சக்திமாநவ்யய:ப்ரபு:" என்றும் அவரவர்கள் ஸர்வேஸ்வரனாலே ஸம்ஹார்யரென்றும்,(அ)"யந்நாபிபத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதி:-யந்நாபிபத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதி:"(கூ)"நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே। நாராயணாத் ருத்ரோ ஜாயதே-நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே। நாராயணாத்ருத்ரோ ஜாயதே" (க0) "விரூபாக்ஷாய ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய ஸ்ரேஷ்டாய-விரூபாக்ஷாய ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய ஸ்ரேஷ்டாய" என்றும்"(கக)"ப்ரஹ்மணஸ்சாபி ஸம்பூதச்சிவ இத்யவதார்யதாம்-ப்ரஹ்மணஸ்சாபிஸம் பூதச்சிவ இத்யவதார்யதாம்" என்றும்அவரவர்கள் எம்பெருமானாலே ஸ்ருஜ்யரென்றும் சொல்லப்படுகிற வேதார்த்தங்களை ஸர்வாதிகாரமாம்படி "நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான்படைத்தான், யான்முகமா யந்தாதி மேலிட்டறிவித்தே னாழ்பொருளைச் சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து" என்று உபக்ரமித்து "இனியறிந்தேன்" என்று தலைக்கட்டிலும் "நற்கிரிசை நாரணன் நீ" என்றிறே அருளிச்செய்தது. அத்தையாயிற்று "நாராயணன் படைத்தான் நான்முகனை நான்முகனுக்கோர் சிவன்பிறந்தானென்னும் சொல்" என்கிறது. என்னும் என்று வேதாந்த ப்ரஸித்தி தோற்றச்சொல்லுகிறது.

(க) மஹோபநிஷத். (உ) தைத்திரீயம்-நாராயணஸூக்தம்.
(ங) ருக்வேதம், நாராயணோபநிஷத். (ச) பாரதம், அநுஸ்ம்ருதி.
(ரு) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-க-உ-சாசா. (சா) ஸ்ரீவிஷ்ணுபுராணம், க-உ-சாசா.
(எ) (அ) (கூ) ருக்வேதம், நாராயணோபநிஷத்.
(க0) ஸாமவேதம்-சாந்தோக்யம். (கக)

http://acharya.org

சொல் சீரார் மொழியாவது-தமிழுக்கவயவமாகச் சொல்லுகிற சொற் சீர்களாலே ஆர்ந்த மொழியென்னுதல், என்னும் சொல்லென்று சொல்லப்படுவதுமாய் சீரார்மொழி யென்று (௧) "சீர்கலந்த சொல்" என்கிறபடியே கல்யாண குணப்ரசுரமான மொழியென்னுதல். (மொழிசெப்பி) ஏவம்விதமான நான்முகன் திருவந்தாதி ப்ரபந்தத்தை யநுஸந்தித்து. (வாழலாம்) உஜ்ஜீவிக்கலாம். (நெஞ்சே) மநஸ்ஸே! நீ ஸஹகரிக்கவேணும்.

அதாவது— (மொய்பூ மழிசைப்பரனடியே வாழ்த்து) ப்ரபந்த வக்தாவான திருமழிசை யாழ்வார் திருவடிகளையே ஸ்தோத்ரம் பண்ணு. (௨) "இடம்கொண்ட கீர்த்தி மழிசைக் கிறைவன் இணையடிப்போது" என்னும்படி நிரதிசய போக்யமா யிருக்கிற இத்தையே விரும்பிப்போரு. மொய் பூ என்று செறிந்த பூவென்னுதல், அழகிய பூவென்னுதல். அன்றிக்கே, பூ என்று அழகாகவுமாம். அப்போது மிக்கவழகு என்றபடி.

மொய் பூ என்று-மழிசைக்கு விசேஷணமாதல், திருவடிகளுக்கு விசேஷணமாதல்.*படிக்கு விசேஷணமாதல், அடிக்கு விசேஷணமாதல். இப்படி வைலக்ஷண்யத்தையுடைய திருமழிசை யாழ்வார் திருவடிகளையே மங்களாசாஸநம் பண்ணு, என்கிறது. அவர் (௩) "வாழிகேசனே" என்றும், (௪) "மாலை வாழ்த்திவாழ்மினோ" என்றும் பகவத்விஷயமங்களா சாஸந ப்ரசம்ஸை பண்ணினாலும், நீ ஆழ்வாரடி விடாமல் மங்களாசாஸநம் பண்ணென்கிறது.

நான்முகன் திருவந்தாதி தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர்திருவடிகளேசரணம்,

---

(௧) பெரியதிருவந்தாதி-௮௬.
(௨) இராமாநுசநூற்றந்தாதி-௧௨. * படிக்கு-தேசத்துக்கு.
(௩) திருச்சந்த விருத்தம், ௬௧. (௪) திருச்சந்த விருத்தம்-௬௮.

http://acharya.org

ஸ்ரீ ரஸ்து.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த

நான்முகன் திருவந்தாதி வ்யாக்யாநம்.

அவதாரிகை.—முதலாழ்வார்கள் அநுபாவ்யவஸ்துவை நிஷ்கர்ஷிக்க அதுக்குக் களைபிடுங்குகிறார். க்ஷேத்ரஜ்ஞர்பக்கலிலே ஈஸ்வரத்வ புத்தியைப்பண்ணி அநர்த்தப்படுகிற ஸம்ஸாரிகளுக்கு ஈஸ்வரனுடைய பரத்வத்தை உபபாதித்து அவர்கள் அநீஸ்வரரென்கிறார்.

நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும்
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான்-யான்முக
அந்தாதிமேலிட் டறிவித்தே னாழ்பொருளைச் [மாய்
சிந்தாமற் கொள்மினீர் தேர்ந்து. க.

அந்.— நாராயணன் நான்முகனை படைத்தான். நான் முகனும் தான் (5) முகமாய் சங்கரனை படைத்தான். யான் முகமாய் (10) ஆழ் பொருளை அந்தாதிமேலிட்டு அறிவித்தேன். நீர் தேர்ந்து (15) சிந்தாமல் கொண்மினீர். (17)

அர்.—ஸ்ரீமந்நாராயணன் சதுர்முக ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான். ப்ரஹ்மாவும் தானே (ரு) ப்ரதாநனாய்க்கொண்டு ருத்ரனை ஸ்ருஷ்டித்தான். நான ப்ரதாநனாய்க்கொண்டு (க0) (இந்த) கம்பீரமான வர்த்தத்தைத் திருவந்தாதியென்கிறப்ரபந்தத்தில்வைத்து உபதேசித்தேன், நீங்களாராய்ந்து (கரு) (இவ்வர்த்தத்தை) நழுவாமல் (மனதில்) வையுங்கோள். (கஎ)

வ்யா.— அவ.— முதற்பாட்டு.— ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநரானாற்போலே தந்நிவ்ருத்திக்கு ப்ரதாநனானேன் நானென்கிறார்.

http://acharya.org

(நான்முகனை நாராயணன்படைத்தான்) ஸர்வேஶ்வரன் ஸ்ருஷ்டிக் குபகரணமாக நாலுமுகத்தையுடைய ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தான். (நான்முகனும் தான்முகமாய்) பின்பு ப்ரஹ்மாவுந் தானே ப்ரதாநனாய் ருத்ரனை ஸ்ருஷ்டித்தான். (யான்முகமாயித் யாதி) இப்படி துரவகாஹமானபொருளை நானே யநுபவித்துப் போகில் ஸம்ஸாரிக ளநர்த்தப்படுவரேயென்று செம்பிலும் கல்லிலும் வெட்டுமாபோலே ப்ரபந்தத்திலே யிட்டிதுக்கு ப்ரதாநனாயறிவித்தேன். ஆழ்பொருளையென்று நசிக்கிறபொருளை யென்றுமாம். (நீர் தேர்ந்து சிந்தாமற்கொள்மின்) ஸம்ஸாரத்தினுடைய தண்மையையும் நான்சொன்ன வர்த்தத்தினுடைய வருமையையுமுணர்ந்து இவ்வர்த்தம் மங்காமல் புத்திபண்ணுங்கோள். க.

அரும்பதவிளக்கம்.— முதற்பாட்டு.— ஸம்ஸாரத்தையுண்டாக்கித் ததநுகுணமானப்ரயோஜநங்களையுங் கொடுத்து ஸம்ஸாரத்தைப் ப்ரவர்த்திப்பிக்கையாலே ப்ரதாநரென்கிறது. பரத்வநிர்ணயம்பண்ணி மோக்ஷோபாயத்தை யுபதேசிக்கையாலே நிவ்ருத்திப்ரதாந ரென்கிறது. ப்ரஹ்மாதிகளைப் பரத்வசங்கைபண்ணிப் பற்றுகை நசிக்கிற பொருள். க.

தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பர்,
ஆரு மறியா ரவன்பெருமை,— ஓரும்
பொருள்முடிவு மித்தனையே யெத்தவம்செய் தார்க்கும்,
அருள்முடிவ தாழியான் பால். உ.

அந்.—தேருங்கால் தேவன் ஒருவனேயென்று உரைப்பர். அவன்பெருமை (5) ஆரும் அறியார். ஓரும் பொருள் முடிவும் (10) இத்தனையே. எத்தவம் செய்தார்க்கும் ஆழியான்பால் அருள்முடிவது. (15)

அர்.— விசாரித்தால் தேவனென்பவன் (ஸ்ரீமந்நாராயணன்) ஒருவனேயென்று (வ்யாஸாதிகள்) சொல்லுவர்கள். அந்நாராயணனுடையமஹிமையை (டு) யொருவரு மறியார்கள். (ஶ்ருதிஸ்ம்ருத்யாதிகளில்) ப்ரதிபாதிக்கப்பட்ட பரதத்வவஸ்துவின் பர்யவஸாநமு (கு0) மிவ்வளவே. எவ்விதமான தபஸ்ஸை யநுஷ்டித்தவர்களுக்கும் சக்ரதரன்பக்கலுண்டான (க்ருபையினால்தான்) அந்ததபஸ்ஸின்பலம் (பெறும்படி) முடியும். (கரு)

http://acharya.org

வ்யா.—இரண்டாம்பாட்டு.—(தேருங்காலித்யாதி) (க)"தத்வஜிஜ்ஞாஸமானாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோமுகை: | தத்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயண: ஸ்ம்ருத:" - தத்வம்ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோமுகை: | தத்வமேகோ மஹாயோகி ஹரிர்நாராயண ஸ்ம்ருத:" என்னும்படியே விசாரிக்கும்போது ஸர்வேஸ்வரனொருத்தனேயென்று சொல்லுவர்கள். (ஆருமறியாரவன்பெருமை) ஒருத்தருமவனுடைய பெருமையைப் பரிச்சேதிக்கவறியார்கள். (ஓரும்பொருள் முடிவுமித்தனையே)ஶ்ருதிஸ்ம்ருதிகளெங்குமாராயுமர்த்தத்தினுடைய நிர்ணயமிவ்வளவே. (எத்தவமித்யாதி) எல்லாஸாதநாநுஷ்டாநம் பண்ணினவர்களுக்கும் அவற்றுக்கும் பலம் ஸர்வேஶ்வரன் பக்கலில் நின்றுமென்கை.

உ.

அரு.— இரண்டாம்பாட்டு.— பலத்தைக்கொடுக்கை யருளின் கார்யமாகையாலே அருள்முடி வென்று பலத்தைச்சொல்லுகிறது.

பாலில்கிடந்ததுவும் பண்டரங்க மெய்ததுவும்,
ஆலில் துயின்றதுவு மாரறிவார்,—ஞாலத்
தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளை, அப்பில்
அருபொருளை யானறிந்தவாறு. ௩.

அந்.— ஞாலத்து ஒரு பொருளை வானவர்தம் மெய் (5) பொருளை அப்பில் அரு பொருளை, பண்டு (10) பாலில் கிடந்ததுவும் அரங்கம் எய்ததுவும் ஆலில் (15) துயின்றதுவும் யான் அறிந்தவாறு ஆர் அறிவார். (20)

அர்.— லீலாவிபூதிக் கத்விதீயமான காரணவஸ்துவும் நித்யஸூரிகளுக்கு யதார்த்தமாக (ப்ரத்யக்ஷமாக) (ரு) அநுபவிக்கத்தகுந்தவஸ்துவும், ப்ரளயார்ணவத்தில்சயனித்திருந்த நிருபமான மானவஸ்துவுமான ஸர்வேஶ்வரனையும், (அவன்) முன்பு (௧௦) திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருந்ததையும், ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டதையும், ஆலந்தளிரில் (கரு) கண்வளர்ந்ததையும் நா னறிந்த விதமாக வேறாரறிவார்கள்? (௨௦)

வ்யா.—அவ.— மூன்றாம்பாட்டு.—(பாலில்) வேறொருவரறியாரில்லை, நானேயென்றது - நானவன் காட்டக்கண்டே னாகையாலே யென்கிறார்.

(க)

(பாலில்கிடந்ததுவும்)அவதாரத்துக்குறுப்பாகத்திருப்பாற்கடலி லே கண்வளர்ந்ததுவும். (பண்டரங்கமெய்ததுவும்) அபேக்ஷிப்பாரின் றிக்கேயிருக்கக்கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளிற்றும். (ஆலில் துயின்றதுவுமாரறிவார்).(ஞாலத்தொருபொருளை)* கார்யாகாரமெல் லாமழிந்து (க) "ஸதேவ-ஸதேவ" என்று நிற்கிறவனை. (வானவர்தம் மெய்ப்பொருளை) நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யனு யுள்ளவனை. (அப் பிலருபொருளை) (உ) "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்று ஜலஸ்ருஷ்டியைப்பண்ணி யதிலே கண்வளர்ந்தருளு கிறவனை. (யானறிந்தவாறு) அவன் காட்டக்கண்ட நானறிந்தபடி ஸ்வயத்நத்தால் காண்பார்க்கறியப்போகாது. ௩.

ஆறு சடைக்கரந்தா னண்டர்கோன் றன்னோடும்,[ருவர்
கூறுடையனென்பதுவுங் கொள்கைத்தே,—வேறொ
இல்லாமை நின்றானை யெம்மானை, எப்பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன் தொகுத்து. ௪.

அந்.— ஆறு சடை கரந்தான் அண்டர்கோன்தன்னோடும் கூறுடையன் (5) என்பதுவும் கொள்கைத்தே? வேறொருவர் இல்லாமை நின்றானை (10) எப்பொருட்கும் சொல்லானை எம்மானை தொகுத்து சொன்னேன். (15)

அர்.— கங்காநதியைத் தன்சடையில் மறையச்செய்தருத்ரனும் அண்டாதிபதியான ஸர்வேஶ்வரனோடும் பாகமுடையவன் (ஸமானமான ஐஶ்வர்யமுடையன்) (ரு) என்னும்சொல்லை நம்பலாமா? வேறொருத்தர் (தனக்கொப்பு) இல்லாமல் எழுந்தருளி யிருக்கிறவனுவாய் (க0) ஸமஸ்தவஸ்துக்களுக்கும் வாசகங்களான ஸகலசப்தங்களுக்கு மர்த்தமாகப்ரதிபாதிக்கப்பட்டவனுமான என்ஸ்வாமியை ஸங்க்ரஹமாகச் சொன்னேன். (கரு)

வ்யா.—அவ—நாலாம்பாட்டு.— (ஆறு) தாமறிந்தபடியையுபபாதிக்கிறார்.

(ஆறித்யாதி) ஜடையிலே கங்கையைத்தரித்து ஸாதகனுனருத்ரன் ஸர்வசேஷியானவனோடொக்க சேஷித்வத்திலே கூறுடையனென்று இதுவும சேதநர்க்கு புத்திபண்ணப்படுமோ? (வேறித்யாதி) (க) "ஸஹம்ஸஸ்ரவஸ்ஜமதக ..." [illegible]

---

* கார்யகாரண மெலலாம். (க) சாந்தோக்யம். கு-உ.
(உ) மநுஸ்ம்ருதி. க-அ ௫. கீதை. எ-எ.

http://acharya.org

ந்ருஸிம்ஹவபுஷா ஸ்ரீமாந்- அஹம்ஸர்வஸ்யஜகதஃ ப்ரபவஃப்ரளயஸ்ததா-மத்தஃ பரதரம்நாந்யத்கிஞ்சிதஸ்திதநஞ்ஜய" என்னும்படி நின்றவனை. (எம்மானை) எனக்கு ஸ்வாமியானவனை. (எப்பொருட்கும் சொல்லானை) ஸர்வசப்த வாச்யனானவனை. எல்லாப்பொருளுக்கும் சொல்லவேண்டும்படி நின்றவனை யென்றுமாம்.(தொகுத்துச்சொன்னேன்). ௪.

அரு.— நாலாம்பாட்டு.— கொள்கைத்து-கொள்கை யுடைத்து. எப்பொருட்டும் சொல்லானை எல்லாப்பதார்த்தங்களுக்கும் தன்னைச் சொல்லும்படி. தொகுத்து - சுருக்கி. ௪.

தொகுத்தவரத்தனாய்த் தோலாதான்மார்வம்,
வகிர்த்த வளையுகிர்த்தோள்மாலே,—உகத்தில்
ஒருநான்றுநீயுயர்த்தி யுள்வாங்கிநீயே,
அருநான்குமானாயறி. ௫.

அந்.— தொகுத்த வரத்தனாய் தோலாதான் மார்வம் வகிர்த்த (5) வளை உகிர் தோள் மாலே! உகத்தில் (10) ஒருநான்று உள் வாங்கி நீயே உயர்த்தி நான்கும் (15) அரு ஆனாய் நீயே அறி (19)

அர்.— (தபஸ்ஸுபண்ணி) ஸம்பாதித்த வரத்தையுடையனாய், தோலாமலிருக்கிற ஹிரண்யகசிபுவினுடைய மார்பைப் பிளந்தும் (ரு) வளைந்துமிருக்கிற நகங்களையும் புஜங்களையுமுடையவனாய் (ப்ரஹ்லாதனிடத்தில்) வ்யாமோஹத்தைப்பண்ணினவனே! ஸ்ருஷ்டிகாலத்தில் (1o) ஒருநாள் ஸம்ஹரித்த நீயே ஸ்ருஷ்டித்து தேவ திர்யங் மனுஷ்ய ஸ்தாவரரூபமான நாலுக்கும் (கரு) அந்தர்யாமியாயானவனே (இதை) நீயே யறிந்தருளவேணும். (கக)

வ்யா.— ஐந்தாம்பாட்டு.— (தொகுத்தவித்யாதி) திரட்டினவரத்தை யுடையவனுகையாலே வரங்கொடுத்தவர்களுக்கும் தோலாத ஹிரண்யனுடைய மார்பைப்பிளந்து வளைந்த வுகிரையும் தோளையுமுடையையாய், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே வ்யாமுக்தனானவனே!(உள்வாங்கி நீயேயுகத்தி லொருநான்று நீயுயர்த்தி)ஜகத்தையை ஸம்ஹரித்த நீயே ஸ்ருஷ்டிகாலத்திலே (க) "ஸூதவமதஃ-ஆதயகதம்" என்னும்படி நிற்கிற. உயர்த்தியென்று-அவதரித்தியென்னவுமாம். (அருள் நான்குமானாய்)தேவதிர்யங் மநுஷ்ய ஸ்த்தாவராதிகளி

http://acharya.org

லே அந்தராத்மதயா ப்ரகாசித்துநின்ற. (நீயே அறி) இவ்வர்த்தம் வேறொருவ ரறிவாரில்லை, தேவரே அறிந்தருளவேணுமென்கை. ரு.

அரு.— ஐந்தாம்பாட்டு.— (உகத்தில்) உகக்கை - ஸ்ருஷ்டியாய், ஸ்ருஷ்டிகாலத்திலே உயர்த்தி (ஆதபகதம்) வெய்யிலானது எங்குமொக்க வ்யாபிக்குமாபோலே அந்தராத்மாவாக எங்கும் வ்யாபித்தாயென்றபடி. நான்கிலு மருவாய்நின்றாய். ரு.

அறியார்சமண ரயர்த்தார் பவுத்தர்,
சிறியார்சிவப்பட்டார் செப்பில்,—வெறியாய
மாயவனைமாலவனை மாதவனையேத்தாதார்,
ஈனவரே யாதலாலின்று. கூ.

அந்.— சமணர் அறியார். பவுத்தர் அயர்த்தார். சிவப்பட்டார் (5) சிறியார். செப்பில், வெறியாய மாயவனை மாலவனை (10.) மாதவனை ஏத்தாதார். ஆதலால் இன்று ஈனவரே. (15)

அர்.— ஜைநர் (உண்மையை) அறியவில்லை. பௌத்தர் (யதார்த்தமறியாமல்) ப்ரமித்தார்கள். சைவர் (ரு) (அறியத்தக்கவஸ்துவையறியாமல்) அற்பரானார்கள். (இவைகளை) சொல்லில், ஸர்வகந்தனாய் ஆஸ்சர்யசேஷ்டிதனாய் ஆஸ்ரிதவ்யாமுக்தனா யிருக்கிற (க0) ஸ்ரிய:பதியை (இவர்கள்) ஸ்தோத்ரம்செய்யார்கள். ஆகையால் (இவர்கள்) இப்போது ஹீநர்களே. (கரு)

வ்யா.— அவ.— ஆறும்பாட்டு.— (அறியார்)வேறொருத்தரறிவாரில்லையோ வென்ன, பாஹ்யகுத்ருஷ்டிகளால் அறியப்போமோ வென்கிறார்.

(அறியார்சமணர்)(க) "ஸ்யாதஸ்தி ஸ்யாந்நாஸ்தி" என்று அநேகாந்தமாகக் கொள்கையாலே ஆர்ஹதர் தத்வமுள்ளபடி யறியார். (அயர்த்தார் பவுத்தர்) ப்ரதிஸந்தாநம் பண்ணுகைக்கு ஓராறுபவிதாவைக் கொள்ளாமையாலும், ஜ்ஞாநத்தை க்ஷணிகமாகக் கொள்ளுகையாலும் பௌத்தரும்தத்வ ஜ்ஞாநத்தில் அறிவுகெட்டிருப்பார்கள். (சிவப்பட்டார் சிறியார்) ப்ரமாணத்தை யொருபடிகொண்டு ப்ரமேயத்தை யுள்ளபடி கொள்ளாமையாலே

(க) ஸ்ரீபாஷ்யம் உ - உ - கூ - பூர்வபக்ஷோபந்யாஸத்தில்.

http://acharya.org

ருத்ர ஸம்பந்திகளானவர்களுமெளியார்.(செப்பில்)இவர்களைப் பேசில்.(வெறியித்யாதி)நிரதிசய போக்யனாய் ஆஸ்சர்யபூதனாய் வ்யாமுக்தனாய் ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரனை.(ஏத்தாதாரினவரே) அவர்களேத்தாமையாலே தண்ணியரே. ஹீநரென்றும் அஹீநரென்றும் நான் ப்ரதிபாதிக்க வேணுமோவென்கிறார். ௬.

அரு.— ஆறாம்பாட்டு.— ப்ரதிஸந்தானம் - ப்ரத்யபிஜ்ஞை, க்ஷணிகமாகையாலே ப்ரத்யபிஜ்ஞை பண்ணப்போகாதென்றபடி. பிழை. ௬.

இன்றாக நாளையே யாக,இனிச்சிறிதும்
நின்றாக நின்னருளென்பாலதே;—நன்றாக
நானுன்னையன்றியிலேன் கண்டாய்;நாரணனே
நீயென்னையன்றியிலை· ௭.

அந்.— இன்று ஆக, நாளையே ஆக இனி சிறிது நின்று ஆக, (5) நின் அருள் என்பாலதே. நாரணனே நன்றாக (10) நான் உன்னையன்றி இலேன். நீ என்னையன்றி (15) இலை கண்டாய். (17).

அர்.— இன்றாகவுமாம், நாளையாகவுமாம், இன்னம் சிறிதுகாலம் கழித்தாகவுமாம். (௫) உன் க்ருபை யென்னிடத்தில் பூர்ணமாயிராநின்றது. ஸ்ரீமந்நாராயணா! அழகியதாக (௧௦) நான் உன்னை விட்டு வேறொருரக்ஷகரையுடையேனல்லேன். நீ யென்னைத் தவிர்த்துப் (௧௫) பரிபூர்ணனாகமாட்டாய். இதைப்பார்த்தருள வேணும். (௧௭).

வ்யா.— ஏழாம்பாட்டு.— (இன்றாகவித்யாதி) இன்றாகவுமாம், நாளையாகவுமாம், சிறிதுகாலம் கழித்தாகவுமாம்; காலவிளம்பமே உன்னுடைய ப்ரஸாதமென் பக்கலிலே.(நன்றாகவித்யாதி)காலவிளம்பமென்றுமென்பக்கலி லென்றுஞ் சொல்லிற்றெத்தாலே யென்னில், அகிஞ்சநனாக ஸம்ப்ரதிபந்நனானவெனக்குன்னை யொழிய வேறொரு அபாஸ்ரய மில்லாமையாலே. (நாரணனே நீயென்னையன்றியிலை.) பூர்ணனான உனக்கு அபூர்ணனான வென்னையொழிய அபாஸ்ரயமில்லை. உன்னுடைய சேஷித்வ ஸ்வரூபத்தாலும் என்னுடைய சேஷத்வ ஸ்வரூபத்தாலும் விடப்போகாது. ௭.

http://acharya.org

இலைதுணைமற்றென்னெஞ்சே யீசனைவென்ற,
சிலைகொண்ட செங்கண்மால்சேரா,—கொலைகொண்ட
ஈரைந்தலையா னிலங்கையையீடழித்த
கூரம்பனல்லால்குறை. அ.

அந்.— என்நெஞ்சே! ஈசனை வென்ற சிலை கொண்ட (5) செம் கண் மால் சேரா கொலைகொண்ட (10) ஈரைந்தலையான் இலங்கையைஈடழித்த கூர் அம்பனல்லால் (15 குறை துணை மற்று இல்லை. (19).

அர் — என்ஹ்ருதயமே! ருத்ரனை ஜயித்த தநுஸ்ஸைப் பிடித்த (ரு) சிவந்த திருக்கண்களையுடைய ஸர்வேச்வரனோடு பொருந்தாமல் மரணமடைந்த (கo) தசக்ரீவனுடைய இலங்கையையழியச்செய்த கூர்மையான வில்லையுடைய சக்ரவர்த்தித்திருமகனைவிட (கரு) குறையைத்தீர்க்கும்படியான ஸஹாயம் வேறொன்றில்லை (ககூ)

வ்யா.— அவ.—(இலைதுணை)புகையிலுண்டபனென்று கொண்டு சொல்லி யுன்னை யொழிய வேறொன்றறியேனென்கிற தென்னெனில், வேறுள்ளது கழுத்துக்கட்டி யாகையாலே யென்கிறார்.

(இலைதுணைமற்று) ஸர்வேஶ்வரன் துணையென்கை யன்று ஸாத்யம்; மற்றுள்ளார் துணையன்றென்கை. (என்னெஞ்சே) இவ்வர்த்தம் சொல்லுகைக்குப் பாங்கான நெஞ்சே! ஈசனையித்யாதி) வேறொருத்தர் துணையல்லவென்றது - வேறொரு பூர்ணரில்லாமையாலென்கிறது. ருத்ரனைவென்ற தநுஸ்ஸைப்பிடித்த புண்டரீகாக்ஷனை ஸர்வேஶ்வரன் வந்தவதரித்தவிடத்திலும் (க) "நநமேயம்" என்று (உ) "கொத்துத்தலைவன்" என்னும்படி பத்துத்தலையையுடைய ராவணனுடைய லங்கையை மூலையடியே வழிபோக்கினவம்பின் கூர்மையையுடைய சக்ரவர்த்தித்திருமகனை யொழியத் தம்முடைய குறையில் வேறொருவர் துணையில்லை. எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்தவர்கள் அசேதநமான க்ரியாகலாபத்தினுடைய கூர்மையை விஶ்வஸித்திருப்பர்கள், இவர்கள் சக்ரவர்த்தித் திருமகன் அம்பின் கூர்மையைத் தஞ்சமாக நினைத்திருப்பர்கள். அ.

(க) ஸ்ரீராமாயணம். யுத்தகாண்டம் கூகூ - கக.
(உ) பெரியாழ்வார் திருமொழி. க - கo - கூ.

http://acharya.org

அரு.— எட்டாம்பாட்டு.— (புகையில்) தெரியாது. ஆனாலும், புகையிலுண்பன் - நீ இத்தனை பொகட்டாலுண்பன்; இல்லாவிட்டால் பட்டினியேயென்னுமாபோலே. நீயொழிய வேறில்லை யென்கிறது-வேறு ரக்ஷகரில்லாமையாலே யென்றபடி. ஈசனை வெல்லுகை-தேவர்களெல்லாருங்கூடி பரதத்வ நிர்ணயம பண்ணுகைக்காக விஸ்வகர்மாவாலே இரண்டுவில்லையுண்டாக்கி இருவர்கையிலுங் கொடுக்க விஷ்ணு வில்லெடுத்தெய்ய உத்யோகித்த வுடனே ருத்ரன் வில்லுங் கையுமாக நடுங்கி விழுகையாலே வென்றதென்கிறது. அ.

குறைகொண்டுநான்முகன் குண்டிகைநீர்பெய்து,
மறைகொண்டமந்திரத்தால்வாழ்த்தி,—கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினான்,
அண்டத்தான்சேவடியை யாங்கு. கூ.

அந்.— நான்முகன் குறைகொண்டு குண்டிகைநீர் பெய்து மறை (5) கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி ஆங்கு அண்டத்தான் (10) சே அடியை கறைகொண்டகண்டத்தான் சென்னிமேல் ஏற (15) கழுவினான். (16)

அர்.— ப்ரஹ்மாவானவன் தன்னைச்யத்தைமுன்னிட்டுக் கொண்டு கமண்டலநீர்த்தத்தை வார்த்து வேதங்களில் (ரு) ஸாரமாகச்சொல்லப்பட்ட புருஷஸூக்தாதிமந்த்ரங்களினால் மங்களாசாஸநம்பண்ணி அந்தத்ரிவிக்ரமாவதாரகாலத்தில் அண்டாதிபதியானஸர்வேஸ்வரனுடைய (கo) அழகிய திருவடிகளை நீலகண்டன் சிரஸ்ஸில் விழும்படி (கரு) திருமஞ்சனம்செய்தான். (கசு.)

வ்யா.—அவ.— ஒன்பதாம்பாட்டு.— (குறை) வேறொருத்தர் துணையில்லை யென்றது - பூர்ணராக ஸம்ப்ரதிபந்நரானவர்களுந் தந்தாம் குறையை இவனுக்கறிவித்துத் தங்க ளபேக்ஷிதம் பெறுகையாலேயென்கிறார்.

(குறைகொண்டித்யாதி) சதுர்முகனை தான் குண்டிகையிலே தர்மத்தை ஜலமாகஉண்டாக்கி. (மறையித்யாதி) ஸ்ரீ புருஷஸூக்தாதிகளாலே மங்களாசாஸநம்பண்ணி. (அண்டத்தான் சேவடியைக்கறைகொண்ட கண்டத்தான் சென்னிமே லேறக்கழுவினான்) திருவுலகளந்தருளின ஸர்வேஸ்வரன் திருவடிகளை அக்காலத்திலே நீல

http://acharya.org

கண்டனுடைய சிரஸ்ஸிலே படும்படியாகக்கழுவினன். ஸாஹஸிகரான ப்ரஜைகள் வழியேபோய் வழியே வரவேணுமென்று தீர்த்தத்தை மேலே தெளிப்பாரைப்போலே. கூ.

அரு.—ஒன்பதாம்பாட்டு.—(குறைகொண்டு) ஆகிஞ்சிந்யாதிகளை முன்னிட்டு. குண்டிகை-கமண்டலம். பெய்கை-உண்டாக்குகை.

ஆங்காரவாரமது கேட்டு, அழலுமிழும்
பூங்காரரவணையான் பொன்மேனி,—யாங்காண
வல்லமேயல்லமே மாமலரான்வார்சடையான்,
வல்லரேயல்லரேவாழ்த்து. கo.

அந்.— ஆங்கு ஆரவாரமது கேட்டு அழல் உமிழும் (5) பூங்கார் அரவு அணையான் பொன் (10) மேனி யாம் காண வல்லமேயல்லமே? மா (15) மலரான் வார் சடையான் வாழ்த்து வல்லரே யல்லரே. (உo)

அர்.— அக்காலத்திலுண்டான மங்களாசாஸநத்வநியைக் கேட்டு (சத்ருக்கள் கோஷிக்கிறார்களென்று) நெருப்பைக் கக்காநின்ற (டு) அழகிய சீற்றத்தையுடைய திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரனுடைய அழகிய (கo) திருமேனியை நாம் ஸேவிக்க ஸமர்த்தரல்லோமோ! அழகிய (கரு) திருநாபிகமலத்திற்பிறந்த ப்ரஹ்மாவும் தொங்குகிற சடையையுடைய ருத்ரனும் (அவனை) ஸ்தோத்ரம் செய்கைக்குத்தக்க சக்தியையுடையவர்களாக வாகார்களே. (20)

வ்யா.— பத்தாம்பாட்டு.—(ஆங்காரவாரமதுகேட்டு)(க)“திசைவாழியெழ” என்னும்படி திருவுலகளந்தருளினபோதுண்டான வார்த்தைகேட்டு. (அழலுமிழும்) (உ)“விடங்காலுந்தீவாயரவணை” என்னும்படியே. (பூங்காரரவணையான்) அழகிய சீற்றத்தையுடைய திருவனந்தாழ்வானைப்படுக்கையாக வுடையவனுடைய. சேஷிபக்கல் பரிவாலேவந்த சீற்றமாகையாலே ஆலத்தி வழிக்கவேண்டும்படியிருக்கிறபடி. (பொன்மேனி யாங்காணவல்லமே யல்லமே) அவனுடைய ஸ்ப்ருஹணீயமான திருமேனி ஸ்வரூபத்துக்கு மேலொன்றில்லை யென்றிருக்கிற நமக்குக்காணக்குறையுண்டோ? (மாமலரானித்யாதி) திருநாபிகமலத்திலே அவ்யவதாநேந பிறந்தேனென்றும், ஜடை தரையிலேதாழும்படி ஸாதநாநுஷ்டாநம் பண்ணினேனென

(க) திருவாய்மொழி. எ-ச-க. (உ) இரண்டாந்திருவந்தாதி. எச.

http://acharya.org

ன்றும் ஸ்வசக்தியில் குறைய நினையாதப்ரஹ்மருத்ராதிகள் வாழ்த்த மாட்டாரே. க0.

அரு.— பத்தாம்பாட்டு.— (ஹுங்கார்) கார்-கறுப்பாய், சீற்றம் வல்லமே யல்லமே-அல்லவல்லோமே. மாட்டுவோமென்றபடி. ஸ்வரூபம்-விக்ரஹம், வலரேயல்லலே-வல்லாரல்லரே, மாட்டாரொன்றபடி.

வாழ்த்துகவாய் காண்ககண்கேட்கசெவி, மகுடம்
தாழ்த்திவணங்குமின்கள் தண்மலரால்,—சூழ்த்த
துழாய்மன்னுநீண்முடி யென்தொல்லைமால்தன்னை,
வழாவண்கைகூப்பி மதித்து. கக.

அந்.— சூழ்த்த துழாய் மன்னு நீள் முடி (5) என் தொல்லை மால்தன்னை வழா வண் (10) கை கூப்பி மதித்து மகுடம் தாழ்த்தி (15) தண் மலரால் வணங்குமின்கள், வாய் வாழ்த்துக. (20) கண் காண்க. செவி கேட்க. (24)

அர்.— சுற்றப்பட்ட திருத்துழாய்மாலை பொருந்தியிருக்கிற நீண்ட திருவபிஷேகத்தை யுடையனாய், (ரு) என்னிடத்தி லநாதியாக வ்யாமோஹத்தையுடையனான ஸர்வேஸ்வரனை (க்ஷணமாத்ரமும்) விடாம லழகிய (க0) கைகளைக் கூப்பி த்யாநம்பண்ணித் தலைகளை வணக்கி (கரு) சீதலமான புஷ்பங்களைக்கொண்டா ஸ்ரயியுங்கோள். (உங்கள்) வாய் (அவனை) மங்களாசாஸநம் செய்யட்டும், (20) கண் ஸேவிக்கட்டும். காது (அவன்குணங்களைக்) கேட்கக்கடவதாக. (உச)

வ்யா.— பதினோராம்பாட்டு.— (வாழ்த்துகவாயித்யாதி) ஸர்வேஸ்வரனை வாழ்த்தக்கண்டவாயும், காணக்கண்டகண்ணும், அவனுடைய குணங்களைக் கேட்கக்கண்ட செவியும், தந்தாமுக்குவகுத்த தொழிலைச்செய்கை, (மகுடந்தாழ்த்தி வணங்குமின்கள் தண்மலரால்) அவன் திருவடிகளிலே வணங்கக்கண்ட தலையை யங்கே தாழ்த்தி புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அவன் திருவடிகளிலே உங்கள் தலையைத் தாழ்த்தி வணங்குங்கோள். (சூழ்த்தவித்யாதி) வணங்குவித்துக்கொள்ளுகைக்கு லக்ஷணம்சொல்லுகிறது, சூழப்பட்ட திருத்துழாய் வர்த்தியாநின்று ஆதிராஜ்ய ஸூசகமான முடியையுடைய ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தை மாறாமல்நினைத்து உதாரமானகையைக்கூப்பி. (மகுடந்தாழ்த்தி வணங்குமின்கள் தண்

http://acharya.org

மலரால்) புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு அவன் திருவடிகளிலே உங்கள்தலையைத் தாழ்த்தி வணங்குங்கோள். கக.

அரு.— பதினோராம்பாட்டு.— வழா-வழுவுதலின்றி, மாறுமல். திருநாமமத்யாஹார்யம். மதித்து - நினைத்து. கக.

மதித்தாய்போய்நான்கின் மதியார்போய்வீழ,
மதித்தாய்மதிகோள்விடுத்தாய்,—மதித்தாய்
மடுக்கிடந்த மாமுதலைகோள் விடுப்பான்,ஆழி
விடற்கிரண்டும்போ யிரண்டின்வீடு. கஉ.

அந்.— மதியார் நான்கில் போய் வீழ மதித்தாய். (5) மதி கோள் விடுத்தாய். மடு கிடந்த (16) மா முதலை கோள் விடுப்பான் போய் (15) ஆழி விடற்கு மதித்தாய், இரண்டும் போய் (20) இரண்டின் வீடு மதித்தாய். (23)

அர்.— (உன்னை) ஆஶ்ரயியாதவர்கள் தேவதிர்யங் மனுஷ்ய ஸ்தாவரங்களாகிற நான்கு யோநிகளிலும் போய் விழும்படி ஸங்கல்பித்தாய் (ரு) சந்த்ரனுடைய வ்யஸநத்தைப் போக்கினாய். மடுவி லிருந்த (க0) பெரிய முதலையின் பலத்தை யழிக்கைக்காக அங்கெழுந்தருளி (கரு) திருவாழியை ப்ரயோகிக்க ஸங்கல்பித்தாய். ஆனையும் முதலையும் போய் (20) இரண்டினுடைய ஸ்தாநத்தை (முதலை கந்தர்வபதவியையும் யானை தன் திருவடிகளையும்) அடையும்படி ஸங்கல்பித்தாய். (உ௩)

வ்யா.— பன்னிரண்டாம்பாட்டு.— (மதித்தாயித்யாதி) (நான்கின் மதியார் போய்வீழமதித்தாய்) வேதத்தாலு மெங்கும் புக்குன்னை யுணராதவர்கள் அதஃபதிக்கும்படியாக மதித்தாய். (மதியார் நான்கில் போய்வீழ மதித்தாய்) உன்னைமதியாதவர்களை (க) “க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவயோநிஷு” - க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவயோநிஷு” என்னும் படியே சதுர்வித யோநிகளிலும் போய் விழும்படிக் கீடாக நினைத்தாய். (மதிகோள்விடுத்தாய்) சந்த்ரனுக்கு வ்யஸநத்தைப் போக்கினவனே! (மடுவித்யாதி) பொய்கையிலே கிடந்தபயாவஹமான முதலைஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்பற்றின பற்றுவிடும்படிக்கீடாக

(க) கீதை. கசு-கக.

http://acharya.org

ஸங்கல்பமின்றிக்கே திருவாழியை விடுகைக்கு நினைத்தாய் (இரண்டும்போ யிரண்டின்வீடு மதித்தாய்; பூர்வாகாரங்களைவிட்டு முதலைகந்தர்வனும் ஆனை திருவடிகளைப் பெறும்படிக் கிடாகவும் நினைத்தாய். கஉ.

அரு.— பன்னிரண்டாம்பாட்டு.— நான்கில்-நாலுவேதமாதல், நாலுயோநியாதல்· தேவாதிசதுர்விதம். மதித்தாய்போய் - மிகவும் நினைத்தாய். இரண்டும்போய் - முதலையாகாரமும் ஆனையாகாரமும் போய். இரண்டின்வீடு - முதலைக்கு சாபமோக்ஷமும் ஆனைக்கு முக்தியுமென்றபடி· (கஉ)

வீடாக்கும் பெற்றி யறியாது, மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்,—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான்வேதமுதற்பொருள்தான்,விண்ண
வர்க்கும் நற்பொருள்தான் நாராயணன்· கங

அ.— வீடு ஆக்கும் பெற்றி அறியாது மெய் (5) வருத்தி கூடாக்கி நின்று உண்டுகொண்டு உழல்வீர்· (10) வீடு ஆக்கும் மெய்ப்பொருள்தான் வேதம் முதல் பொருள்தான் (15) விண்ணவர்க்கு நல் பொருள்தான் நாராயணன். (19)

அர்.— மோக்ஷத்தை யுண்டாக்கும் ஸாதநத்தை யறியாமல் சரீரத்தை (ரு) (உபவாஸாதிகளினால்) வருந்தப்பண்ணிக் குழையாக (அஸாரமாக) ச்செய்து (பட்டிணியாய்) இருந்து (இதன் பலத்தை) புஜிப்போமென்றத்யவஸித்துத் திரிகிறவர்களே! (க0) மோக்ஷத்தைத்தரும் பரமோபாயமும், வேதத்தில் ப்ரதாநமாகச் சொல்லப்பட்ட வஸ்துவும். (கரு) நித்யஸூரிகளுக்கு விலக்ஷணமான புருஷார்த்தமும் ஸ்ரீமந்நாராயணனே யாயிருக்கும். (கக)

வ்யா.—பதின்மூன்றாம்பாட்டு.—(வீடாக்கும் பெற்றியறியாது) மோக்ஷத்தைத்தருவிக்கும் ப்ரகாரமறியாது. (மெய்வருத்தி) சிரகாலமுண்ணாதே நின்று பின்பு ஜீவித்து இப்படி அநுஷ்டிப்போமென்று நெஞ்சிலே கொண்டுழல்வீர்! “கொன்றுழல்வீர்” என்னில், உங்களை ஹிம்ஸித்துழல்வீரென்றுமாம். (வீடாக்கும் மெய்ப்பொருள்தான்) மோக்ஷத்தை யுண்டாக்கும் அவ்யவஹித ஸாதநம. (வேதமுதல் பொருள்தான்) மோக்ஷப்ரதனென்று வேதத்திலே ப்ரதிபாதிக்கப்

http://acharya.org

படுமவன். (வினைவர்க்கும் நல்பொருள்தான்.) நித்யஸூரிகளுக்குப் ப்ராப்யனானவன். (நாராயணன் ஸர்வேஶ்வரன். கங.

அரு.— பதின்மூன்றாம்பாட்டு.— உபாஸகரைக்குறித்து உங்களுபாஸநத்திலே ப்ரயோஜநமில்லை, அவனே உபாயமென்கிறார். (வீடாக்கு மித்யாதி) கூடாக்கி - சரீரத்தை வற்றப்பண்ணி. கங.

நாராயணனென்னை யாளி, நரகத்துச்
சேராமல் காக்குந் திருமால்; தன்—பேரான
பேசப் பெறாத பிணச்சமயர் பேசக்கேட்டு,
ஆசைப்பட் டாழ்வார் பலர். கச.

அ:— நாராயணன் என்னை ஆளி நரகத்து சேராமல் (5,) காக்கும் திருமால் தன்பேரான பேச பெறாத (10) பிணம் சமயர் பேச கேட்டு ஆசைப்பட்டு (15) பலர் ஆழ்வார். (17)

அர்.— ஸர்வசேஷியாய் என்னைப் பரிபாலநம்செய்யுமவனாய் நரகத்திற் சேராதபடி (ரு) ரக்ஷிக்குமவனான ஶ்ரிய:பதி, தன் திருநாமங்களானவற்றை யநுஸந்திக்க பாக்யமில்லாத (க0) பிணம்போன்ற மதத்தையுடையவர்கள் சொல்லும் விபரீதார்த்தங்களைக் கேட்டு (அதை) ஆசைப்பட்டு (கரு) அநேகர் முழுகிப்போவர்கள். (கஎ).

வ்யா.—பதினாலாம்பாட்டு.—(நாராயணனென்னையாளி) (க)ஈஶ்வர ஜகதாமஸ்ய ஜகதாம் - அகிலஜகத்ஸ்வா மிநஸ்மத்ஸ்வாமிந். (நரகத்தித்யாதி)பிராட்டிக்குப் ப்ரியமாக ஆஶ்ரிதரை ஸம்ஸாரத்தில் ப்ரவேசியாமல் காக்குமவன், இப்படி ஸர்வரக்ஷகனானவனுடைய திருநாமங்களைப் பேசப்பெறாதே ஜீவியாநிற்கச்செய்தே ம்ருதப்ராயராயிருக்கும் பாஹ்யகுத்ருஷ்டிகள் வேறேயோரர்த்தமுண்டென்று சொல்லக்கேட்டு அநர்த்தப்படுவார் சிலருண்டென்றும் பரமப்ராப்யன் நாராயணனென்று முபபாதிக்கிறார். கச.

அரு.— பதினாலாம்பாட்டு.— ஆசைப்பட்டு - அவர்கள்சொன்னத்தைக்கேட்டு - அவர்களுபாஸிக்கிற விஷயத்தை யாசைப்பட்டு, ஆழ்வார் - அத:பதிப்பரென்றபடி. கச.

(க) சரணாகதி கத்யம்.

http://acharya.org

பாண்டவசத்ருக்கள் தனக்குசத்ருக்களாகவும், பலமன்னர்கள் முடியும் படியாகவும் (க) "பீஷோதேதி வாத:-பீஷோதேதி ஸூர்ய:" என்று தன்னாஜ்ஞையாலே ஒரு முஹூர்த்தந் தப்பாமலுதிப்ப தஸ்தமிப்பதாகிற ஆதித்யன் மறையவும், எதிரிகளுக்கிவ்விடத்தில் அஸ்தமித்ததில்லையென்று குறைசொல்லப்போகாதபடி பூமியடைய மறையவும், ஆதித்யனை ப்ரகாசகமான திருவாழியாலே மறைத்தாரானவராலே யென்னெஞ்சம் ஸ்திதித்தது, நித்யஸூரிகளுக் கவ்வருகாய் (உ) "ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:-ஸத்யகாம ஸ்ஸத்யஸங்கல்ப:" என்றோதப்படுகிற தாமேதமக்குத் தகாதபடியான பொய்யைச் செய்கையாலே என்னைசுஸ்திதித்தது. ஈச்வரன் அஸத்யப்ரதிஜ்ஞனாய் ரக்ஷிப்பானை பின்பு நம்முடைய ஸத்ய தபச்சமாதிகளைக்கொண்டென்னென்கை (ங) "ந்ருதே வாநாஹமவதி-ந்யாஸோ நாமபகவதி" இப்லோகத்தில் நினைத்த உரமிப்பாட்டால் சொல்லுகிறது.

அரு.— பதினாறும்பாட்டு.— பொழில்-பூமி. பூமியடைய ஆதித்யகிரணம் மறையவுமென்றபடி. கசு.

ஆல நிழல்கீ ழறநெறியை நால்வர்க்கு,
மேலை யுகத்துரைத்தான் மெய்த்தவத்தோன்—ஞாலம்
அளந்தானை யாழிக் கிடந்தானை, ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கு மாறு. கஎ.

அந்.— மெய் தவத்தோன் ஞாலம் அளந்தானை ஆழி (5) கிடந்தானை ஆல்மேல் வளர்ந்தானை தான் வணங்குமாறு (10) அறம்நெறியை மேலையுகந்து ஆலநிழ்கீழ் நால்வர்க்கு உரைத்தான். (15)

அர்.— ஸத்யமான தபஸ்ஸையுடையருத்ரன், பூமியை யளந்தவனாய். திருப்பாற்கடலில் (ரு) பள்ளிகொண்டவனாய், ஆலந்தளிரில் திருக்கண்வளர்ந்தவனை ஸர்வேஶ்வரனைத் தானாஶ்ரயித்தவிதமான (கo) தர்மமார்க்கத்தை முன்யுகத்தில் வடவ்ருக்ஷத்தின்சாயையில் அகஸ்த்யபுலஸ்த்ய தக்ஷமார்க்கண்டேயர்களான நால்வர்க் குபதேசித்தான். (கரு)

(க) தைத்திரீயம். ஆநந்தவல்லி-எ. (உ) சாந்தோக்யம். அ-க.
(ங)

http://acharya.org

வ்யா.—அவ.—பதினேழாம்பாட்டு.— (ஆலநிழல்கீழ்) ஜ்ஞாநாதிகனான ருத்ரனும் தன்னையாஸ்ரயித்தவர்களுக்கு இவ்வர்த்தத்தை யிறே சொல்லிற்றென்கிறார்.

(ஆலநிழற்கீழித்யாதி) பகவத் பஜநத்தில் அநுஷ்டிதமான அநுஷ்டாநத்தையுடைய ருத்ரன் ஆலநிழலிலே அகஸ்த்யாதிகளுக்கு தர்ம மார்க்கத்தைப்பண்டு சொன்னான். (ஞாலமித்யாதி) சொன்னபடி எங்ஙனேயென்னில், அவதாரத்துக் கடியாக திருப்பாற் கடலிலே வந்து கண்வளர்ந்து சிறியார் பெரியாரென்று வாசி வையாதே எல்லார்தலைகளிலுமொக்கத் திருவடிகளை வரையாதே வைத்து வரையாதே எல்லாரையும் தன்வயிற்றிலேவைத்து பவ்யனாயிருப்பதொரு ஆலிலையிலே கண்வளர்ந்து ரக்ஷிக்குமவனைத் தான்வணங்கும் ப்ரகாரத்தைச்சொன்னான். கஎ.

மாறாயதானவனை வள்ளுகிரால், மார்பிரண்டு
கூறாகக்கீறியகோளரியை,—வேறாக
ஏத்தியிருப்பாரை வெல்லுமே,மற்றவரைச்
சாத்தியிருப்பார்தவம். கஅ.

அ:.— மாறாய தானவனை மார்பு வள் உகிரால் (5) இரண்டு கூறாக கீறிய கோள் அரியை வேறாக (10), ஏத்தியிருப்பாரை, மற்று அவரை சாத்தியிருப்பார் தவம் (15) வெல்லும். (16)

அர்.— சத்ருவான ஹிரண்யாஸுரனுடைய மார்பை க்கூரிய நகங்களினால் (௫) இரண்டுபிளவாகப் பிளந்த பலத்தையுடைய நரஸிம்ஹனை விலக்ஷணமாக (க௦) ஸ்தோத்ரம்பண்ணியிருப்பவர்களை, அப்படி ஸ்தோத்ரம்பண்ணுகிறவிலக்ஷணரான ஸ்ரீவைஷ்ணவர்களை ஸ்தோத்ரம் பண்ணுகிறஸ்ரீவைஷ்ணவர்களின் தபஸ்ஸு (க௫) ஜயிக்கும். (கசு)

வ்யா.— அவ.— பதினெட்டாம்பாட்டு.— (மாறாயவித்யாதி) குறிகொண்டு பகவானையே பஜிக்குமதிலும் ததீயரைப் புருஷகாரமாகக் கொண்டு பற்றுகை சீரியதென்கிறார்.

(மாறாயவித்யாதி)ஈஸ்வரனென்றுபாராதே தனக்கெதிரியான ஹிரண்யனைக்கூரிய வுகிராலேமார்விரண்டு பிளவாகக்கீண்ட நரஸிம்ஹத்தை. (வேறாக வித்யாதி)வேறாக வேத்தியிருப்பாராகிறார் (க)" அந்திய

(க) திருப்பல்லாண்டு. ௫.

http://acharya.org

ம்போதிலரியுருவாகி அரியை யழித்தவனைப் பல்லாண்டு" என்று ரக்ஷகனுக்குத் தீங்குவருகிறதென்று திருப்பல்லாண்டுபாடும் பெரியாழ்வார்போல்வார். (மற்றித்யாதி) சாத்திபிருப்பாராகிறர்,(க) "வல்லபரிசுவரி விப்பிரேல்"என்று பெரியாழ்வார் பக்கலிலே ந்யஸ்த்த பரராயிருக்கு மாண்டாள்போல்வார். தவம்-ஸுக்ருதம். ௧௮.

தவம்செய்து நான்முகனால் பெற்றவரத்தை,
அவம்செய்த வாழியானன்றே,—உவந்தெம்மைக்
காப்பாய் நீ காப்பதனை யாவாய்நீ,வைகுந்த
மீப்பாயுமெவ்வுயிர்க்கும் நீ. ௧௯

அந்.— தவம்செய்து நான்முகனால் பெற்ற வரத்தை அவம் செய்த (5) ஆழியானன்றே. உவந்து எம்மை காப்பாய் நீ; (10) காப்பதனை ஆவாய் நீ; எவ்வுயிர்க்கும் வைகுந்தம் (1 5) ஈப்பாயும் நீ. (17)

அர்.— (ஹிரண்யன்) தபஸ்ஸுபண்ணி ப்ரஹ்மாவினிடத்திலிருந்து ஸம்பாதித்த வரத்தை யழியச்செய்த(கு)திருவாழியையுடையனன்றே.ஸந்தோஷத்துடனே யெங்களை ரக்ஷிக்கிறவனும் நீயே;(௧௦) ரக்ஷிக்கவேணுமென்கிறஸங்கல்பத்தை யுடையவனும் நீயே; ஸகல ப்ராணிகளுக்கும் பரமபத (௧௫) மளிப்பவனும் நீயே. (௧௦).

வ்யா.— அவ.— பத்தொன்பதாம்பாட்டு.— (தவஞ்செய்து) ப்ரதானரானவர்களு மறிவுகெடுமிடத்தில் ரக்ஷிக்கும் நீயே யெனக்கு எல்லாவபிமத ஸித்தியும் செய்வாயென்கிறர்.

(தவமித்யாதி) தபஸ்ஸைப்பண்ணி ப்ரஹ்மாவின் பக்கலிலே ஹிரண்யாதிகள் பெற்றவரத்தை யழித்து வரங்கொடுத்தவர்களுக்கும் குடியிருப்புக்கொடுத்த நீயே. (உவந்தித்யாதி) உன்பேறாக ரக்ஷிப்பாய் நீ; ரக்ஷணந்தான் நீ; புநராவ்ர்த்தியில்லாத மோக்ஷத்தை (எவ்வுயிர்க்கு மீப்பாய் நீ). ௧௯.

நீயேயுலகெல்லாம் நின்னருளே நிற்பனவும்,
நீயேதவத்தேவதேவனும்,—நீயே
எரிசுடரும் மால்வரையு மெண்டிசையும்,அண்டத்
திருசுடரு மாயவிவை. ௨௰

(க) நாச்சியார் திருமொழி. ௧). ௯).

அ்ந்.— உலகெல்லாம் நீயே. நிற்பனவும் நின் அருளே. தவம் (5) தேவர் தேவனும் நீயே. எரி சுடரும் (10) மால் வரையும் எண் திசையும் அண்டத்து (15) இரு சுடருமாய இவை நீயே. (19)

அர்.— லோகங்களுக்கெல்லாம்காரணமானவன் நீயே. அவ்வ ஸ்துக்களிருப்பதும் உன்னுடையக் ருபையினுலேயே. தபஸ்ஸு பண்ணி (௫) தேவர்களானப்ரஹ்மாதிகளுக்கும் தேவன் நீயே. ஜ்வலிக்கிற அக்நியும், (௧௦) பெரிய பர்வதங்களும், எட்டுந் திக்குகளும், அண்டத்துக்குள்ளிருகிற (௧௫) இரண்டு தேஜஸ்ஸுக்களான சந்த்ரஸூர்யர்களுமாகிய இவையெல்லாவற்றுக்குமந்தர்யாமியானவன் நீயே, (௧௯)

வ்யா.— இருபதாம்பாட்டு.— (நீயே புலகெல்லாம்) உன்னை யொழிய ஜகத்துக்கு ப்ருதக்ஸ்திதியும் ப்ருதகு பலம்பமு மில்லை. (நின்னருளே நிற்பனவும்) உன்ப்ரஸாதமடியாகப் பெறும் பேறுநிலைநிற்பது. (நீயே தவத்தேவதேவனும்.) ஸாதநாநுஷ்டாநம்பண்ணி. அதிகாரம்பெற்றவர்களுக்கும். உன்னையொழிய ஸ்திதியில்லை. (நீயேயெரி சுடருமித்யாதி) பிரித்துச்சொல்லுகிறதென், அக்நியும் குலபர்வதங்களு மெட்டுத்திக்கும் அண்டாந்தர் வர்த்திகளான சந்த்ராதித்யர்களுமான இப்பதார்த்தங்களுமெல்லாம் உன்னதீநம். உ௰.

இவையாபிலவாய் திறந்தெரிகான்ற,
இவையாவெரிவட்டக்கண்கள்,—இவையா
வெரிபொங்கிக்காட்டு மிமையோர்பெருமான்,
அரிபொங்கிக்காட்டு மழகு. உக.

அந்.— பிலம் வாய் திறந்து கான்ற இவைஎரி (5) ஆ. எரி வட்டம் இவைகண்கள் ஆ. எரி (10) பொங்கி காட்டும் இமையோர் பெருமான் அரி (15) பொங்கி காட்டும் இவைஅழகு ஆ. (19)

அர்.—பிலம்போன்ற திருப்பவளத்தைத் திறந்து (அதிலே) எரிகிற இந்தஅக்நிகள் (௫) ஆஶ்சர்யங்களாகக்காண்கின்றன. கொள்ளிவட்டம் போன்ற இந்ததிருக்கண்கள் ஆஶ்சர்யமாகக்காண்கின்றன. அக்நிபோல்(௧௦)கிளர்ந்து தோன்றுமவனாய் நித்யஸூரிகளுக் கதிபதியானவன் நரஸிம்ஹமாய் (௧௫) க்கிளர்ந்து தோற்றுமிவ்வழகுகள் ஆஶ்சர்யங்கள். (௧௯)

வ்யா.— அவ.— இருபத்தோராம்பாட்டு.— (இவையா) இப்படி பூர்ணனுனவனுக்கு ஆஶ்ரிதார்த்தமாக வரும் சீற்றத்தைச் சொ

ல்லுகிறது. நரஸிம்ஹத்தைத் தத்காலத்திலே அநுஸந்தித்தாற்போலே பேசுகிறார்.

(இவையித்யாதி)(௧) "ஸ்வாகூ நாடீர: - அவாக்யநாதர:" என்று தத்வமிருக்கிறபடி. பிலம்போலே யிருக்கிற வாயைத்திறந்து அக்நியை யுமிழாநின்ற யிவை; அக்நியை யுமிழாநின்று பிலம்போலேயிருக்கிறவா யிவை. (இவையா வெரிவட்டக்கண்கள்) "உயிர்க்கெல்லாம் தாயா யளிக்கின்ற தண்டாமரைக்கண்ணன்" என்கிற கண்கள் (௨)கொள்ளிவட்டம்போலே யிருக்கிற கண்கள். (இவையா வித்யாதி) அக்நி போலே ஜாஜ்வல்யமான திருமேனியையுடையனாய் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன். அன்றிக்கே, அக்நிகொடுக்கும் ஹவிஸ்ஸையுடைய இந்த்ராதிகளுக்கு நிர்வாஹகன். (அரியித்யாதி) நித்யஸூரிகள் பரியவிருக்குமவன் ஆஸ்ரிதார்த்தமாக நரஸிம்ஹமாய்ச் சீறிக்காட்டினவழகு. ௨௧

அழகியான்தானே யரியுருவன்தானே,
பழகியான்தாளேபணிமின்,—குழவியாய்த்
தானேழுலகுக்கும் தன்மைக்கும்தன்மையனே,
மீனாயுயிரளிக்கும் வித்து. ௨௨.

அ.— தான் குழவியாய் ஏழுலகுக்கும் வித்து தன்மைக்கும்(5) தன்மையன் மீனாய் உயிர் அளிக்கும் அரியுருவன் (9) தானே அழகியான் தானே பழகியான் தாளே (15) பணிமின். (16)

அர்.— தான் (ப்ரளயகாலத்தில்) முக்தசிசுவாயிருந்து ஏழுலகங்களுக்கும் காரணமாய் அவ்வுலகங்களிலுள்ளவைகளுக்கும் (௫) காரணமாய் மத்ஸ்யாவதாரமெடுத்து ப்ராணிகளை ரக்ஷிக்குமவனாய் நரஸிம்ஹரூபியாய்க்கொண்டு (௯) தானே ஸுந்தரனாய் தானே (சிரகாலஸஹவாஸத்தினால்) பழகியிருக்கிறவனை ஸர்வேஸ்வரனுடைய திருவடிகளை (௧௫) ஆஸ்ரயியுங்கோள். (௧௬)

வ்யா.— அவ.— இருபத்திரண்டாம்பாட்டு.— (அழகியானித்யாதி) நரஸிம்ஹ வ்ருத்தம் ப்ரஸ்துதமானது பின்னாட்டுகிறது.

(அழகியான்) ஆபத்ஸகனானவனே அழகியான். (பழகியான்தாளேபணிமின்) த்யஜிக்கிற சரீரத்திலும் வர்த்திக்கிற சரீரத்திலும் புதியீகோளாயிருந்துள்ள நீங்கள், உங்கள் கையிலுங்களைக் காட்

(௧) சாந்தோக்யம். ௩-௪. (௨) திருமொழி. ௭-௧-௧.

http://acharya.org

டிக்கொடாதே காலத்ரயத்திலும் சரீரங்களில் ப்ரவேசிக்கைக்கு நிதாநத்தையும் அதுக்குப்பரிஹாரத்தையும் அறியுமவனை ஆஶ்ரயிக்கப்பாருங்கோள். ப்ரக்ருதியாசியறிந்து பழையனாய்ப் பரிஹரிக்கும் வைத்யனை வ்யாதிக்ரஸ்தர்பற்றுமாப்போலே. (குழவியிதயாதி) கார்யாகாரமான ஜகத்துக்கும் தத்மாத்ரயான ஜகத்துக்கும். (தானேமூலகுக்கும் தன்மைக்கும் தன்மையனே) எல்லா சேதநாசேதநங்களுக்கும் இவற்றின் குணத்துக்கும் குணி (தன்மைக்கும்) தன்பக்கலிலேவைக்கும். (க) "ஸதேவ-ஸதேவ" என்று சொல்லப்படுகிறவனே தன்னை யழியமாறி சேதநஸாரக்ஷிக்கும த்ரிவிதகாரணமும். உஉ.

அரு.—இருபத்திரண்டாம்பாட்டு.—கார்யாகாரமானதொடங்கி பிழை. ஆனாலும் குழவியா யென்றதுக்குச் சேர தன்மைக்கு மென்ற அபாடாந்தரமாய், இவற்றையெல்லாம தன்வயிற்றிலே வைக்கும் ஸ்வபாவத்தையுடையவ னென்றபடி. உஉ.

வித்துமிட வேண்டுங் கொலோ, விடையடர்த்த
பத்தியுழவன்பழம் புனத்து,—மொய்த்தெழுந்த
கார்மேக மன்ன கரு மால்திரு மேனி,
நீர்வானங் காட்டும் நிகழ்ந்து.

அந்.—விடை அடர்த்த பத்தி உழவன் பழம் (5) புனத்து வித்தும் இடவேண்டுங்கொலோ. மொய்த்து எழுந்த (10) கார் மேகமன்ன கருமால் திருமேனி நீர்வானம் நிகழ்ந்து (15) காட்டும். (16)

அர்.— (எழு) வ்ருஷபங்களைக் கொன்றவனாய் பக்திக்குக் க்ருஷிபண்ணினவனான ஸர்வேஶ்வரனுடைய அநாதியான (ரு) ஸம்ஸாரமாகிறபூமியில் ஸாக்ருதமாகிறவிதையும் விதைக்கவேணுமா. திரண்டு கிளர்ந்த (கo) கருமேகம்போன்ற நீலவர்ணனான ஸர்வேஶ்வரனுடைய திருமேனியை நீர்கொண்டமேகம் எதிரேநின்று (கரு) காட்டாநின்றது. (கசு)

வ்யா.— அவ.— இருபத்துமூன்றாம்பாட்டு.— (வித்தும்) அறிந்த தசையிலு மறியாத தசையிலும் ஸர்வேஶ்வரனே ரக்ஷகனுக அறிவிட்டபின்பு தன் அபிமதஸித்திக்கு இவன் செய்யவேண்டும் ஸா

(க) சாந்தோக்யம். சு - உ.

க்ருதமுண்டோ? ஸத்தாப்ரயுக்தையான இச்சை இவனுக்குண்டாகில் மேலுள்ளதுக்கமவன்கடவனாகில் இவன் செய்யுமம்சமென்னென்கிறார்.

(வித்துமிடவேண்டுங்கொலோ) வித்தென்று சொல்லுகிறது ஸுக்ருதத்தை. (விடையடர்த்தபத்திபுழவன்) நப்பின்னைப்பிராட்டிக்குதவிற்றென்று வ்யாஜமாய் ஆஸ்ரிதருடைய பத்திக்குக் கர்ஷகனானவனுடைய. (பழம்புனத்து) பழம்புனங்களில் விதைக்கவேண்டாதே யுதிர்முளைக்குமாபோலே யாத்ருச்சிகஸுக்ருதங்கள் தன்னடையே பிறக்கும்படியாகவிறே ஈஸ்வரன் ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணுவது. (மொய்த்தெழுந்தவித்யாதி) ருசிபிறந்தபின்பு ப்ராப்தியளவும் நாம் தரிக்கைக்கு அவன் திருமேனிக்குப்போலியுண்டென்கை. செறிந்தெழுந்த கார்காலத்தில் மேகம்போலே ஸ்யாமமான திருமேனியையுடைய ஸர்வேஸ்வரனுடைய நிறத்தை நீர்கொண்டெழுந்த காளமேகம்காட்டும். ௨௩.

அரு.—இருபத்துமூன்றாம்பாட்டு.—நிகழ்ந்து - வர்த்தியாநின்றுகொண்டு. காட்டும் - ப்ரகாசித்துக் காட்டவுமாம். ௨௩.

நிகழ்ந்தாய்பால்பொன்பசுப்புக்கார்வண்ணம்நான்கும்,
இகழ்ந்தா யிருவரையும் வீயப்—புகழ்ந்தாய்,
சினப்போர்ச் சுவேதனைச் சேனா பதியாய்,
மனப்போர் முடிக்கும் வகை. ௨௪.

அ.—பால் பொன் பசுப்பு கார் நான்கு (5) வண்ணம் நிகழ்ந்தாய் இருவரையு வீய இகழ்ந்தாய் (19) சேனாபதியாய் மனம் போர் முடிக்கும்வகை சினம் (15) போர் சுவேதனை புகழ்ந்தாய். (18)

அர்.—வெண்மை சிவப்பு பச்சை கறுப்பு (ஆகிற) நான்கு (௫) வர்ணங்களையுடையனாய் (நாலுயுகங்களிலும்) அவதரித்தாய். பாண்டவகௌரவர்களிருவருடையஸைநிகர்களையும் நசிக்கும்படி உபேக்ஷித்தாய். (௧௦) ஸேநாபதியாய்க்கொண்டு (தான்) ஸங்கல்பித்த யுத்தத்தைத் தலைக்கட்டும்படி சீறிக்கொண்டு (௧௫) யுத்தத்தில் அர்ஜுநனைக் கொண்டாடினாய். (௧௮)

வ்யா.—இருபத்துநாலாம்பாட்டு.—(நிகழ்ந்தாயித்யாதி) அவ்வோ யுகங்களில்சேதநர்க்கு ப்ரியமானவெண்மைதொடக்கமானநிறங்களை

http://acharya.org

யுகந்தாய். (இகழ்ந்தாயிருவரையும்வீய)மதுகைடபர்கள்.முடிய அன்றிக்கே,(க) "எல்லாச்சேனையுமிருநிலத்தவித்த" என்னுமாபோலேப க்ஷத்வயத்தையும் முடித்தவென்றுமாம். (புகழ்ந்தாயித்யாதி) சினத்த போரையுடைய ஶ்வேதவாஹனனான அர்ஜுநன் ஸேனைக்கு நிர்வாஹகனாய், தர்மபுத்ரன் முடிசூடவும் ,த்ரௌபதி குழல்முடிக்கவும், துர்யோதநாதிகள் முடியும்படியும் நினைத்தபோரை முடிக்க வல்லனாகப்புகழ்ந்தாய். உச.

அரு.— இருபத்துநாலாம்பாட்டு.— நிகழ்ந்தாய் - ப்ரகாசித்தாய். ப்ரகாசமுகப்பின் கார்யமாகையாலே உகந்தா யென்கிறது. புகழ்ந்தாய் - அர்ஜுநனைக் கொண்டாடினாய். உச.

வகையால் மதியாது மண்கொண்டாய், மற்றும்
வகையால் வருவதொன் றுண்டே,—வகையால்
வயிரங் குழைத்துண்ணும் மாவலிதா னென்னும்,
வயிரவழக் கொழித்தாய் மற்று. உரு.

அந்.— மதியாது வகையால் மண் கொண்டாய் மற்று (5) வகையால் வயிரம் குழைத்து உண்ணும் தானென்னும் (10) மாவலி வயிரவழக்கு ஒழித்தாய். வகையால் வருவது (15) மற்றும் ஒன்றுஉண்டே. (17.)

அர்.— (மஹாபலியை) லக்ஷ்யம்செய்யாமல் உபாயத்தினால் பூமியை வாங்கிக்கொண்டாய், அதற்குமேல் (ரு) உபாயத்தினால் வச்சிரத்தை புரைத்து புஜித்து தாபிமாநியான (ம) மஹாபலியோடு சாத்ரவமுறையைப் போக்கினாய். இவ்வுபாயங்களினால் (உனக்கு) வருவது (கரு) (ஆஶ்ரிதரக்ஷண மொழிய) வேறொரு ப்ரயோஜநமுண்டோ ?(கஎ) உ.ரு.

வ்யா.— அவ,— இருபத்தைந்தாம்பாட்டு.— (வகையால்)ஆஶ்ரிதார்த்தமான செயலொழிய தனக்கென்ன வொருசெய லில்லையென்கிறார்.

(வகையாலித்யாதி) மஹாபலியுசக்கும் ப்ரகாரத்தாலே பூமியை அநாயாஸேநகொண்டாய். (மற்றித்யாதி.)ஒரு உபாயத்தாலே வைரத்தைபுஜித்துஅத்தாலேமிடுக்கனாக அபிமாநித்திருக்கிறமஹாபலியையுடைய சாத்ரவமுறையைத்தவிர்த்து மஹாபலி பக்கல்நின்றும் ராஜ்

(க) திருவாய்மொழி. ௯ - ௨ - ௯.

http://acharya.org

யம் மீட்டுக்கொடுத் துபகரித்தாய். (மற்றும் வகையால் வருவதொன் றுண்டே) இவற்றுனக்கு ப்ரயோஜநமாவதொன் றுண்டோ.

அரு.— இருபத்தைந்தாம்பாட்டு.— வயிறங்குழைத் துண்ணும் மாவலி - இந்த்ரனோடே வைரத்தையுண்டாக்கி லோகத்தை புஜிக்கிற மஹாபலி. தானென்னு மென்னுகையாலே அபிமாநந் தோற்றுகிறது. ௨௫.

மற்றுத் தொழுவா ரொருவரையும் யானின்மை,
கற்றைச் சடையான் கரிக்கண்டாய்;—எற்றைக்கும்
கண்டுகொள் கண்டாய் கடல்வண்ணா; யானுன்னைக்
கண்டுகொள் கிற்கு மாறு. ௨௬.

அந்.— யான் மற்றுஒருவரையும் தொழுவார் இன்மை, கற்றை (5) சடையான் கரிக்கண்டாய். கடல்வண்ணா! யான் உன்னை (10) எற்றைக்கும் கண்டுகொள்கிற்குமாறு கண்டுகொள் கண்டாய் (13)

அர்.— நான் (உன்னை யொழிய) வேறொருவரையு மாஸ்ரயணீயராக உடையே னல்லேன். (இதற்கு) நெருங்கின (௫) ஜடையையுடையருத்ரன் ஸாக்ஷி. ஸமுத்ரம்போன்றதிருமேனியையுடையவனே! நா னுன்னை (௰) யெப்போதும் ஸேவிக்கும்படி கடாக்ஷித் தருளாய். (௧௩) ௨௬.

வ்யா.— இருபத்தாறும்பாட்டு.— (மற்றுத்தொழுவாரித்யாதி) நான் தேவதாந்தரஸமாஸ்ரயணம் பண்ணேனென்னு மிடத்துக்கு ஆள்பிடித்துத் தொழுவித்துக்கொள்ளும் ருத்ரன் ஸாக்ஷி. (எற்றைக்குமித்யாதி) ஸ்ரமஹரமான வடிவையுடைய நீயே மேலுமிந்த நன்மைநிலைநிற்கும்படியாகப் பார்த்தருளவேணும். ௨௬.

மாறுன் புகுந்த மடநெஞ்சம், மற்றதுவும்
பேறுகக் கொள்வனோ பேதைகாள்;—நீறுடி
தான்காணமாட்டாத தாரகல சேவடியை,
யான்காண வல்லேற் கிது. ௨௭.

அந்.— பேதைகாள்! நீறுடிதான் காணமாட்டாத தார் அகலம் (5) சே அது அடியை காணவல்லேற்கு மால் (10) தான்

http://acharya.org

புகுந்த மடம் இது நெஞ்சம் (15) யான் மற்று பேறாக கொள்வனோ? (19)

அர்.— ஓ புத்தி சூக்யர்களே! பஸ்மோத்தூளிதனானருத்ரனுக்கும் காணவரிதாய் மாலையினாலலங்கரிக்கப் பட்டதாய் (போக்யதையினால்) அபரிச்சிந்நமாய் (ரு) இவந்திருக்கிற அந்தத் திருவடிகளை ஸேவிக்கத்தக்கபாக்யமுடைய எனக்கு ஸர்வேஶ்வரன் (கo) தானேவந்து ப்ரவேசித்த விதேயமான இந்த மனஸ்ஸை யுடையேனான (கரு) நான் (அத் திருவடி யொழிய) வேறொன்றைப் புருஷார்த்தமாகக் கொள்வனோ? (கசு) உஎ.

வ்யா.— அவ.— இருபத்தேழாம்பாட்டு.— (மாறன்) பார்த்தருளவேணுமென் றபேக்ஷித்தபடியே அவன் பார்க்கப்பெற்ற படியைப் பேசுகிறார்.

(மாறன் புகுந்தமடநெஞ்சம்)ஈஶ்வரன் வ்யாமுக்தனாய்ப் புகுரும்படி ருசியுடைய நெஞ்சு! (நீறித்யாதி) ருத்ரன் காணமாட்டாத தாரையுமகலத்தையு முடைத்தான திருவடிகளைக்காண வல்லேனான வெனக்கு இதொழிய வேறே யொன்றைப் பேறாகக்கொள்வனோ? வேறொன்றைப் பேறாக நினைத்திருக்கு மறிவுகேடர்காள்! உஎ.

அரு.— இருபத்தேழாம்பாட்டு.— மாறன்-மால்தான். நெஞ்சம். நெஞ்சையுடையனான, பிழை. உஎ.

இது விலங்கை யீடழியக் கட்டியசேது,
இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்,— இதுவிலங்கை
தானொடுங்க வில்நுடங்கத் தண்டா ரிராவணனை,
ஊனொடுங்க வெய்தா னுகப்பு. உஅ.

அந்.— இலங்கை ஈடழிய கட்டிய இது சேது; (5) விலங்கு வாலியை வீழ்த்த இதுவும், இது (10) இலங்கைதான் ஒடுங்க வில் நுடங்க தண் (15) தார் இராவணனை ஊன் ஒடுங்க எய்தான் (20) உகப்பு. (21)

அர்.— லங்காபுரியை யழிக்கைக்காகக் கட்டின இந்த ஸேதுவும், (ரு) ம்ருகமான வாலியை விழச்செய்த இதுவும், இந்த (ய) லங்காபுரி நசிக்கும்படியாகவும் சார்ங்கம் வளையும் படியாகவும் குளிர்ந்த (கரு) மாலையையுடைய ராவணனுடைய ப்ராணன் நசிக்கும்படியாகவும் அடித்தவனுடைய (உo) ஸந்தோஷ வ்யாபாரங்கள். (உக) (உஅ)

http://acharya.org

வ்யா.—இருபத்தெட்டாம்பாட்டு.—(இதுவித்யாதி) லங்கைக்கு முலையடியே வழிபோம்படியாகக் கட்டின திருவணையிது. கடலடைபட்ட போதே லங்கையழிந்ததென்று நினைக்கும்படியாக. (இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்) திர்யக்கான வாலியைமுடித்ததுவும். (இது வித்யாதி) லங்கை நெருக்குண்ணவும் ஸ்ரீசார்ங்கம் வளையவும் மதிப்பனான ராவணன் முதுகு கூனவும் எய்தான். (இது அவனுகப்பு) அவன் லீலை. வாலியைக்கொன்ற ஜயமும், ராவண வதமும் புத்திஸ்தமான படியாலே யிதுவென்கிறார். ஒரு முஷ்டியிலே நின்றெய்ய நெஞ்சழியும்படியாயிறே இருப்பது. உஅ.

அரு.—இருபத்தெட்டாம்பாட்டு.—கட்டிய சேது - கட்டின ஸேது. தண்டார்-மாலையுடையவனுகையாலே மதிப்பனென்கிறது. இது என்று ப்ரத்யக்ஷமாதல், ஈடுபாடாதல். அப்படி ஈடுபடுத்துமோ வென்ன அருளிச்செய்கிறார் (ஒரு முஷ்டீத்யாதி) முஷ்டி - விற்பிடித்தபிடி. உஅ.

உகப்புருவம் தானே யொளியுருவம் தானே,
மகப்புருவம் தானே மதிக்கில்,— மிகப்புருவம்
ஒன்றுக்கொன் றோசனையான் வீழ, ஒருகணையால்
அன்றிக்கொண் டெய்தா னவன். உகூ.

அந்.— மிக புருவம் ஒன்றுக்கொன்று ஓசனையான் வீழ அன்றிக்கொண்டு (5) ஒருகணையால் எய்தானவன் மதிக்கில் தானே உகப்பு (10) உருவம், தானே ஒளி உருவம் தானே. (15) மகப்பு உருவம் (17)

அர்.— மிகவும் ஒருபுருவத்துக்கொருபுருவம் யோசனை நீளமுடையகும்பகர்ணன் விழும்படி சீறிக்கொண்டு (ரு) ஒருபாணத்தினு லடித்தசக்ரவர்த்தித்திருமகனை த்யாநித்தால் அவனே மநோஹரமான (கo) திருமேனியையுடையனுயிருப்பன். அவனே உஜ்ஜ்வலமான திருமேனியை யுடையனு யிருப்பன். அவனே (கரு) ஆஶ்சர்யகரமான திருமேனியையுடையனுயிருப்பன். (கஎ) (உகூ).

வ்யா.—இருபத்தொன்பதாம் பாட்டு.—(உகப்புருவமித்யாதி) (க)" ஐஶ்வர்யஹ்ரீ தாவிதே - இச்சாக்ருஹீதாபிமத" - என்னும்படி

(க) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-சு-ரு அச.

http://acharya.org

ஸ்வவ்யதிரிக்தர்க்கும் ப்ராப்யமாய்த்தனக்கு மபிமதமாய் ரஜஸ்தமோ மிஶ்ரமின்றிக்கே நிஷ்க்ருஷ்ட ஸத்வமாகையாலே நிரவதிகதேஜோ ரூபமாய் (உ) "...... - ரூபமத்யந்தரோம்மஹத்" என்னும்படியான ஆஸ்சர்யமான வடிவையுடையவனுமான சக்ர வர்த்தித் திருமகன்தானே ஒருபுருவத்துக் கொருபுருவம் யோசனை நீளமுடைய கும்பகர்ணன் பட்டுவிழும்படி ஸங்கல்பத்தாலன்றிக்கே திருச்சரத்தாலே தேவகார்யஞ் செய்தானாகை யன்றிக்கே தனக்கே வந்ததாகச் சீற்றத்தை யேறிட்டுக்கொண் டெய்தான். மதிக்கில் இவனுடைய திருமேனியை யொன்றால் பரிச்சேதிக்கப் போகா தென்கை. உகூ

அரு.—இருபத்தொன்பதாம் பாட்டு, — மகப்புருவம் - பெரிய வடிவு. அன்றி-சீறி, மதிக்கில் - பரிச்சேதிக்கப் பார்க்கில், ஏதாத்ருச மாகையாலே பரிச்சேதிக்கப் போகாதென்றபடி. உகூ.

அவனென்னை யாளி யரங்கத் தரங்கில்,
அவனென்னை யெய்தாமற் காப்பான்,—அவனென்ன
துள்ளத்து நின்று னிருந்தான் கிடக்குமே,
வெள்ளத் தரவணையின் மேல். ௩௰.

அந்.— அரங்கத்தவன் என்னை ஆளி. அவன் என்னை (5) அரங்கில் எய்தாமல் காப்பான், என்னது உள்ளத்து (10) நின்றான் இருந்தான் அவன் வெள்ளத்து அரவணையின்மேல் (15) கிடக்குமே! (16)

அர்.—கோயிலில்கண்வளர்ந்தருளுகிறவன் என்னை ரக்ஷிக் கிறவன். அவ னென்னை(டு) ஸம்ஸாரமாகிறநாடகசாலையில் ப்ரவே சியாதபடி ரக்ஷிப்பன். என் ஹ்ருதயத்தில் (௧௦) நின்றவனும் வீற்றிருந்தவனுமான அவன் க்ஷீராப்தியில் சேஷ சயனத்தில் (௧௫) கண்வளருமோ! (௧௬) ௩௦.

வ்யா.—முப்பதாம்பாட்டு.—(அவனித்யாதி) அரங்கத்தவனென் னையாளி.(அரங்கித்யாதி)(௩)"பிறவிமா மாயக்கூத்து" என்றுஸம்ஸா ரமாகிற நாடகசாலையி லென்னை ப்ரவேசியாமல் காப்பாரார்? பெரு மாளே.(அவ்னித்யாதி)என்ஹ்ருதயத்திலேபுகுருகைக்கு அவஸரப்ர

(௧) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-௬-௯-௭௦. (௩) திருவாய்மொழி-அ-௯-௧௧.
(உ) ஸ்ரீவிஷ்ணுபுராணம்-௬-எ-௭௦.

தீக்ஷணுய்க்கோயிலிலே கண்வளர்ந்தருளி அவகாசம்பெற்று என்ஹ்ரு தயத்திலே நிற்ப திருப்பதாகிறவனுக்குத் திருப்பாற்கடலிலே படுக்கையில் கண்ணுறங்குமோ? ௩௰

மேல் நான்முக னரனையிட்ட விடுசாபம்,
தான் நாரண னொழித்தான் தாரகையுள்;—வானோர்
பெருமானை யேத்தாத பேய்காள்; பிறக்கும்
கருமாயம் பேசில் கதை. ௩௧

அ்.— மேல் நான்முகன் அரனை இட்டவிடு சாபம் (5) நாரணன் தான் தாரகையுள் ஒழித்தான். வானோர் (10) பெருமானை ஏத்தாத பேய்காள்! பிறக்கும் கரு (15) மாயம் பேசில் கதை. (18)

அர்.— முற்காலத்தில் சதுர்முகன் ருத்ரனுக்குக் கொடுத்த விடக்கூடியசாபத்தை(ரு) நாராயணன் தானே பூலோகத்தில் போக்கினன். நித்ய ஸூரிகளுக்கு (௧0) நிர்வாஹகனை (அந்த ஸ்ரீமந் நாராயணனை) ஸ்தோத்ரம்செய்யாத பிசாசங்களே! பிறக்கும்போது கர்ப்பத்தில்படுகிற (கரு) ஆஸ்சர்யமானதுக்கத்தைச் சொல்லப்புகில் கதையாயிருக்கும். (௧அ) (௩௧)

வ்யா:— அவ.— முப்பத்தோராம் பாட்டு.— (மேல் நான்முகன்) நீங்களாஸ்ரயணீயராக நினைத்தவர்களுக்கு மிடர்வந்த விடத்திலே அவ்விடரைப் பரிஹரிக்குமவனையன்றோ பற்றவடுப்பதென்கிறார்.

(மேலித்யாதி) பண்டு சதுர்முகன் ருத்ரனை(க) "கபாலீ க்ஷம் ஹவிஷ்யஸி-கபாலீத்வம்பவிஷ்யஸி" என்று சபித்த சாபத்தைத்தரணியிலே யெல்லாருமறிய ஸர்வேஸ்வரன் போக்கினன். (வானோரித்யாதி) ஒருத்தன் தலையையறுத்துப் பாதகியாக, ஒருத்தன் சோச்யனாக, இருவருடைய வ்யஸநத்தையும் போக்குவதுஞ் செய்து நித்யஸூரிகளுக்கு ப்ராப்யனானவனை ஏத்தாத அறிவுகேடர்காள்! (பிறக்குமித்யாதி) இவ்வறிவுகேடு கிடக்கப் பிறவிக் கடியான கர்ப்பஸ்தாநத்திலுள்ள ஆஸ்சர்யம் சொல்லப்புகில் மஹாபாரதம். ௩௧

அரு.— முப்பத்தோராம்பாட்டு.— தாரகை என்று தரணியென்றபடி.

http://acharya.org

கதைப்பொருள்தான் கண்ணன் திருவயிற்றி னுள்ள,
உதைப்பளவுபோதுபோக் கின்றி,—வதைப்பொருள்தா
வாய்ந்த குணத்துப் படாத தடைமினோ, [ன்
ஆய்ந்த குணத்தா னடி. ௩௨.

அ.—கதைப் பொருள்தான் கண்ணன் திருவயிற்றில் உள்ள உதைப்பளவு (5) போதுபோக்கின்றி வாய்ந்தகுணத்து படாதது வதைப்பொருள்தான், ஆய்ந்த (10) குணத்தான் அடி-அடைமினோ. (13)

அர்.— இதிஹாஸபுராணாதிகள் ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஸங்கல்பத்தினால் நிலைபெற்றன. ஒருக்ஷணமும் (௫) வ்யர்த்தமாகப்போக்காமல் திருக்கல்யாணகுணங்களில் லக்வயியாதது ஈசிக்கிற வஸ்துவே. (ஆகையால்), ஹேயப்ரத்யநீகமான (௧௦) கல்யாணகுணங்களையுடையவனுடைய திருவடிகளைப் பற்றுங்கோள். (௧௩) (௩௨)

வ்யா.—முப்பத்திரண்டாம் பாட்டு.— (கதையித்யாதி) ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள் ஸர்வேஸ்வரனுடைய ஸங்கல்பத்திலுள்ளன. (உதைப்பித்யாதி) ஒருநொடி மாத்ரம் போதுபோக்கின்றி. (வாய்ந்த குணத்தில் படாதது வதைப் பொருள்தான்) ஆஸ்சர்ய குணத்திலகப்படாதது பரஹிம்ஸை. (ஆய்ந்த குணத்தா னடியடைமினோ) ஹேய ப்ரத்யநீகமான குணத்தை யுடையவன் திருவடிகளை ஆஸ்ரயியுங்கோள். ௩௨.

அரு.—முப்பத்திரண்டாம்பாட்டு,—போக்கின்றி-போக்காமல். சீக்ரமாக, (அகப்படாதது)-ஸத்குணத்திலே. பரஹிம்ஸை கூடாது, ஆகையாலே அத்தைவிட்டு அவனை யாஸ்ரயியுங்கோளென்றபடி. பரஹிம்ஸை-ஆத்மாபஹாரமாகவுமாம். ௩௨.

அடிச்சகடம் சாடி யரவாட்டி,ஆனை
பிடித்தொசித்துப் பேய்முலை நஞ்சுண்டு,—வடிப்பவள
வாய்ப்பின்னைத் தோளிக்கா வல்லேற்றெருத்திறுத்து,
கோப்பின்னு மானன் குறிப்பு. ௩௩.

அ.— அடி சகடம் சாடி அரவு ஆட்டி (5) ஆனை பிடித்து ஒசித்து பேய் முலை (10) நஞ்சு உண்டு வடி

பவளம் வாய் (15) தோளி பின்னைக்கா வல் ஏறு எருத்து (20)
இறுத்து பின்னும் குறிப்பு கோவானான். (24)

அர்.—திருவடிகளினால் சகடாஸுரனை யுதைத்துக் காளியனை (வாலைப்பிடித்து) ஆட்டி (௫) குவலயாபீடத்தைப் பிடித்து (அதின் கொம்மை) முறித்துப் பூதனையின் முலையில் (௧௦) விஷத்தை யமுதுசெய்து அழகிய பவளம்போன்ற வதரத்தையும் (௧௫) தோள்களையுமுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக பலிஷ்டங்களான வ்ருஷபங்களின் முசிப்பை (௨௦) முறித்துப் பின்னும் ரக்ஷிப்ப தினால் ஸர்வஸ்வாமியானான். (௨௪) ௬௩.

வ்யா.—அவ.—முப்பத்து மூன்றும் பாட்டு.—(அடிச்சகடம்) அஸாதாரணையான நப்பின்னைப்பிராட்டிக்கும் அல்லாதார்க்கும் மோக்ஷ விரோதியைப் போக்குமவன் என்கிறார்.

(அடியித்யாதி) திருவடிகளாலே சகடையழித்து, காளியனைத் துரத்தி, குவலயாபீடத்தைப்பிடித்து அதின்கொம்பையநாயாசே னமுறித்து, பூதனையைமுடித்து, அழகிய பவளம்போன் றிருக்கிற அதரத்தையும் அழகிய தோளையுமுடைய நப்பின்னைப் பிராட்டிக் காகத் தன்னையொக்கி வலிய வ்ருஷபங்களினுடைய கருத்தைப்போ க்கி, ஸ்வாபாவிகமான சேஷித்வத்தைப் பின்னையு முதறிப் படுத் தான் திருவுள்ளத்தாலே. ௬௩.

குறிப்பெனக்குக் கோட்டியூர் மேயானை யேத்த,
குறிப்பெனக்கு நன்மை பயக்க,—வெறுப்பனோ
வேங்கடத்து மேயானை மெய்வினை நோயெய்தாமல்,
தாங்கடத்தும் தன்மையான் தாள். ௬௪

அந்.— கோட்டியூர் மேயானை வேங்கடத்து மேயானை ஏத்த (5) எனக்கு குறிப்பு. நன்மை பயக்க எனக்கு (10) குறிப்பு. மெய் வினை நோய் எய்தாமல் (15) தான் கடத்தும் தன்மை யான் தாள் வெறுப்பனோ! (20)

அர்.— திருக்கோட்டியூரில் நித்யவாஸம்பண்ணுமவனையும் திருமலையி லெழுந்தருளியிருக்குமவனையும் ஸ்தோத்ரம்பண்ண (௫) எனக் கபிப்ராயம், நல்லகார்யங்களை வ்ருத்திபண்ண எனக் (௧௦) கபிப்ராயம், சரீரஸம்பந்திகளான கர்மங்களையும் வ்யாதிகளையும் அடையாமற்படி (௧௫) தானே கடத்திவைக்கும்

http://acharya.org

ஸ்வபாவத்தையுடையஸர்வேஶ்வரனுடைய திருவடிகளை உபே க்ஷிப்பனோ? (உ௦) ௩௪

வ்யா.—அவ.—முப்பத்து நாலாம்பாட்டு.—(குறிப்பெனக்கு) உகந்தருளின தேசங்களிலே எனக்காக அவன் வர்த்திக்க "வரில்பொ கடேன் கெடில் தேடேன்" என்றிருக்கவோ வென்கிறார்.

(குறிப்பித்யாதி) திருக்கோட்டியூரிலே யெனக்காக ஸந்நி ஹிதனானவனை யேத்தக்கருத்து. (குறிப்பித்யாதி) ஸம்ஶ்லேஷத் தால் வந்த உத்கர்ஷம் பிறக்கக்கருத்து. (வெறுப்பித்யாதி) வந்த ஸம் பத்தை வேண்டா வென்று தள்ளுவனோ? (மெய்யித்யாதி) சரீரமடி யாக வந்த வ்யாதியும், வ்யாதிக்கு ஹேதுவான கர்மமும் கிட்டாமல் மாற்றுமவன் திருவடிகளை மறப்பனோ? ௩௪.

அரு.—முப்பத்துநாலாம்பாட்டு.—மறப்பனோ-அத்யாஹாரம்.

தாளா லுலக மளந்த வசைவே கொல்,
வாளாகிடந்தருளும் வாய்திறவான்,—நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்,
ஐந்தலைவாய் நாகத் தணை. ௩௫.

அ.— நீள் ஓதம் வந்து அலைக்கும் மா (5) மயிலை மா அல்லிக்கேணியான் ஐந்தலை வாய் (10) நாகம் அணை வாளா கிடந்தருளும்! வாய்திறவான் (15) தாளால் உலகம் அளந்த அசைவே கொல். (19)

அர்.— பெரிய அலைகள் வந் தடிக்கிற ஶ்லாக்யமான (௫) மயிலாபூருக்கடுத்த ஶ்லாக்யமான திருவல்லிக்கேணியிலெழுந் தருளியிருக்கிறவன் ஐந்துசிரஸ்ஸுக்களையும் முகங்களையு முடைய (ம) திருவநந்தாழ்வானுகிற படுக்கைமேல் சலியாமல் கண்வளர்ந்தருளுகிறுன். ஒருவார்த்தையும்சொல்லான். (க௫) (இது) திருவடிகளினுல், லோகங்களை யளந்த ஆயாஸத்தினுலேயா யிருக்கலாமோ? (கக) ௩௫.

வ்யா.— அவ.— முப்பத் தைந்தாம்பாட்டு — (தாளால்) லௌகிகர் படியைக் கண்டு வெறுப்பனோ வென்கிறார்.

(தாளாலித்யாதி) (க)“வடிவிணையில்லாமலர்மகள்மற்றை நிலமகள் பிடிக்கும்மெல்லடி” என்றுபிராட்டிக்குங் கூசித்தொடவேண்டும் திருவடிகளைக் கொண்டு காடுமேடையு மளந்து திருமேனி அலற்றதோ ? இல்லாதத்தை யுண்டாக்கும் ஸங்கல்பம் போராதோ! உண்டானத்தை உஜ்ஜீவிப்பிக்க. (வாளாவித்யாதி) ஏகரூபமாகக் கிடப்பதும் செய்து வார்த்தையும் பேசுகிறிலன். (நீளோதமித்யாதி) நீர்க்கரையைப்பற்றிக் கண்வளருகிறதும் ஶ்ரமத்தின் மிகுதியென்றிருக்கிறார். ௩௫,

அரு.—முப்பத்தைந்தாம் பாட்டு. — பரியுமத்தனை யன்றோ வென்கிறாரிதிலென்றபடி. அசைவு-தளர்த்தி. வாளா-வெறுமனே. ஒருபடியாய்-ஏகரூபமாயென்றபடி. ௩௫.

நாகத் தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்,
நாகத்தணையரங்கம் பேரன்பில்,— நாகத்
தணைப்பாற் கடல்கிடக்கு மாதி நெடுமால்,
அணைப்பார் கருத்தனா வான். ௩௬

அந்.— ஆதி நெடுமால் அணைப்பார் கருத்தன் ஆவான் (5) நாகத்தணை குடந்தை வெஃகா திருவெவ்வுள் நாகத்தணை (10) அரங்கம் பேர் அன்பில் நாகத்தணை பாற்கடல் (15) கிடக்கும். (16)

அர். — ஜகத்காரணனான ஸர்வேஶ்வரன் பக்தஜநங்களுடைய ஹ்ருதயத்தில் ப்ரவேசிக்கைக்காக (ரு) திருவநந்தாழ்வானாகிறபடுக்கையின்மேல் திருக்குடந்தையிலும் திருவெஃகாவிலும் திருவள்ளூரிலும் திருவநந்தாழ்வானாகிறபடுக்கையின்மேல் (௧0) கோயிலிலும் திருப்பேரிலும் திருவன்பிலிலும் திருவநந்தாழ்வானாகிறபடுக்கையின்மேல் திருப்பாற்கடலிலும் (௧௫) சயனித்துக் கொண்டிருக்கிறான். (௧௬) ௩௬

வ்யா.— அவ.— முப்பத்தாறாம் பாட்டு.— (நாகத்தணை) பலவிடத்தில் கண்வளர்ந்தருளுகிறதும் ஆயாஸத்தாலேயென்றிருக்கிறார்.

(நாகத்தணையித்யாதி) திருக்குடந்தையிலே திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறதும், கோயில்தொடக்கமான எல்

(க) திருவாய்மொழி-௬-௨-௧0.

லாத் திருப்பதிகளிலும் திருப்பாற் கடலிலும் ஜகத்காரண பூதனான ஸர்வேச்வரன் தோள்தீண்டியாகக் கண்வளர்ந் தருளுகிறதும், தான் புகுரப்புக்கால் ஆணையிடாதார் ஹ்ருதயத்திலே புகுருகைக்காக இப்படி அவஸர ப்ரதீக்ஷனாக வேண்டுவா னென்னென்னில் தா யாகையாலே. ௬௬.

அரு.—முப்பத்தாறும் பாட்டு.—கீழ்ப்பாட்டுக் கநுகுணமாக அவதாரிகையிலர்த்தம். அவஸரப்ரதீக்ஷணைக — பாட்டுக்குத்தாத் பர்யம். ௬௬.

வானுலவு தீவளி மாகடல் மாபொருப்பு,
தானுலவு வெங்கதிருந் தண்மதியும்,— மேனிலவு
கொண்டல் பெயரும் திசையெட்டும் சூழ்ச்சியும்,
அண்டம் திருமா லகைப்பு. ௬எ.

அந்.—வான் உலவு தீ வளி மா (5) கடல் மா பொருப்பு தான்உலவு வெம் (10) கதிரும் தண் மதியும் மேல் நிலவு (15) கொண்டல் பெயரும் திசைஎட்டும் சூழ்ச்சியும் அண்டம் (20) திருமால் அகைப்பு. (22).

அர்.—ஆகாசமும் சலிக்கிற அக்நியும் காற்றும் பெரிய (௫) ஸமுத்ரமும் பெரிய மலைகளும் ஸஞ்சரிக்கிற உஷ்ண (௧0) கிரணங்களையுடைய ஸூர்யனும் சீதகிரணங்களையுடைய சந்த்ரனும் மேலே ஸஞ்சரிக்கிற (௧௫) மேகங்களும் சேதநர்களும் எட்டுத்திக்குக்களும் ஆவரணமும் ப்ரஹ்மாண்டமும் (௨0) ஸ்ரிய:பதியினுடைய ஸங்கல்பத்தினாலுண்டானவை. (௨௨)

வ்யா.—அவ.—முப்பத் தேழாம்பாட்டு.—(வானுலவு) ஆதிசெ டுமாலை விவரிக்கிறது.

(வானுலவு) சூழ்ச்சியும்-ஆவரணமும். இவையெல்லாம் திருமா லகைப்பு-எழுச்சி; ஸ்ரிய:பதியினுடைய ப்ரயத்நத்தாலே யென்கை.

அரு.—முப்பத்தேழாம்பாட்டு.— வளி-காற்று. பொருப்புத் தீான். கொண்டல்-மேகம். பெயரும்-சேதநரை உபலக்ஷிக்கிறது; சேதநருமென்றபடி. ௬எ.

http://acharya.org

அகைப்பில் மனிசரை யாறு சமயம் [ல்
புகைத்தான், பொருகடல்நீர்வண்ணன்,—உகைக்குமே
எத்தேவர் வாலாட்டு மெவ்வாறு செய்கையும்,
அப்போ தொழியு மழைப்பு. ௩அ

அந்.—அகைப்புஇல் மனிசரை ஆறு சமயம் புகைத்தான் (5) பொரு கடல் நீர் வண்ணன் உகைக்குமேல் (10) எத்தேவர் வாலாட்டும் எவ்வாறு செய்கையும் அழைப்பும் (15) அப்போது ஒழியும். (17).

அர்.—மதிப்பில்லாத மனுஷ்யர்களை ஆறுவிதமான (நாஸ்திக) மதங்களில் ப்ரவேசிப்பித்தவனும் (௫) அலையடிக்கிற ஸமுத்ரத்தின் ஜலம்போன்ற காந்தியையுடையவனுமான ஸர்வேஸ்வரன் உபேக்ஷித்தால் (௧௦) ஸமஸ்ததேவதைகள் வாலாட்டுகிறதும் ஸகலவிதமான யாகாதிக்ரியைகளும் அத்தேவதைகளினுஹ்வாநமும் (௧௫) அப்போது நடக்கமாட்டாது. (௧௭)

வ்யா.—முப்பத் தெட்டாம்பாட்டு.—(அகைப்பில் மனிசரை) எழுச்சியில்லாத மனிசரை; அளவில்லாதவர்களை யென்கை. (ஆறு சமயமித்யாதி) க்ஷுத்ரபதார்த்தங்களை யகப்படுத்தப் புகைக்குமாபோலே பாஹ்யஸமயங்களைக் காட்டி யகப்படுத்தினான் ஸர்வேஸ்வரன். (உகைக்குமேலித்யாதி) நெகிழநிற்குமாகில் தேவதாந்தரங்கள் (௧)"ஸம்ஸ்ரோஹம்-ஈஸ்வரோஹம்" என்று க்ஷுத்ரஜந்துக்கள் வாலாட்டுமாபோலேபண்ணு மபிமாநமும் அத்தேவதைகளை யாஸ்ரயிக்கைக்காகப்பண்ணும்வ்யாபாரமாகிறகாட்டழைப்பும்அவன் நெகிழ்ந்தபோது ஒழியும்-முடியும். ௩அ.

அரு.—முப்பத்தெட்டாம்பாட்டு.—அழைப்பு - காட்டழைப்பு. முகங்காட்டுகைக்காக ஆஹ்வாநம்பண்ணி அழைக்கிற மந்த்ரங்களென்றபடி. ௩அ.

அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண,
இழைப்பன் திருக்கூடல் கூட,— மழைப்பேர்
அருவி மணிவரன்றி வந்திழிய, ஆனை
வெருவியரவொடுங்கும் வெற்பு.

(௧) கீதை. ௧௬ - ௧௫.

http://acharya.org

அந். — திருவேங்கடத்தானை காண அழைப்பன். பேர் மழை (5) அருவி மணி வரண்டி வந்து இழிய (10) ஆனை வெருவி அரவு ஒடுங்கும் வெற்பு (15) கூட திருக்கூடல் இழைப்பன். (18).

அர்.—திருவேங்கடமுடையானை ஸேவிக்கக் கூப்பிடாநின்றேன். அதிக மழையினால் (ப்ரவஹிக்கிற) (ரு; மலையருவிகள் ரத்நங்களைத் திரட்டிக்கொண்டு வந்து (கீழே) விழும்போது (கo) ஆனை பயந்து பெரும்பாம்பின்வாயிலே விழுகிற திருமலையை (கரு) யடையவேணுமென்று திருக்கூடல் இழையாநின்றேன் (மணற்களில் சக்ராகாரமாக எழுதிப்பாராநின்றேன்· (கஅ)

வ்யா.—முப்பத் தொன்பதாம்பாட்டு.—(அழைப்பன்) போக மோக்ஷத்துக்கோவென்னில்(காண).(இழைப்பனித்யாதி)மழையிலே பெரிய அருவிகள் ரத்நங்களைக் கொண்டுவந்திழிய ரத்ந தீப்தியை ஆனை அக்நியென்றும் ஸர்ப்பம் மின்னென்றும்பயப்பட்டு ஒதுங்குந் திருமலை, அன்றிக்கே, நெருப்புக்கு பயப்பட்டு ஆனை மலைப்பாம்பின் வாயிலே புக்கொடுங்குமென்றுமாம். இப்படிக்கொத்த திருமலையைக் கூட இழைப்பன் திருக்கூடலென்றந்வயம். ௩௯.

அரு.—முப்பத்தொன்பதாம் பாட்டு.—அருவியை மின்னென்றும்.கூட-கூடுகைக்குத் திருக்கூடலிழைப்பன். ௩௯.

வெற்பென்று வேங்கடம் பாடினேன், வீடாக்கி
நிற்கின்றே னின்று நினைக்கின்றேன்,—கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்,
கால்வலையில் பட்டிருந்தேன் காண். சO

அந்.—வெற்புஎன்று வேங்கடம் பாடினேன். வீடுஆக்கி நிற்கின்றேன். (5) நின்று நினைக்கின்றேன். கற்கின்ற நூல் வலையில் பட்டிருந்த (10) நூலாட்டி கேள்வனார் கால்வலையில் பட்டிருந்தேன் காண். (15).

அர்.—மலையென்று சொல்லும்போது திருமலையைப் பாடாநின்றேன். (அதினால்) மோக்ஷத்தை யுண்டாக்கிக்கொண்டிராநின்றேன். (ரு) ஸ்திரமாகவிருந்து (பலம்பெற்றபடியை) த்யாநியாநின்றேன். அத்யயநம்செய்யப்பட்ட சாஸ்த்ரமாகிறவலையில்

http://acharya.org

அகப்பட்ட (ப்ரதிபாதிக்கப்பட்ட) (க0) ஶ்ரீதேவியின் வல்லபனான ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளாகிறவலையி லகப்பட்டுக் கொண்டேன். பாருங்கள். (கரு). (சo)

வ்யா.—நாற்பதாம்பாட்டு.—(வெற்பித்யாதி)விசேஷித்தொன்று செய்ததில்லை; அல்லாத மலைகளைச் சொல்லுகிறவோபாதியித்தைச் சொல்லத் திருமலையாயிற்று, (வீடாக்கி நிற்கின்றேன்) அநேக யத்நத்தாலே பெறும் மோக்ஷத்தை இச்சொல்லாலே உண் டாக்கிக்கொண்டு நின்றொழிந்தேன். (நின்று நினைக்கின்றேன்) ஏது சொல்லிற்று ஏது பற்றிற்றென்று விசாரியா நின்றேன். (கற் கின்ற வித்யாதி) ஓதப்படுகிற வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற பெரிய பிராட்டியார்க்கு வல்லபனானவன் திருவடிகளாகிற வலையி லகப்பட்டிருந்தேன். சo.

காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர,
ஓணவிழவி லொலியதிர,—பேணி
வருவேங்கடவா வென்னுள்ளம் புகுந்தாய்,
திருவேங்கடமதனைச் சென்று. சக.

அந்.—கல் அருவி முத்து உதிர ஓணவிழவில் (5) ஒலி அதிர பேணி வரும் வேங்கடவா! (10) என் உள்ளம் புகுந்தாய் திருவேங்கடமதனை சென்று (15) காணல் உறுகின்றேன். (17)

அர்.—இரைச்சலையுடைய மலையருவி முத்துக்களை யுதிர்க்க, திருவோணநக்ஷத்ரமாகிற மஹோத்ஸவத்தில் (ரு) மங்களாசாஸநத்வநி யதிரும்படி யாதரித்து வந்தாஶ்ரயிக்கிற திருமலையிலெழுந் தருளியிருக்கிறவனே! (கo) (நீ) என் ஹ்ருதயத்தில் ப்ரவேசித்தாய், (நான்) திருமலைக்குப் போய் (கரு) (உன்னை) ஸேவிக்க ஆசைப்படாநின்றேன். (கஎ)

வ்யா.—நாற்பத்தோராம்பாட்டு:—(கல்லருவியித்யாதி) ஒலியை யுடைய அருவிகளாலே முத்துதிர, திருவோண நக்ஷத்ரமாகிற மஹா திவஸத்திலே அநுகூலருடைய மங்களாசாஸநத்தாலே வந்தத்வநி மிக ப்ராப்யதயாவந்து ஆஶ்ரயிக்கப்படும் திருமலையையுடைய நீ என் னுடைய ஹ்ருதயத்திலே புகுந்தாய், நான் திருமலையை யடைந்து காணலுறுகின்றேன். சக.

http://acharya.org

சென்று வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை,
நின்று வினைகெடுக்கும் நீர்மையால்,—என்றும்
கடிக்கமல நான்முகனும் கண் மூன்றத்தானும்,
அடிக்கமல மிட்டேத்துமங்கு. சஉ.

அந்.—கடி கமலம் நான்முகனும் கண்மூன்றத்தானும் அடி (5) கமலம் இட்டு என்றும் ஏத்தும் அங்கு (10) சென்று நின்று நீர்மையால் வினை கெடுக்கும் (15) சேணுயர் வேங்கடத்தை வணங்குமினோ. (18)

அர்.—பரிமளம்கமழ்கிற திருநாபிகமலத்திற்பிறந்த ப்ராஹ்மாவும் முக்கண்ணனும் திருவடிகளில் (ரு) தாமரைப்பூவை ஸமர்ப்பித்து எப்போதும் ஸ்தோத்ரம்செய்கிற அத்திருமலைக்குப் (க0) போய் நிலையாய்நின்று, ஸ்வபாவத்தினால் பாபங்களைப் போக்குகிற (கரு) மிகவுயர்ந்த திருமலையை யாஶ்ரயியுங்கோள். (கஅ) சஉ.

வ்யா.—நாற்பத்திரண்டாம்பாட்டு.—(சென்றித்யாதி)(க)“சென்னியோங்கு தண்திருவேங்கடம்” என்னும்படியே புறப்பட்டவாறே கண்டு க்லேசந்திரும்படியாக ஆகாசாவகாசமடங்க விழுங்கும்படி உயர்ந்த சிகரங்களையுடைய திருமலையைச் சென்று வணங்குங்கோள். (நீர்மையால் நின்று வினைகெடுக்கும்)விரோதியான பாபத்தைத் திருமலை தன் ஸ்வபாவத்தாலே நசிப்பிக்கும். (கடிக்கமலமித்யாதி) ப்ரயோஜநாந்தரபரரும் தங்கள் அதிகாரம்பெறுவது இத்திருமலையிலே அவனை யாஶ்ரயித்து. திருநாபிகமலத்திலே அவ்யவதாநேந பிறந்த சதுர்முகனும் லலாடநேத்ரனும் அவன் திருவடிகளைப் புஷ்பார்த்யுபகரணங்களைக்கொண்டாஶ்ரயித்து. சஉ.

மங்குல்தோய் சென்னி வடவேங்கடத்தானை,
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான்,—திங்கள்
சடையேற வைத்தானும் தாமரைமேலானும்,
குடையேறத் தாங்குவித்துக்கொண்டு. சங.

அந்.—திங்கள் சடை ஏறவைத்தானும் தாமரைமேலானும் தாம் (5) குடையேற குவித்துக்கொண்டு, மங்குல்தோய் சென்னி வடவேங்கடத்தானை (10) காப்பணிவான் கங்குல் புகுந்தார்கள். (13)

(க) பெரியாழ்வார் திருமொழி, ரு-ச-க.

http://acharya.org

அர்.—சந்த்ரனை ஜடையில் தரித்தருத்ரனும் கமலப்பூமேல் வஸிக்கிறப்ரஹ்மாவும் தாங்கள் (ரீ) குடைமுதலியவைகளைப் பூர்ணமாகஸம்பாதித்துக்கொண்டு, மேகமண்டலத்தையடைந்திருக்கிற சிகரங்களையுடைய திருமலையிலெழுந்தருளியிருக்கிறவனுக்குத் (௧௦) திருவந்திக்காப்பு ஸமர்ப்பிக்கைக்காக ஸந்த்யாகாலத்தில் ப்ரவேசித்தார்கள். (௧௩) ௪௩.

வ்யா.—நாற்பத்துமூன்றாம் பாட்டு.—(மங்குல்) சதுர்முகனும் லலாடநேத்ரனும் திருமலையிலே யொருகாலாஶ்ரயித்துப் போமளவன்று; ஸமாராதநகாலங்கள்தோறும் ஸமாராதநோபகரணங்களைக் கொண்டு வந்தாஶ்ரயிப்பரென்கிறது.

(மங்குலித்யாதி) மேகபதத்திலே செல்ல உயர்ந்த சிகரங்களையுடைய திருமலையையுடையவனை. (காப்பணிவான் கங்குல் புகுந்தார்கள்) திருவந்திக் காப்பெடுப்பான் ஸமாராதநகாலந்தோறும் புகுந்தார்கள். (திங்களித்யாதி) சந்த்ரனை ஜடையிலே தரித்த ருத்ரனும் தாமரைப்பூவை ஜந்மமாகவுடைய ப்ரஹ்மாவும் திருமுத்துக் குடை முதலானவற்றைத் தரித்துக்கொண்டு கங்குல் புகுந்தார்கள். ௪௩.

அரு.—நாற்பத்து மூன்றாம்பாட்டு.—குடையேற - குடை முதலான ஆராதநோபகரணங்களை. முடித்துக்கோண்டு - குறைவற ஸம்பாதித்துக்கொண்டு. ௪௩.

கொண்டு குடங்கால் மேல் வைத்த குழவியாய்,
தண்ட வரக்கன் தலைதாளால்—பண்டெண்ணி,
போங்குமரன் நிற்கும் பொழில்வேங்கடமலைக்கே,
போங்குமரருள்ளீர் புரிந்து. ௪௪.

அந்.—கொண்டு குடங்கால்மேல்வைத்த குழவியாய் தண்டம் அரக்கன் (8) தலை பண்டு தாளால் எண்ணி போம் (10) குமரன் நிற்கும் பொழில் வேங்கடமலைக்கே குமாருள்ளீர் (15) புரிந்து போம். (17)

அர்.—(ப்ரஹ்மாவினால்) எடுத்துக்கொண்டு மடியில்வைத்துக்கொள்ளப்பட்ட சிறுபிள்ளையாய், தண்டியனை ராவணனுடைய (ரீ) தலைகளை முன்பு திருவடிகளினாலெண்ணி அந்தர்த்

தாகமான (கo) நித்யயுவாவான ஸர்வேஶ்வரன் எழுந்தருளியிருக்கிற தோப்புக்களையுடைய திருமலையை, நல்லவயஸ்ஸையுடையவர்களே! (கரு) ஆஶ்ரயித்துப் போருங்கோள். (கஎ) சச.

வ்யா.—அவ—நாற்பத்துநாலாம்பாட்டு.—(கொண்டு) அறிவுடையாரும் அறிவுகெடும் தசையில் ஹிதைஷியாய் ரக்ஷிக்குமவன்நிற்கிற திருமலையிலே படுகரணரானபோதே சென்றாஶ்ரயியுங்கோளென்கிறார்.

(கொண்டித்யாதி) எடுத்து மடியிலேவைக்கும் பிள்ளையாய் தண்டயனான ராக்ஷஸன் தலை பத்து மறுக்கப்படுமென்று திருவடிகளாலே கீறிக்காட்டி அந்தர்த்தானம் பண்ணின முக்தன் நிற்குந் திருமலைக்கே கால்நடை யாடும்போதே யாஶ்ரயித்துப்போருங்கள். சச.

அரு.—நாற்பத்து நாலாம்பாட்டு.—போம் - அந்தர்த்தானம்பண்ணும். குமரன் - சிறுபிள்ளை. குமரருள்ளீர் - பாலராகையாலே கால்நடை தருமே. புரிந்து-ஆஶ்ரயித்து. சச.

புரிந்து மலரிட்டுப் புண்டரீ கப்பாதம்,
பரிந்து படுகாடு நிற்ப,—தெரிந்தெங்கும்
தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே,
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. சரு.

அந்.—புரிந்து புண்டரீகப்பாதம் மலர் இட்டு பரிந்து (5) படுகாடுநிற்ப எங்கும் தெரிந்து தான் ஓங்கி (10) நிற்கின்றான் தண் அருவி வேங்கடமே வானோர்க்கும் (15) மண்ணோர்க்கும் வைப்பு. (17)

அர்.—ஆஶ்ரயணோந்முகர்களாய் ஶ்ரீபாதபத்மத்தில் புஷ்பங்களை ஸமர்ப்பித்து ஆசையுடன் (ரு) அங்கேநித்யவாஸம்பண்ணும்படி, ஸர்வதேசத்திலும் ப்ரகாசித்துத் தான் ஸர்வாதிகனாய் (4) எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனுடைய குளிர்ந்த அருவிகள்பெருகுகிற திருமலையே தேவர்களுக்கும் (கரு) மனுஷ்யர்களுக்கும் நிதியாயிருக்கும். (கஎ) சரு.

வ்யா.—அவ.— நாற்பத்தாறும் பாட்டு.— (புரிந்து) வெறும் ஸம்ஸாரிகளுக்கே யன்று; நித்யஸூரிகளுக்கும் ப்ராப்யம் திருமலையென்கிறார்.

http://acharya.org

(புரிந்தித்யாதி) நிரதிசய போக்யமான திருவடிகளிலே ஆதரித்து புஷ்பாதிகளையிட்டு ஸ்நேஹித்துப் படுகாடு கிடக்கும்படியாக விசததமமாக எங்கும் குறைவற்றவனுடைய ப்ரமஹாமான திருமலையே உபயவிபூதிக்கும் ப்ராப்யம். சரு.

வைப்பன் மணிவிளக்காம் மாமதியை மாலுக்கென்று,
எப்பொழுதும் கைநீட்டும் யானையை—எப்பாடும்
வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே,
நாடுவளைத் தாடுதுமேல் நன்று சசு

அந்.—மா மதியை மாலுக்கு மணிவிளக்காம் வைப்பன் என்று (5) எப்பொழுதும் கை நீட்டும் யானையை வேடு (10) எப்பாடும் வளைக்க குறவர் வில்எடுக்கும் வேங்கடமே (15) நாடு வளைத்து ஆடுதுமேல் நன்று. (19)

அ.—ஶ்லாக்யமான சந்த்ரனை ஸர்வேஶ்வரனுக்கு மங்களதீபமாக வைப்பேனென்று (ரு) எப்போதும் தும்பிக்கையை நீட்டிக்கொண்டிருக்கிற யானையை வேடர் (க0) எங்கும்போகவொட்டாமல் சுற்றிக்கொள்ள, (அதைக்கண்டு) குறவர் வில்லையெடுக்கிற திருமலையையே (கரு) நாட்டாரெல்லாம் ப்ரதக்ஷிணம்பண்ணிக் கூத்தாடினால் நலமாயிருக்கும். (கசு) சசு.

வ்யா.—நாற்பத்தாறும்பாட்டு.—(வைப்பனித்யாதி) சந்த்ரன் அணியனாயிருக்கையாலே ஸர்வேஶ்வரனுக்குத் திருநந்தாவிளக்காக வைப்பனென்றொருகால்நீட்டிக் கிடையாதொழிந்தால் மீளவறியாதே எப்போதும் கை நீட்டினபடியே அநந்யபரமாய் நிற்கிறயானையைப்புறம்புள்ள வேடர்சூழ, திருமலையிலே வர்த்திக்குங் குறவர் வில்லெடுத்தபடி யெதிர்க்கும் திருமலையே அறிவில்லாதாரோடு அறிவுடையாரோடு வாசியற எல்லாருமாஶ்ரயிக்கப் பெறில் நன்று. சசு.

அரு.—நாற்பத்தாறும் பாட்டு.—வேடு - வேடர், குறவர் இவர்கள் ஆனை பிடிக்கைக்காக வேடரானவர்களெல்லாம் பார்ஶ்வத்திலும் சூழ அங்கே வந்திருக்கிற குறவரத்தைக்கண்டு வில்லுக்களையெடுக்க என்றபடி. சசு.

நன்மணி வண்ணனூ ராளியும் கோளரியும்,
பொன்மணியும் முத்தமும் பூமரமும்,—பன்மணிநீர்
ஓடு பொருதுருளும் கானமும் வானரமும்,
வேடு முடை வேங்கடம். சஎ.

http://acharya.org

அந்.—ஆளியும் கோள் அரியும் பொன் மணி (5) முத்தமும் பூமரமும் பல் மணி நீரோடு (10) பொருது உருளும் கானமும் வானரமும் வேடும்உடை (15) வேங்கடம் நல் மணி வண்ணன் ஊர். (20)

அர்.—யாளிகளையும், பலமுடைய ஸிம்ஹங்களையும், ஸ்வர்ணங்களும் ரத்நங்களும் (ரு) முத்துக்களும் பூமரங்களும் அநேக மணிகளும் ப்ரவாஹத்தோடுகூட (௧0) புரண்டு விழுகிற காடுகளையும் வானரங்களையும் வேடர்களையுமுடைய (௧ரு) திருமலை நீலமாணிக்கம்போன்ற ஶ்லாக்யமான திருமேனியையுடைய ஸர்வேஶ்வரனுடைய திவ்யதேசம். (௨0) சஎ.

வ்யா.—நாற்பத்தேழாம்பாட்டு.—(நன்மணி) ஶ்ரமஹரமானவடிவையுடையவனுக்கு ரக்ஷணத்துக்குறுப்பாகையாலே திருமலையை ஊரென்கிறது. ரக்ஷணத்துக்குறுப்பாகையாலே திருவயோத்யையிலும் காட்டை விரும்பினாரிறே பெருமாள். அவர் விரும்பின காட்டை விரும்பிப்போகிற இளையபெருமாளை அக்காட்டோபாதி இப்படைவீட்டையும் நினையுங்கிடீரென்றாரிறே திருத்தாயார்.(க) [ராமம் தஶரதம் வித்தி - ராமம் தசரதம்வித்தி] "வ்யுத்தாம்வ்யுத்தாம்-வத்யதாம் பத்யதாம்" என்று அருவராதே உங்கள் தமயனாரோபாதியாக உங்களையனையும் நினையுங்கிடீர். [மாம்வித்திஜநகாத்மஜாம்-மாம்வித்தி ஜநகாத்மஜாம்] உங்கள்தமயனாருகந்த பிராட்டியோபாதி என்னையும் நினையுங்கிடீரென்கிறார். (ஆளியுமித்யாதி) திருமலையில் வர்த்திக்கும் நித்யஸூரிகளைச் சொல்லுகிறது. சஎ.

அரு.—நாற்பத்தேழாம் பாட்டு.—ரக்ஷணத்துக் குறுப்பானவிடத்தை ஊராக விரும்புமோவென்ன அருளிச்செய்கிறார் (ரக்ஷணத்துக்கித்யாதி). விரும்பினாரென்கைக்கு ஜ்ஞாபகமேதென்ன ஸுமித்ரையாருடைய வசநத்தைக்காட்டுகிறார் (அவர் விரும்பின இத்யாதி). இவ்விடத்துக்கு பதமந்வயியாதே இருந்தபடியே இஶ்ஶ்லோகத்துக்கிதுவுமொரு அர்த்தம். கானம் - காடு. சஎ.

வேங்கடமே விண்ணோர்தொழுவதுவும், மெய்ம்மையால்
வேங்கடமேமெய்வினைநோய்தீர்ப்பதுவும்,—வேங்கடமே
தானவரை வீழத்தன்னாழிப் படைதொட்டு,
வானவரைக் காப்பான் மலை. சஅ.

(க) ஸ்ரீராமா-அயோத்யா. ௪0-அ.

http://acharya.org

அ.—விண்ணோர் மெய்ம்மையால் தொழுவதுவும் வேங்கடமே. மெய் (5) வினை நோய் தீர்ப்பதுவும் வேங்கடமே. தானவரை (10) வீழ தன் ஆழிப்படை தொட்டு வானவரை (15 காப்பான் மலை வேங்கடமே. (18)

அர்.—நித்யஸூரிகள் ப்ராப்யமாக ஆஶ்ரயிக்கிறதும் திருமலையே. சரீரமடியாகவந்த (ரு)பாபங்களையும் வ்யாதிகளையும் போக்குவதும் திருமலையே. ராக்ஷஸர்கள் (கo) படும்படி தன்னுடைய திருவாழியாகிற ஆயுதத்தைத் தரித்துத் தேவர்களை (கரு) ரக்ஷித்தவன் வஸிக்கிற மலையும் திருமலையே. (கஅ) சஅ.

வ்யா.—நாற்பத்தெட்டாம் பாட்டு.—(வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்) திருமலை ப்ராபகமாக வேறொன்று ப்ராப்யமாகையன்றிக்கே இதுதானே ப்ராப்யமாக ஆஶ்ரயிப்பர்கள் நித்யஸூரிகள். (வேங்கடமித்யாதி) (க) "அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற பாபத்தைப் போக்குமதுவும் திருமலை. (வேங்கடமித்யாதி) அஸுரஜாதி தளரப்படும்படிக்கிடாகத் திருவாழியைப்பிடித்து தேவஜாதிக்குக் குடியிருப்புக் கொடுத்தவனுக்கு ஊரும் திருமலையே. சஅ.

மலையாமை மேல்வைத்து வாசுகியைச் சுற்றி,
தலையாமை தானொருகை பற்றி,—அலையாமல்
பீறக்கடைந்த பெருமான் திருநாமம்,
கூறுவதே யாவர்க்கும் கூற்று. சகூ.

அந்.—மலை ஆமைமேல் வைத்து வாசுகியை சுற்றி (5)ஆமைதான் தலை ஒருகை பற்றி அலையாமல் (கo) பீற கடைந்த பெருமான் திருநாமம் கூறுவதே (15) யாவர்க்கும் கூற்று. (17)

அர்.—மந்தரபர்வதத்தைக் கூர்மத்தின்மேல் வைத்து வாஸுகியென்கிறபாம்பை (க்கயிறாக்க) சுற்றி (ரு) ஆமையானதான் மலையினுச்சியை ஒருகையாலே பிடித்தமுக்கி நீர்வெளியில்புராளாமல் (உo) அம்ருதம் பிறக்கும்படி கடைந்த ஸர்வேஶ்வரனுடைய திருநாமங்களை யநுஸந்திப்பதே (கரு) எல்லாருக்கும் உசிதமானது. (கள) சகூ.

வ்யா.—நாற்பத்தொன்பதாம்பாட்டு.—(மலையாமையித்யாதி) கூர்மரூபியான தன்மேலே மலையைவைத்து வாசுகியைச் சுற்றி. (தலை

http://acharya.org

யித்யாதி) ஆமையானதான் மேலே கொந்தளியாதபடிக்கீடாக மல்யி னுச்சியைய ஒருகையாலே யமுக்கி. (அலையாமலித்யாதி) நிரம்பின நீர் புறம்பொசியாமலும் அம்ருதம்படுமபடி. யுள்ளுடையவும் கடை ந்த ஸர்வேஶ்வரனுடைய திருநாமத்தைச் சொல்லுவதே எல்லார்க்கு மடுப்பது. சக.

கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா, தீ
மாற்றமும் சாரா வகையறிந்தேன்;—ஆற்றங்
கரைக்கிடக்கும் கண்ணன் கடல்கிடக்கும், மாயன்
உரைக்கிடக்கு முள்ளத் தெனக்கு. ருo.

அந்.—கடல் கிடக்கும் மாயன் ஆற்றங்கரை கிடக்கும் (5) கண்ணன் உரை எனக்கு உள்ளத்து கிடக்கும். (10) கூற்றமும் சாரா, கொடுவினையும் சாரா, தீமாற்றமும் (15) சாரா வகை அறிந்தேன். (18)

அர்.—திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட ஆஶ்சர்யபூதனாய் திருக்காவேரிக்கரையில் சயநித்தவனை (ரு) கண்ணனுடைய ஸ்ரீஸூக்தியானசரமஶ்லோகம் என்னுடைய ஹ்ருதயத்திலேயே யிருக்கிறது. (கo) ம்ருத்யு கிட்டாமைக்கும் க்ரூரபாபங்கள் நெருங்காமைக்கும் கெட்டவிஷயங்களொன்றும் (கரு) சேராமைக்கும் உபாய மறிந்தேன். (கஅ) ருo.

வ்யா.—ஐம்பதாம்பாட்டு.—(கூற்றமுமித்யாதி) ம்ருத்யு அணையாமைக்கும்; ம்ருத்யு அணைகைக்கு ஹேதுவான மஹாபாபம் அணையாமைக்கும்; அபவாதம் சேராமைக்கும் உபாயமறிந்தேன். (ஆற்றங்கரையித்யாதி) திருப்பாற்கடலிலே கண்வளர்ந்த ஆஶ்சர்ய பூதனாய், அநந்தரம் திருக்கபிஸ்தலத்திலே கண்வளர்ந்தருளுகிற க்ருஷ்ணன் "உன்னுடைய ரக்ஷணத்துக்கு நானே கடவேன், நீ சோகிக்கவேண்டா" என்றருளிச்செய்த வார்த்தை என்னெஞ்சிலே கிடக்கும். (கூற்றம்) வர்ணாஶ்ரம தர்மநிஷ்டரில் வ்யாவ்ருத்தி. (கொடுவினை) த்ருஷ்டாத்ருஷ்ட காம்யபரரில் வ்யாவ்ருத்தி. (ஆயனித்யாதி) அவனுடைய திருநாமங்கள் ஹ்ருதயத்திலே கிடக்குமெனக்கு. அதாவது - தத்விஷயஜ்ஞாநம். (க)" ஶாஞ-சஹஞ. மாம் - அஹம்." ருய.

அரு.—ஐம்பதாம் பாட்டு.—வர்ணாஶ்ரம தர்மிகளுக்கு யமதர்சந பூர்வகமாக ஸ்வர்க்க ப்ராப்தியாகையாலே அவர்களில் வ்யாவ்ரு

(க) கீதை. கஅ-சுசு.

த்தி - காம்யபரவசராகிறது. பாபகார்யமாகையாலே காம்யபரரில் வ்யாவ்ருத்தி; இவையிரண்டும் ப்ரபந்நனுக்கில்லையென்றபடி. மாயனுடைய வார்த்தையான ஶ்லோகமென்னுதல், அவன் விஷயமான திருநாமமென்னுதல், அஹமென்றது முந்தின வர்த்தஸூசகம். ௫0.

எனக்காவா ராரொருவ ரே,எம் பெருமான்
தனக்காவான் தானேமற் றல்லால்,—புனக்காயா
வண்ணனே யுன்னைப் பிறரறியார், என்மதிக்கு
விண்ணெல்லா முண்டோ விலை. ௫௧

அ.—எனக்கு ஆவார் ஒருவர் ஆர்? மற்று (5) எம்பெருமான் தான் தனக்கே ஆவானல்லால் என்மதிக்கு (10) விண்ணெல்லாம் விலைஉண்டோ? புனம் காயா வண்ணனே! (15) உன்னை பிறர் அறியார். (18)

அர்.—எனக்கு ஒப்பாவார் ஒருவர் ஆருண்டு? மேலும், (௫) ஸர்வேஶ்வரனும் தான் தனக்கே யொப்பாமொழிய (எனக்கொப்பாகான்). என்புத்திக்கு (௧0) பரமபதமெல்லாம்கூட விலையாகுமோ? தன்னிலத்தில்நின்ற காயாம்பூப்போன்ற திருமேனியையுடையவனே! (௧௫) உன்னை வேறொருவர் அறியார். (௧அ)

வ்யா.—ஐம்பத்தோராம்பாட்டு.—(எனக்கித்யாதி) எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிற எனக்கொருத்தர் எதிருண்டோ? (எம்பெருமானித்யாதி) ஈஶ்வரன் தனக்கொருவன் ரக்ஷகனுண்டென்றிராமையாலே அவனுமெனக் கொப்பன்று. (புனக்காயாவித்யாதி) ஶ்ரமஹரமான வடிவையுடைய நீ ரக்ஷக னல்லையாகிலும் விரும்பப்படு முன்னையசலாரறியார். (என்மதிக்கித்யாதி) ஸம்ஸாரத்திலே எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிற எனக்கு விரோதியில்லாத தேசத்திலேயிருக்கிறவர்கள் என்னோடொப்பரோ? ௫௧.

விலைக்காட் படுவர் விசாதியேற் றுண்பர்,
தலைக்காட் பலிதிரிவர் தக்கோர்,—முலைக்கால்
விடமுண்ட வேந்தனையே வேறாக வேத்தாதார்,
கடமுண்டார் கல்லா தவர். ௫௨.

அ.—தக்கோர் விலைக்கு ஆள்படுவர். ஏற்று விசாதி (5) உண்பர். தலைக்கு ஆள் பலி திரிவர். கல்லாதவர் (10) முலைக்கால்

http://acharya.org

விடம் உண்ட வேந்தனையே வேறாக (15) ஏத்தாதார் கடமுண்டார். (17)

அர்.—புத்திமான்களாக அபிமானித்ததுராபிமானிகள் க்ரயத்துக்கு அடிமைப்பட்டிருப்பர்கள். (காலதானுதிகளை) வாங்கி வ்யாதிகளை (ரு) பநுபவிப்பர்கள். ஒருவன் தலைக்காக (த்தலையறுக்கிறேனென்று) நரபலியாகத் திரிவர்கள். வித்யாத்யயநம்பண்ணாத மூடர்கள், (௧0) ஸ்தநத்திலிருந்த விஷத்தை யமுதுசெய்த ராஜாவாகிய ஸ்ரீக்ருஷ்ணனை விலக்ஷணமாக (௧ரு) ஸ்தோத்ரம்செய்யாதவர்களாய் பாபபலத்தையேயனுபவிப்பர்கள். (௧எ) ருஉ.

வ்யா.—அவ.—ஐம்பத்திரண்டாம்பாட்டு.—(விலை) என்றுதொடொப்பாருண்டோவென்று சொல்லுவா னென்னெனில், இதுவன்றோ நாடு அநர்த்தப்படுகிறபடி என்கிறார்.

(விலையித்யாதி) ஈஶ்வர சேஷமாய் அநந்யார்ஹமான வஸ்துவை வேறு சிலர்க்கு சேஷமாக்கியும் ஜீவநத்துக்காகப் பிறருடைய வ்யாதிகளை நீர்வார்ப்பித்துக்கொண்டும், ஒருத்தன்பிழைத்தால் தலையரிகிறேனென்று ப்ரார்த்தித்து, பலித்ரவ்யமாய்த்திரிகிறுமன்றோ படுகிறது. “ தக்கோர் ” என்று க்ஷேபோக்தி. (மூலையித்யாதி) இவர்கள் குறித்துச்செய்வது ஸ்வவிரோதியைப் போக்குமவனை யேத்தாமை. (கடமித்யாதி) அறிவுகேடர் (௧) தேகுவபஹுதேவா௨ஜ தேத்வகம்புஞ்ஜதேபாபா:” என்னும்படியே பாபத்தைபுஜிக்கிறார்கள். அன்றிக்கே, கொடுக்க உடலின்றிக்கேயிருக்கத் தனிசுவாங்கி ஜீவிக்குமவர்களென்னவுமாம். ருஉ.

அரு.—ஐம்பத்திரண்டாம் பாட்டு.—தலைக்கு - ஒருத்தன் தலைக்காக; ஆட்பலி - தங்கள் தலையையறுத்து நரபலியிடுவர்கள். விசாதியேற்கை - காலதாநாதிகளைக் கொள்ளுகை. (கடமுண்டார்) கடன்-பாபமாய் அத்தை யநுபவித்தல் - தாரித்ர்யத்தை யநுபவித்தல். இத்தால் பாபபலமான நரகாநுபவத்தைப் பண்ணியும் கெட்ட தரித்ரராயும் போவர்களென்றபடி. ருஉ.

கல்லாதவ ரிலங்கை கட்டழித்த, காகுத்த
னல்லா லொருதெய்வம் யானிலேன்,—பொல்லாத
தேவரைத் தேவரல்லாரைத் திருவில்லாத்
தேவரைத் தேறேல்மின் தேவு. ருந.

அர்.—கல்லாதவர் இலங்கை கட்டழித்த காகுத்தனல்லால் யான் (5) ஒருதெய்வம் இலேன். பொல்லாத தேவரை தேவரல்லாரை (10) திருவில்லா தேவரை தேவு தேறேல்மின். (14)

அர்.—அஜ்ஞாநிகளான ராக்ஷஸர்களுடைய லங்கையை வாம்பழித்த சக்ரவர்த்தித்திருமகனையொழிய நான் (௫)வேறொருதேவதையை யுடையேனல்லேன். க்ஷுத்ரர்களாய்த் தபஸ்ஸினால் தேவதைகளாயினும் ஸ்வதஸ்ஸித்தமான தேவத்வமில்லாதவர்களாய் (௧௦) லக்ஷ்மீஸம்பந்தமில்லாதவர்களான ருத்ராதிகளைப் ப்ராப்ய தேவதையாக நினைக்கவேண்டாம். (௧௪)

௫௩.

வ்யா.—ஐம்பத்துமூன்றாம்பாட்டு.—(கல்லாதவரித்யாதி) கற்றுணருத்தனுளனாக அவனைப் புறப்படவிட்ட ஜ்ஞாநஹீநருடையதான லங்கையை அரணழித்த சக்ரவர்த்தித்திருமகனையொழிய வேறொன்று ஸமாஸ்ரயணீயமாக நினைத்திரேன்.(௧)"ஸாவோ நாந்ய த்ருஹ்யதி-பாவோ நாந்யத்ர கச்சதி" என்கிற திருவடியைப்போலே இவரும். (பொல்லாததேவரை) சுபாஸ்ரயமாக விரூபாக்ஷன் தொடக்கமானாரை ஆஸ்ரயிக்கப்போமோ? (தேவரல்லாரை) அத்தைப்பொறுத்தாஸ்ரயித்தாலும் கட்டக்குடியன்; அப்ராப்தஸ்தலம். (திருவில்லாத் தேவரை) மோக்ஷப்ரதனானவன் ஸ்ரியஃபதியன்றோ? (தேறேல்மின் தேவு) ப்ராப்தஸ்தலமல்லாமையேயன்று; ஆஸ்ரயித்தால் ப்ரயோஜநமில்லை யென்கை. (தேறேல்மின்தேவு) முகப்பிலே புத்ரபஸ்வாதிகளைத் தருமத்தைக்கண்டு ஆஸ்ரயணீயராக புத்திபண்ணாதே கொள்ளுங்கோள்.

௫௩.

அரு.—ஐம்பத்துமூன்றாம்பாட்டு.—அத்தைப்பொறுத்து-விரூபாக்ஷதையைப்பொறுத்து. கட்டக்குடியன்-ஆபாததயா குடிபோலே தோற்றி வரியிறுக்கமாட்டாதவன், கட்டம் - கஷ்டமாய் தரித்ரனென்றபடி. குடிபோலேயிருக்கையாலே எடுக்கவுமாம், தரித்ரனாகையாலே கழிக்கவுமாயிருக்குமங்கு; இங்கு அப்ராப்தமாகையாலே எடுத்துக்கழிக்கவும் யோக்யதையில்லை யென்றபடி, "தேவு" என்கையாலே அல்பபலப்ரதரென்கிறது.

௫௩.

தேவராய் நிற்குமத் தேவும், அத் தேவரில்
மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும்,—யாவராய்
நிற்கின்ற தெல்லாம் நெடுமாலென் றோராதார்
கற்கின்ற தெல்லாம் கடை.

௫௪.

http://acharya.org

அ.—தேவராய்நிற்கும் அத்தேவும் அத்தேவரில் மூவராய் நிற்கும் முதுபுணர்ப்பும் (5) யாவராய் நிற்கின்றதெல்லாம் நெடு மாலென்று ஓராதார் கற்கின்றதெல்லாம் கடை. (10)

அர்.—இந்த்ராதிதேவர்கள்நடுவே நிற்கும் அம்மேன்மையையும், அந்த தேவர்களில் ப்ரதானரான ப்ரஹ்மவிஷ்ணு ருத்ரரென்ற மூவரில் நடுவே நின்ற ப்ரதமாவதாரனான விஷ்ணுஸ்திதியையும், (ரு) ஸமஸ்தவஸ்துக்களுக்கும்நிர்வாஹகனாயிருக்கும் தன்மையெல்லாவற்றையும் ஸர்வேஶ்வரனென்றறியாதவர்கள் அப்யஸிக்கிறவித்யைகளெல்லாம் வ்யர்த்தம். (௧0) ருச.

வ்யா.—ஐம்பத்துநாலாம்பாட்டு.—(தேவரித்யாதி.) ஆதித்யேந்த்ராதிகளுக்கு நடுவே நிற்கும்நிலையும், ப்ரஹ்மருத்ராதிகளுக்கு நடுவே (௧) “ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரகார்த்தா:-மத்யேவிரிஞ்சகிரிசம் ப்ரதமாவதார:” என்கிற ப்ரதமாவதாரத்தையும், ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களிலும் சேதநத்வாரா ப்ரவேசித்து அவற்றுக்கு வஸ்துத்வ நாமபாக்த்வமுண்டாம்படி நிற்கிறநிலையும், ஸர்வாதிகனான ஈஶ்வரனென்றறியாதவர்கள் பாக்கக்கற்கிறதெல்லாம் ஸம்ஸார ப்ரவர்த்தகாரகைக்கு. ருச.

கடைநின் றமரர் கழல்தொழுது, நாளும்
இடைநின்ற வின்பத்த ராவர்,—புடைநின்ற
நீரோத மேனி நெடுமாலே, நின்னடியை
யாரோத வல்லா ரவர். ருரு.

அ.—அமரர் கடை நின்று நாளும் கழல் (5) தொழுது இடைநின்ற இன்பத்தராவர் புடைநின்ற நீர் (10) ஓதம் மேனி நெடுமாலே! நின்அடியை அறிந்து (15) ஓத வல்லாரவர் யார். (17)

அர்.—தேவதாந்தரங்களின் வாசலிலே நின்று ப்ரதிதிநமும் அவர்கள்பாதங்களை (ரு) யாஶ்ரயித்து மோக்ஷத்துக்கும் ஸம்ஸாரத்துக்கும்நடுவிலுள்ள ஸ்வர்க்காதிஸுகமுடையராவர்கள். (பூமியைச்) சுற்றிக்கொண்டிருக்கிற ஜலத்தையுடைய (௧0) ஸமுத்ரம் போன்ற திருமேனியையுடைய ஸர்வாதிகனே! உன் திருவடிகளையறிந்து (௧ரு) ஸ்தோத்ரம்பண்ணத்தகுந்தவர்கள் யார்? (௧எ)

வ்யா.—ஐம்பத்தைந்தாம்பாட்டு.— (கடை) தேவதாந்தரங்கள் வாசலிலேநின்று ஸர்வேஶ்வரன் பக்கல்பண்ணும் ப்ரணாமாதிகளை

http://acharya.org

யவர்கள் பக்கலிலேபண்ணி ஸம்ஸாரஸாகமுமின்றிக்கே நிரதிசய மான மோக்ஷஸாகமு மின்றிக்கேயிருக்கிற ஸ்வர்க்கஸாகத்தையு டையரானவர். (புடையித்யாதி) ஒரு ப்ரயோஜநம் பெறுவிடினும ஸ்தோத்ரம் பண்ணவேண்டும்படி பரமஹரமான வடிவையுடைய வன் திருவடிகளை யேத்தவல்லாரார். ருரு.

அரு.—ஐம்பத்தைந்தாம்பாட்டு.—இதரப்ரயோஜநங்களைக் கொள்ளுகையொழிய நின்னடியை ஏத்தவல்லா ரொருவருமில்லை யெ ன்றபடி. ருரு.

அவரிவரென் றில்லை யனங்கவேள் தாதைக்கு,
எவரு மெதிரில்லை கண்டீர்;—உவரிக்
கடல்நஞ்ச முண்டான் கடனென்று, வாணற்
குடனின்று தோற்றா னொருங்கு. ருசு.

அ்ந.—அவர்இவர்என்று இல்லை வேள் அனங்கன் தாதை க்கு (5) எவரும் எதிரில்லைகண்டீர். உவரிக்கடல் நஞ்சம் உண்டான் (10) வாணற்கு கடனென்று உடன்நின்று ஒரு ங்கு தோற்றான், (15)

அர்.—அவர்இவர்என்கிற பேதமில்லை. ஸாந்தரான மன் மதனுக்குத் தகப்பனான ஸ்ரீக்ருஷ்ணனுக்கு (ரு) ஒருவரும் ஸமானமில்லை. ஸமுத்ரத்திற்பிறந்த விஷத்தை விழுங்கினருத்ரனும் (கo) பாணாஸுரனுக்கு ரக்ஷகனாவேனென்றுப்ரதிஜ்ஞைபண்ணிக் கூடவேயிருந்து பாணாஸுரனைப்போலவே தோற்றான்.(கரு) ருசு.

வ்யா.— ஐம்பத்தாறும்பாட்டு.— (அவரித்யாதி.) காமனுக் குத் பாதகனுக்கு ஒருத்தரு முபமாநமில்லாமைக்கு விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடுவாசியில்லாமை கண்டிகோளே. (உவரியித்யாதி) ஒருத்தருமில்லை யென்கிறதென், ஒருதேவர் இல்லையோவென்னில்; அவரும் செய்தபடி இதுவன்றோ வென்கிறார். அம்ருத மதநகாலத்தி லே யுண்டான விஷத்தைக் கண்டத்திலே தரித்தானான ருத்ரனும் தன்னை யாஸ்ரயித்த வாணனுக்கு ஒலக்கத்திலே ரக்ஷிக்கிறேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணி அவன்தானே ஸாக்ஷியாகத் தோற்றான்.(ஒருங்கு) ஒருபடிப்பட வாணனோடு தன்னோடு வாசியற. ருசு.

அரு.—ஐம்பத்தெட்டாம்பாட்டு.— கடனென்று கடவன் நிர் வாஹகனென்று. ருசு.

http://acharya.org

ஒருங்கிருந்த நல்வினையும் தீவினையு மாவான்,
பெருங்குருந்தம் சாய்த்தவனே பேசில்,—மருங்கிருந்த
வானவர்தாம்தானவர்தாம்தாரகைதான், என்னெஞ்சம்
ஆனவர்தா மல்லாத தென். ௫௭.

அ்.—பெரும் குருந்தம் சாய்த்தவனே ஒருங்குஇருந்த நல்வினையும் (5) தீவினையும் ஆவான் பேசில் மருங்குஇருந்த வானவர்தாம் (10) தானவர்தாம் தாரகைதான் என்நெஞ்சம் ஆனவர்தாம் அல்லாதது (15) என்? (16)

அர்.—பெரிய குருக்கத்திமரத்தை விழத்தள்ளினவனே உடனின்ற புண்யத்துக்கும் (௫) பாபத்துக்கும் நிர்வாஹகன். வர்ணிக்கப்புகில், அருகிருக்கிற தேவர்களும் (௧௦) அஸுரர்களும் பூமியும் என்மனஸ்ஸும் தானேயாயிருக்கும். அவனுகாதவஸ்து (௧௫) எது?. (௧௬) ௫௭

வ்யா.—ஐம்பத்தேழாம்பாட்டு.—(ஒருங்கித்யாதி) (௧) "ஜவஹ்ரு உநுஹோக்ஷவ)ழ் - அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற புண்ய பாபங்களுக்கு நிர்வாஹகனானவனே, குருந்தை யநாயாஸேந ஒசித்தாற்போலே நம்முடைய வலிய ப்ரதிபந்தகங்களைப்போக்குவான். (மருங்கித்யாதி) ஆஸந்நரானதேவர்கள் அஸுரர்கள் தாரகைதான் இதடங்கலுக்கும் அவனையொழிய ஸ்திதியில்லை. ௫௭.

என்னெஞ்ச மேயா னிருள்நீக்கி யெம்பிரான், [ஞ்ச
மன்னஞ்சமுன்னொருநாள்மண்ணளந்தான்,—என்னெ
மேயானை யில்லா விடையேற்றான், வெவ்வினைதீர்த்
தாயானுக் காக்கினே னன்பு. ௫௮.

அ்.—என்நெஞ்சம் மேயான் இருள்நீக்கி எம்பிரான் மன் (5) அஞ்ச முன்னொருநாள் மண் அளந்தான் என்னெஞ்சம் (10) மேயானை இல்லா விடையேற்றான் வெம்வினை தீர்த்து (15) ஆயானுக்கு அன்பு ஆக்கினேன். (18)

அர்.—என்மனஸ்ஸில் நித்யவாஸம்பண்ணுகிறவனும் அஜ்ஞானத்தைப்போக்கி எனக்குஸ்வாமியானவனும் பலிசக்ரவர்த்தி (௫) பயப்படும்படி முன்பொருகாலத்தில் பூமியை யளந்தவனும் என்ஹ்ருதயத்தில் (௧௦) மிகவிருப்பத்தைப்பண்ணுமவனுமான

http://acharya.org

வேஶ்வரன் ஹ்ருதயத்திலில்லாத வ்ருஷபவாஹநனுடைய மஹா பாபத்தைப் போக்கி (கரு) ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரன் விஷயத்தில் ப்ரீதியை யுண்டாக்கினேன். (கஅ) ருஅ.

வ்யா.— ஐம்பத்தெட்டாம்பாட்டு.— (என்னெஞ்சமித்யாதி) என்னுடைய ஹ்ருதயத்தை யிருப்பிடமாகக்கொண்டு அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கி அத்தாலே யெனக்கு உபகாரகனாய், க்ஷத்ரிய ஜாதி யெல்லா மஞ்சும்படிக்கீடாகப் பண்டு பூமியையடையத் தன் காற்கீழேயிட்டுக்கொள்வதும் செய்து பின்னையு மென்பக்கலிலே அபிநிவிஷ்டனு யிருக்கிறவனைத் தன்னெஞ்சில் கொள்ளாத ருஷபவாஹநனுடைய மஹாபாபத்தைப்போக்கி அத்தாலே தானுளனானவனுக்கு ஸ்நேஹத்தை யுண்டாக்கினேன். ருஅ.

அரு.— ஐம்பத்தெட்டாம்பாட்டு.— இல்லா- ஸர்வேஶ்வரனை நெஞ்சிலே இல்லா; நெஞ்சிலே கொள்ளாதருத்ரன். ஏறு - வாஹநம்.

அன்பாவா யாரமுத மாவாய், அடியேனுக்
கின்பாவா யெல்லாமும்நீ யாவாய்—பொன்பாவை
கேள்வா கிளரொளியெங் கேசவனே, கேடின்றி
ஆள்வாய்க் கடியேனா னாள். ருகூ.

அந்.—அன்பாவாய் ஆர்அமுதமாவாய் அடியேனுக்கு இன் பாவாய் எல்லாமும்நீயாவாய் (5) பொன் பாவை கேள்வா கிளர் ஒளி (10) எம்கேசவனே கேடுஇன்றி ஆள்வாய்க்கு அடியேன் நான் (15) ஆள். (16)

அர்.— என்னிடத்தில் ப்ரீதியையுடையனாய் பரிபூர்ணாம்ருதம் போல்போக்யபூதனாய் அடியேனுக்கு உன்னனுபவஸுகத்தைக்கொடுத்தவனாய் மற்றஸுகங்களையும் கொடுக்குமவனாய் (ரு) ஸ்வர்ணவர்ணையான ஶ்ரீதேவிக்கு வல்லபனாய் வ்ருத்தியடைகிற தேஜஸ்ஸையுடையனான (கo) என்கேசவனே! அழிவில்லா வடிமைகொண்ட உனக்கு அடியேனான நான் (கரு) சேஷபூதனானேன். (கசு) ருகூ.

வ்யா.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.— (அன்பித்யாதி) என்பக்கல் ப்ரேமத்தையுண்டாக்கி நிரதிசய போக்யனுமாய், எனக்கு ஸ்வாநுபவத்தையும்தந்து, அநுகூலமான போக்யங்களையும்தந்து, இவையெல்லாம் செய்கைக்கடியான பிராட்டிக்குவல்லபனாய், இவளோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே நிரதிசயௌஜ்வல்யனாய், ப்ரசஸ்தகேசனாய்,

கைங்கர்யாநுபவத்துக்கு விச்சேதமின்றிக்கே என்னை யடிமைகொள்ளுகிற வுனக்கு நானடிமை' ஸர்வஜ்ஞனானவனுக்கு நானுனக்காளென்று சொல்லவேண்டாதிருக்க ஆளென்று சொல்லிற்று-அவன் தாழப் பரிமாறுகிற படியைக்கண்டு முறையறிந்து பரிமாறவேணுமென்று; முறையுணர்த்த வேண்டுகிறது-அவன் விரும்பினபடியைக் கொண்டு. ௫௯.

அரு.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு.—அடியேனுள்-அடியேனான நான் ஆள். ௫௯.

ஆட்பார்த் துழிதருவாய் கண்டுகோ ளென்றும்,நின்
தாட்பார்த் துழிதருவேன் தன்மையை,—கேட்பார்க்
கரும்பொருளாய் நின்ற வரங்கனே, உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம். ௬௰.

அ.— கேட்பார்க்கு அரும்பொருளாய்நின்ற அரங்கனே! ஆள்பார்த்து உழிதருவாய் (5) நின்தாள் பார்த்து உழிதருவேன் தன்மையை என்றும் (10) கண்டுகொள். உன்னை விரும்புவதே மனம் விள்ளேல், (15)

அர்.— (ஸ்வயத்நத்தால்) கேட்கயத்நித்தவர்களுக்கு துர்லபனான ரங்கநாதனே ! நமக்குதாஸபூதராராவது உண்டாவென்று தேடித்திரிகிறவனே ! (௫) உன்திருவடியை ஸேவிக்கவேண்டுமென்று திரிகிற என்னுடைய ஸ்வபாவத்தை எப்போதும் (௧௦) (நடக்கும்படி) கடாக்ஷித்தருளவேணும். உன்னை யாசைப்படுவதே ஸ்வபாவமான மனஸ்ஸை விடமாட்டேன். (௧௫) ௬௰.

வ்யா.—அறுபதாம்பாட்டு.—(ஆட்பார்த்தித்யாதி) தேவர் திருவடிகளைக் காண்கையே ஸ்வபாவமான என்னை, ஆரோ நமக்ககப்படுவாரென்று பார்க்குமதுவே ஸ்வபாவமாயிருக்கிற நீ காலமெல்லாமிப்படியேயாகப் பார்த்தருளவேணும். (கேட்பார்க்கித்யாதி) (க) "𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌮𑍇𑌧𑌯𑌾 𑌨 𑌬𑌹𑍁𑌨𑌾 𑌶𑍍𑌰𑍁𑌤𑍇𑌨 - நாயமாத்மா ப்ரவசநேநலப்ய: நமேதயாந பஹுநாஶ்ருதேந," என்னும்படியே உன் ப்ரஸாதமொழிய ஸ்வயத்நத்தாலே ஶ்ரவணாதிகள் பண்ணுவார்க்கரியையாய்,நீயே காட்டக் காண்பார்க்கு எளியையாகைக்காகக் கோயிலிலே கண்வளருகிறவனே! (உன்னை

(க) கடவல்லி. ௧-௨௩.

http://acharya.org

யித்யாதி) என்னுடைய மநஸ்ஸானது உன்னை விரும்புகையை விடுகிறதில்லை. விரும்புகையை விடாதொழிகையைப் பார்த்தருளவேணு மென்றுமாம். ௬௦.

அரு.—அறுபதாம்பாட்டு.—விள்ளேல் - என்மநஸ்ஸு விடுகிறதில்லை என்னுதல்; நீவிள்ளாதபடி பண்ணவேணுமென்னுதல். ௬௦.

மனக்கேதம் சாரா மதுசூதன் றன்னை,
தனக்கேதான் தஞ்சமாக் கொள்ளில்,—எனக்கேதான்
இன்றொன்றி நின்றுலகை யேழாணை யோட்டினான்,
சென்றொன்றி நின்ற திரு. ௬௧

அந்.—மதுசூதன் தன்னை தனக்கே தஞ்சமா தான் கொள்ளில் (5) மனக்கேதம் சாரா ஒன்றிநின்று ஏழ்உலகை ஆணை (10) ஓட்டினான் சென்று ஒன்றிநின்ற திரு இன்று (15) எனக்கேதான் (16)

அர்.—மதுஸூதநனைத் தனக்கே ரக்ஷகனென்று தான் ஸ்வீகரித்தால் (௫) மனோவ்யாதிகள் நெருங்கா. ஒருப்பட்டிருந்து ஸப்தலோகங்களிலும் தன்னுஜ்ஞையை (௧0) நடப்பித்தஸர்வேஸ்வரன் வந்து ஆதரமாகஸேவஸாதித்த ஸம்பத்து இப்போது (௧௫) எனக்கேயுள்ளது. (௧௬) ௬௧.

வ்யா.—அறுபத்தோராம்பாட்டு.— (மனக்கேதம்சாரா) மனஸ்ஸுக்கேதம்சாராவென்றுமாம். (மதுசூதனித்யாதி) தஞ்சமான செயலைச்செய்யு மவனைத் தனக்கேதான் தஞ்சமாகக்கொள்ளில். (எனக்கித்யாதி) ஸமஸ்தலோகத்தையும் விடாதே நின்று தன்னுஜ்ஞை செல்லும்படி நடத்தினவன் தானேவந்து அபிநிவிஷ்டனான ஸம்பத்து எனக்கே யுள்ளது; அது தானுமின்று. ௬௧

அரு.—அறுபத்தோராம்பாட்டு.—(மனக்கேதம்) கேதம் - கேத (வேத) மாய் துக்கமாதல், ஏதமென்று பொல்லாங்காதல். தஞ்சமாக்கொள்ளில் மனக்கேதம்சாரா; ஏழுலகை யொன்றிநின்று ஆணை யோட்டினான் தான் சென்றொன்றி நின்றதிரு எனக்கின்று என்றநுபவித்து அருளிச்செய்கிறார். (ஸமஸ்த லோகேத்யாதி.) ௬௧.

திருநின்ற பக்கம் திறவிதென் றோரார்,
கருநின்ற கல்லார்க் குரைப்பார்,—திருவிருந்த

http://acharya.org

மார்பில் சிரீதரன்தன் வண்டுலவு தண்டுழாய்,
தார்தன்னைச் சூடித் தரித்து. ௬௨

அ.— மார்பில் திருஇருந்த சிரீதரன்தன் வண்டு உலவு (5) தண் துழாய்தார்தன்னை சூடி தரித்து திருநின்ற (10) பக்கம் திறவிதுஎன்று ஓரார் கருநின்ற கல்லார்க்கு (15) உரைப்பர். (16)

அர்.— திருமார்பில் ஸ்ரீதேவிவாஸம்பண்ணுகிற ஸ்ரீதரனுடைய வண்டுகள் மோதுகிற (ரு) குளிர்ந்த திருத்துழாய்மாலையைச் சுற்றிக்கொண்டு தரித்து, ஸ்ரீதேவிவாஸம்செய்கிற (௧௦) (வலது) பக்கத்தையுடைய நாராயணனே அப்ரகம்ப்யமானபரதத்வமென்றறியாதவர்கள் கர்ப்பவாஸம்பண்ணுகிற க்ஷுத்ரதேவதைகளை (பரதேவதையென்று) வித்யையாதிகளில்லாதமூடர்களுக் (கரு) குபதேசிப்பர்கள். (௧௬) ௬௨.

வ்யா.—அறுபத்திரண்டாம்பாட்டு.— (திருநின்றபக்கம்) (௧) "ஸ்வாஜ்ஞாஸமஸ்தமேஸாயஷ்ஷவஸி - அபாங்கா பூயாம்ஸோ யதுபரி" என்னும்படியே இன்னவஸ்துவென்ன வேண்டா; ஏதேனுமொரு வஸ்துவிலே அவளுடைய கடாக்ஷமுண்டாகில் அது ஸர்வேஸ்வரதத்வமாகிறது. (திறவிதென்று) திறவிதாவது ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தமும்தன்னதீநமாய் வேறொன்றாலறியாதது. ஒரு சேதநராகில் அறியலாமென்கை.(கருநின்ற கல்லாரித்யாதி) தங்களோடொக்க கர்ப்பவஸ்யராய் கர்ப்பவாஸம் பண்ணுகிறவர்களை யாஸ்ரயணீயராகத் தங்களோடொத்த அறிவுகேடர்க்கு உபதேசிப்பார்கள். (திருவித்யாதி) மாம்பழம் உண்ணிந்யாயத்தாலே ஸ்ரீஸம்பந்தமில்லாதாரை ஸ்ரீயாங்களாகச் சொல்லும்படி யன்றிக்கே பெரியபிராட்டியார் திருமார்விலே யெழுந்தருளியிருக்கையாலே ஸ்ரீதரனென்று திருநாமத்தையுடையனானவனுடைய மதுவெள்ளத்தாலே வண்டுகள் திரியாநின்றுள்ள செவ்வியையுடைய திருத்துழாயை (௨) "சூடிக்களைந்தனசூடும்"என்னும்படியே தலையாலே தரித்துத் திருநின்றபக்கம் திறவிதென்றோரார். ௬௨.

அரு.—அறுபத்திரண்டாம்பாட்டு.— ஓரார்-அறியார். இப்படியறிகையே ஜ்ஞாநமென்னுமத்தைத் தாத்பர்யமாகஅருளிச்செய்கிறார் (ஒரு சேதநராகி லித்யாதி). ஜ்ஞாநத்துக்கு விஷயம் ஸ்ரிய:பதி என்றபடி. கல்லார்-கல்லாதவர்களாய் அறிவுகேடரென்றபடி. ௬௨.

---

(௧) ஸ்ரீகுணரத்நகோசம். ௬௦. (௨) திருப்பல்லாண்டு. ௯.

http://acharya.org

தரித்திருந்தே னாகவே தாரா கணப்போர்,
விரித்துரைத்த வென்னாகத் துன்னை,—தெரித்தெழுதி
வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும்,
பூசித்தும் போக்கினேன் போது. ௬௩.

அ.—தாராகணம் போர் விரித்து உரைத்த வெம் (5) நாகத்து உன்னை தெரித்து எழுதி வாசித்தும் (10) கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதுபோக்கினேனாகவே (15) தரித்திருந்தேன். (16)

அர்.—நக்ஷத்ரமண்டலங்களுடைய ஸஞ்சாரத்தை விசதமாகச் சொன்ன (சத்ருக்களுக்கு) பயங்கரமான (௫) திருவனந்தாழ்வானைத்திருமேனியாகவுடைய உன்னை அநுஸந்தித்தும் எழுதியும் வாசித்தும் (௧௦) கேட்டும் வணங்கியும் அதுவேயாத்ரையாயிருந்தும் அர்ச்சித்தும் போதுபோக்கினவனாகவே (௧௫) தரித்திருந்தேன். (௧௬)

௬௩.

வ்யா.—அவ—அறுபத்துமூன்றாம்பாட்டு.—(தரித்திருந்தேன்) கீழ்ப்பாட்டில் இப்படி செய்திலரென்று வெறுத்தார் லோகத்தை; இதில் தமக்குள்ள ஏற்றம் சொல்லுகிறது.

(தாராகணப்போரித்யாதி) நக்ஷத்ரகணங்களுடைய ஸஞ்சாரத்தை விஸ்த்ருதமாகச்சொன்ன திருவனந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருந்துள்ள உன்னை அநுஸந்தித்தும், லிகித்தும், வாசித்தும், ச்ரவணம்பண்ணியும், நிர்மமனாய்வணங்கி அது தானே யாத்ரையாய் ஆராதித்தும் காலம்போக்கினேன். (ஆகவே தரித்திருந்தேன்) ஆக தரித்திருந்தேன். (தரித்திருந்தேனாகவே) தரித்திருந்தேனாகைக்காகப் பூசித்துக் காலத்தைப்போக்கினேனென்றுமாம். ௬௩.

அரு.— அறுபத்துமூன்றாம்பாட்டு.— நக்ஷத்ரகதியாயிருக்கிற ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரத்தைச்சொன்ன சேஷனாயிருக்கிற உன்னை யென்று ஸாமாநாதி கரண்யமாகையாலே ஆத்மாவாயிருந்துள்ள வென்றது. ஆக - கீழ்ச்சொன்ன எல்லாத்தாலுமாக, தரித்திருந்தேனென்று க்ரியையாதல் ; ஸத்தை யுண்டாகைக்காகவே இப்படி காலத்தைப் போக்கினேனென்று க்ரியையாதல், முந்தினபக்ஷத்துக்கு ஏவகார வ்யயம்.

௬௩.

http://acharya.org

போதான விட்டிறைஞ்சி யேத்துமினோ; பொன்மகரக்
காதானை யாதிப் பெருமானை,—நாதானை
நல்லானை நாரணனை நம்மேழ் பிறப்பறுக்கும்
சொல்லானை; சொல்லுவதே சூது. சுச.

அந்.—பொன் மகரம் காதானை ஆதி பெருமானை (5) நாதானை நல்லானை நாரணனை நம் ஏழ்பிறப்பு (10) அறுக்கும் சொல்லானை சொல்லுவதே சூது. போதான (15) இட்டு இறைஞ்சி ஏத்துமினோ. (18)

அர்.—ஸ்வர்ணமயமான மகரகுண்டலங்களையணிந்த திருச்செவிகளையுடையனாய், ஜகத்காரணனாய், ஸர்வாதிகனாய், (ரு) ஸர்வசேஷியாய், நல்லவனாய், ஸர்வாந்தர்யாமியாய், நமக்கு மேல் வரும்ஜந்மங்களைப் (கo) போக்கும் திருநாமங்களையுடையனான ஸர்வேஸ்வரனை அநுஸந்திப்பதே நல்லஉபாயம். (ஆகையால்) புஷ்பமென்றவைகளை (கரு) ஸமர்ப்பித்து வணங்கி ஸ்தோத்ரம்பண்ணுங்கோள். (கஅ) சுச.

வ்யா.—அறுபத்துநாலாம்படு.—(போதானவித்யாதி) இன்ன புஷ்பமென்று நியதியில்லை; பூவானதை யெல்லாவற்றையுங்கொண்டு திருவடிகளிலே ஸமர்ப்பித்து வணங்கி ஸ்தோத்ரம் பண்ணுங்கோள். (பொன்மகரக்காதானை) கைக்கூலிகொடுத்தும் ஸ்தோத்ரம்பண்ணவேண்டும்படி ஸ்ப்ருஹணீயனானவனை. (ஆதியித்யாதி) அழகியதென்று அப்ராப்தமன்றிக்கே நமக் குத்பாதகனானவன்; ஸ்வாமியாய், வத்ஸலனாகையாலே நாராயண சப்தவாச்யனாய், நம்முடைய ஸம்ஸார ஸம்பந்தத்தையறுக்கும் திருநாமத்தையுடையவனைச் சொல்லுவதே இவ்வாத்மாவுக்குறுவது. சுச.

சூதாவ தென்னெஞ்சத் தெண்ணினேன், சொன்மாலை
மாதாய மாலவனை மாதவனை,—யாதானும்
வல்லவா சிந்தித் திருப்பேற்கு, வைகுந்தத்
தில்லையோ சொல்லீ ரிடம். சுரு.

அந்.—மாதாய மாலவனை மாதவனை சொல்மாலை யாதானும் (5) வல்லவா சிந்தித்து இருப்பேற்கு வைகுந்தத்து

http://acharya.org

இடம் (10) இல்லையோ? சொல்லீர். சூதாவது என்னெஞ்சத்து எண்ணினேன். (15)

அர்.—ஸந்தானாய் ஆச்ரிதவ்யாமுக்தனை ஸ்ரியஃபதியைப் ப்ரதிபாதிக்கிறப்ரபந்தங்களுதையாகிலும் (ரு) வந்தபடி யநுஸந்தித்துக்கொண்டிருக்கிறஎனக்கு ஸ்ரீவைகுண்டத்தில் இட (கo) மில்லையா? சொல்லுங்கோள். (இதுவே) நல்லஉபாயமென்று என்மநஸ்ஸி லெண்ணினேன் (கரு) சுரு.

வ்யா.—அறுபத்தைந்தாம்பாட்டு.— (சூதித்யாதி) உறுவதாவதென்னெஞ்சிலே மநோரதித்தேன். (சொன்மாலையித்யாதி) அழகு தான் வடிவுகொண்டாற் போலேயாய், வ்யாமுக்தனயிருந்துள்ள ஸ்ரியஃபதியைச் சொல்லப்பட்ட ப்ரபந்தத்தை ஏதேனுமொருபடி யநுஸந்தித்திருக்கிற வெனக்குப் பரமபதத்தி லிடமில்லையோ? ஸ்ம்ருதிமாத்ரமுடையாருக்கும் பரமபதம் ஸித்தியாதோவென்கை. (க) "ஸ்ம்ருதேஸகலகல்யாணபாஜநம் - ஸ்ம்ருதேயச்சதிகோபம்" என்கிறபடியே பரமபத ப்ராப்திக்கு ஸமர்த்தவ்யனுடைய நீர்மையாலே ஸ்மரணமாத்ரத்துக்கு அவ்வருகு வேண்டாவென்று தாத்பர்யம். சுரு

அரு.—அறுபத்தைந்தாம்பாட்டு.—மாதாய - அழகாய - மாது - அழகு. சுரு.

இடமாவ தென்னெஞ்ச மின்றெல்லாம், பண்டு
படநா கணைநெடிய மாற்கு,—திடமாக
வையேன் மதிசூடி தன்னோடு, அயனைநான்
வையேனாட் செய்யேன் வலம். சுசு.

அந்.—பண்டு படம் நாகம் அணை நெடியமாற்கு (5) இன்றெல்லாம் இடம் என்னெஞ்சமாவது மதி சூடிதன்னோடு (10) அயனை வையேன் நான் திடமாக வையேன். (15) வலம் ஆள்செய்யேன். (17)

அர்.—முற்காலத்தில் (விரிந்த) படங்களையுடைய திருவனந்தாழ்வான்மேல் கண்வளர்ந்தருளின ஸர்வேஸ்வரனுக்கு (ரு) இப்போதெல்லாம் வாஸஸ்தானம் என்னுடையஹ்ருதயமாயிருக்கும். சந்த்ரனைத் தரித்தருத்ரனோடுகூட (க0) ப்ரஹ்மாவை தத்வயாதாத்ம்யஜ்ஞாநமுடைய நான் ப்ராப்யமாக நினையேன்; (கரு) (அவர்களை) ப்ரதக்ஷிணமும் செய்யமாட்டேன். (கஎ) சுசு.

http://acharya.org

M1 308/2 086)   T 86 . 0040

வ்யா.—அறுபத்தாறும்பாட்டு—(இடமித்யாதி) ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனுக்கு வாஸஸ்தாநம் என்னோடு ஸம்ஶ்லேஷிப்பதுக்கு முன்பெல்லாம் தன்னோடே ஸம்ஶ்லேஷத்தாலே விஸ்த்ருதமான பணத்தையுடைய திருவனந்தாழ்வான்; இப்போதெல்லாம் என்னுடைய ஹ்ருதயம். (திடமித்யாதி) சந்த்ரனைத் தரித்தானாயிருக்கிற ருத்ரனையும், திருநாபீகமலத்திலே உத்பந்நனாகையாலே அஜனென்றிருக்கிற ப்ரஹ்மாவையும் த்ருடபதார்த்தங்களாக நினையேன். (வையேனாட்செய்யேன்) அதுக்கடி கூரியேனாய் ஸாராஸாரவிவேகஜ்ஞனானகை. (க)"வ்ருகீஷ்வாஜ்ஞாநதோஷவஶாத்-ப்ரதிபுத்தாநஸேவந்தே" என்று கூரியரானவர்கள் தேவதாந்தர பஜநம் பண்ணார்களிறே என்கை. (வலம்) இதுக்கெல்லாவற்றுக்கு மடி பகவத் பரிக்ரஹமான பலம்.

அரு.—அறுபத்தாறும்பாட்டு—வையேன்-மநஸ்ஸிலே வையேனென்றாய், நினையேனென்று முந்தினது; நான் வையேன் - வையேனான நானென்றாய், கூரியனான நானென்று இரண்டாவது. வை - கூர்மை - ஜ்ஞாநக்கூர்மை. ௬௬.

வலமாக மாட்டாமை தானாக, வைகல்
குலமாகக் குற்றந்தானாக,—நலமாக
நாரணனை நாபதியை ஞானப் பெருமானைச்
சீரணனை யேத்தும் திறம். ௬௭.

அந்.—நாரணனை நாபதியை ஞானப்பெருமானை சீரணனை ஏத்தும் (5) திறம் வலமாக; மாட்டாமைதானாக; குலமாக; குற்றம்தானாக (10) வைகல் நலமாக. (12)

அர்.—ஸர்வசேஷியாய், எனக்குஸ்வாமியாய், ஜ்ஞாநாதிகனாய், மற்றகல்யாணகுணங்களையுமுடையனான ஸர்வேஶ்வரனை ஸ்தோத்ரம்செய்கிற (௫) விதம் (ஜ்ஞாநசக்த்யாதி) பலத்தைக்கொடுக்கினும் நலமே; கொடுக்காவிடினும் நலமே. ஸத்குலத்தைக் கொடுக்கினும் நலமே, அதில்தோஷத்தைவிளைக்கினும் நலமே; (௰) எப்போதும் (அவனைஸ்தோத்ரம்செய்வதே எனக்கு) உத்தேஶ்யம் (௰௨) ௬௭.

வ்யா.—அறுபத்தேழாம்பாட்டு—(வலம்) (நலமாகவித்யாதி) நன்றாக ஸர்வஸ்வாமியாய், என்னுவுக்கு நிர்வாஹகனாய், ஜ்ஞாந குணங்களுக்கெல்லா மாஶ்ரயமாயிருக்கிறவனை நன்றாக வேத்தும்ப்ரகா

(௧) பாரதம்.

http://acharya.org

ரம்; (வலமாக) பலமாகவுமாம்; ஆபிஜாத்யத்தை யுண்டாக்கவுமாம். அதிலே தோஷத்தை யுண்டாக்கவுமாம்; இவையன்றுத்தேஶ்யம்; அவனையேத்துகையே உத்தேஶ்யமென்கை. சுஎ.

அரு.—அறுபத்தேழாம்பாட்டு.—சீரணன்-குணங்களை யுடையவனென்றுய், ஜ்ஞாநப் பெருமானென்கிறஇவை இரண்டாலும் ஜ்ஞாந குணங்களெல்லாவற்றுக்கு மாஶ்ரயமென்கிறது. வலம்-பாடுகைக்கு ஜ்ஞாநசக்த்யாதிக ளுண்டாகவுமாம், இல்லையாகவுமாம். குலம்-விலக்ஷணமான ஆபிஜாத்ய முண்டாகவுமாம், லக்ஷணமின்றிக்கே தோஷயுக்த மாகவுமாம். வைகல் - எப்போதும், ஏத்துகையே உத்தேஶ்யம். சூஎ.

திறம்பேல்மின் கண்டீர் திருவடிதன் நாமம்,
மறந்தும் புறந்தொழா மாந்தரை,—இறைஞ்சியும்
சாதுவராய்ப் போதுமின்களென்றான், நமனுந்தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு. சுஅ.

அந்.—நமனும் தன் தூதுவரை கூவி செவிக்கு, திருவடி தன் (5) நாமம் மறந்தும் புறம் தொழா மாந்தரை (10) இறைஞ்சியும் சாதுவராய் போதுமின்கள்; திறம்பேல்மின் கண்டீர் என்றான். (15)

அர்.—யமன் தன் தூதர்களை யழைத்து (அவர்கள்) காதில் ஸர்வேஶ்வரனுடைய (ரு) திருநாமத்தை மறந்திருந்தாலும் தேவதாந்தரங்களை ஆஶ்ரயியாத மனுஷ்யர்களை (௧0) வணங்கி அநுகூலர்களாகப் போவீர்கள். (இதைத்) தவிரவேண்டாம் என்றான். (௧௫) சூஅ.

வ்யா.—அவ.—அறுபத்தெட்டாம்பாட்டு.— (திறம்பேல்மினித்யாதி) பகவத் பரிக்ரஹமேபலமென்னுமித்தை (க) "ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய" என்கிற ஶ்லோகத்தின்படியாலே விவரிக்கிறார்.

(திறம்பேல்மின் கண்டீர்) திறம்பாதே கொள்ளுங்கோளென்னும்போது நாலுபத்தோலை மறுக்கவுமாம். (திருவடி யித்யாதி) "பரிஹரமதுஸூதநப்ரபந்நான்" என்கிறபடியே ஸ்வாமியினுடைய திருநாமத்தை மறக்கவுமாம், தேவ

(க) ஸ்ரீ விஷ்ணுபுராணம். ௩, எ. ௧௪.

http://acharya.org

தாந்தரபஜநம் பண்ணுதொழிகை இவன் ப்ரபந்நனுகையாவது. பர்த்தாவின்பக்கல் ஆநுகூல்யம் க்ரமத்தாலே பிறக்கவுமாம், பர்த்ராந்தர பரிக்ரஹமிறே அவனுக்காகாமைக்கடி. (மாந்தரை) மநுஷ்யரை. (இறைஞ்சியு மித்யாதி) அவர்களை நமிந்திலோமென்றிருக்க வொண்ணுது; "வாஸஹஸ்ரு - பாசஹஸ்தம்" என்கிறக்ரூரவேஷத்தைத் தவிர்ந்து, விநீதவேஷராய் அஞ்சலி ப்ரணுமாதிகளைப் பண்ணிப்போருங்கோளென்கிருர். (நமனும்) (க)"ஸமஇதி-ஸமஇதி" என்றுசொல்லப்படுகிறவனும். (தன் தூதுவரை) "ஸ்வபுருஷம்-ஸ்வபுருஷம்" என்றபடி. (செவிக்கு) "கர்ணமூலே - கர்ணமூலே" என்றபடி. அந்தரங்கர்க்கு வார்த்தை சொல்லாநிற்கச் செய்தே, ப்ரகாசிக்கிலென்னுகிறதோ வென்று நெஞ்சு பறைகொட்டுகிறபடி. கூஅ.

அரு.—அறுபத்தெட்டாம்பாட்டு.—திறம்புதல்-சலிக்கையாய், அத்தால் அவன்வார்த்தையை மறுக்கையைச் சொல்லுகிறது, (ஸமஇதி) ப்ரஹ்மாதிகளோடே ஸமமாகச் சொல்லப்படுகிறவனு மென்றபடி. செவியிலே சொல்ல வேண்டுவானென்னென்ன. அருளிச்செய்கிருர் (அந்தரங்க ரித்யாதி). பறைகொட்டுகை-திடுக்கு திடுக்கு என்கை. கூஅ.

செவிக்கின்ப மாவதுவும் செங்கண்மால் நாமம்,
புவிக்கும் புவியதுவே கண்டீர்;—கவிக்கும்
நிறைபொருளாய் நின்றுனை நேர்பட்டேன்;பார்க்கில்
மறைப்பொருளு மத்தனையே தான். கூகூ.

அ.— செவிக்கு இன்பமாவதுவும் செம்கண் மால் நாமம் (5) புவிக்கும் புவி அதுவேகண்டீர். கவிக்கு நிறை பொருளாய் (10) நின்றுனை நேர்பட்டேன். பார்க்கில் மறைப்பொருளும் அத்தனையேதான். (15)

அர்.—செவிக்கும் ப்ரியமாயிருப்பதும் சிவந்தகண்களையுடைய ஸர்வேஶ்வரனுடைய திருநாமமே. (டு) லோகத்தார்க்கும் ஸாதக மானஸ்தாநம் அந்தத்திருநாமமே. கவிபாடுகைக்கும் பூர்ணவிஷயமா (கo) யிருக்கிற ஶ்ரியபதியை யடைந்தேன். விசாரித்துப்பார்த்தவிடத்தில் வேதார்த்தமு மதுவே. (கடு) கூகூ.

வ்யா.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—(செவிக்கித்யாதி) யமவஶ்யதையைத் தவிர்க்குமளவன்று; செவிக்கினியதுவும் புண்டரீகா

(க) ஸ்ரீ விஷ்ணுபுராணம்.

http://acharya.org

க்கு னுடைய திருநாமம். (புவிக்கும் புவியதுவேகண்டீர்) எனக்கெ த்தனுக்குமேயோ? பூமியிலுள்ளார்க்கெல்லாம் ஸ்தாநம் திருநாமம். (கவியித்யாதி) ஸ்துத்யனுக்கொரு பூர்த்தியின்றிக்கே ஸ்தோதா நிரப்பவேண்டும்படியன்றிக்கே கவிபாடுகைக்கு ஸ்வரூபரூபகுணங்களால் குறைவற்றுநின்றவனை யாத்ருச்சிகமாக லபித்தேன். (பார்க்கிலித்யாதி) யாத்ருச்சிகமாக வன்றிக்கே ஆராய்ந்துபார்க்கில் வேதாந்த ரஹஸ்யமு மத்தனையே.

தாமொருவ னாகித் தரணி யிடந்தெடுத்து, சுகூ.
ஏமொருவ னாமெயிற்றில் தாங்கியதும்,—யாமொருவன்
இன்று வறிகின்றே னல்லேன், இருநிலத்தைச்
சென்றுங் கடிப்படுத்தசேய்.

எ0.

அ.—சேய்தான் ஒருவனாகி சென்று இரு நிலத்தை (5) ஆங்கு அடிப்படுத்த ஏமொருவனாய் தரணி இடந்தெடுத்து (10) எயிற்றில் தாங்கியதும் யாமொருவன் இன்று அறிகின்றே னல்லேன். (15)

அர்.—வாமநனை தான் தனியே சென்று பரந்த பூமியைப் (ரு) பரிக்ரஹீத்தகாலத்தில் திருவடிகளின் கீழகப்படுத்தினதையும், அத்விதீயவராஹமாய் பூமியைக் குத்தியெடுத்துக் (க0) கோரைப்பல்மேல் தரித்ததையும் நாமொருவனுமே இப்போதாக அறியாதிருக்கிறேனென்று. (கரு)

எ0.

வ்யா.—அவ.—எழுபதாம்பாட்டு.—(தாமொருவன்) வேதாந்த ரஹஸ்ய மிதுவென்றிருந்தபடி எங்ஙனேயென்னில், நாமொருத்தனுமின்றாக வறிந்ததோ; ப்ரஸித்தமன்றோவென்கிறார்.

(தாமொருவனாகி.) வாமநனாய். (இருநிலத்தித்யாதி.) வாமநனாய், பரப்பான பூமியை வ்யாபித்துத் தன்திருவடிக்குள்ளே யடங்கும்படி இட்டுக்கொண்டு, அச்செயலாலே அத்விதீயனாய், ப்ரளயங்கொண்ட பூமியை அண்டபித்தியில் நின்றும் ஒட்டுவிடும்படி யிடந்தெடுத்து மஹாவராஹ ரூபியாய்ப் பெரியபூமியைத் திருவெயிற்றி லேகதேசத்திலே தரித்ததும் நாமொருத்தனு மின்றாகவறிந்ததோ? எ0.

அரு.— எழுபதாம்பாட்டு.— (யாமொருவனின்று வறிகின்றேனல்லேன்) அறிகின்றேனல்லே னென்று முழுச்சொல்லாய், அறியாதிருக்கிறவ னின்றாக நாமொருவனுமே யன்று; என்றுமெல்லாருமறியார்களென்று அர்த்தமாக்கி அருளிச்செய்கிறார் (ப்ரளயங்கொண்ட இத்யாதி).

எ0.

http://acharya.org

சேய னணியன் சிறியன் மிகப்பெரியன்,
ஆயன் துவரைக்கோ னாய்நின்ற—மாயன், அன்
றோதிய வாக்கதனைக் கல்லா ருலகத்தில்,
ஏதிலராய் மெய்ஞ்ஞான மில். எக

அந்.—சேயன் அணியன் மிகப்பெரியன் சிறியன் மாயன் (5) துவரைக்கோனாய்நின்ற ஆயன் அன்று ஓதிய வாக்கதனை (10) உலகத்தில் மெய் ஞானம் இல் (15) ஏதிலராய் கல்லார். (16)

அர்.— தூரஸ்தனும் ஸமீபஸ்தனும் மிக்கமேன்மையை யுடையனும் அத்யந்தஸுலபனும் ஆஶ்சர்யசேஷ்டிதனும் (ரு) த்வாரகாநாதனுமெழுந்தருளியிருக்கிற கோபாலன் பாரதயுத்தத்தில் அருளிச்செய்த சரமஶ்லோகத்தை (கo) லோகத்தில் யதார்த்த ஜ்ஞாந மில்லாதவர்களாய் (கரு) சத்ருக்களாய் அப்யஸியாதவர்க ளாவார்கள். (கசு) எக.

வ்யா.— அவ.— எழுபத்தோராம்பாட்டு.— (சேயன்) ப்ரளயங்கொண்டபூமியை யெடுத்துரக்ஷித்தது அறியாதிருந்தவளவேயோ, ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் எடுக்க அவனருளிச்செய்த வார்த்தையைத் தானறியப்பெற்றேமோ வென்கிறார்.

(சேயன் மிகப்பெரியன்.) (க) "யதோவாசோநிவர்த்தந்தே - யதோவாசோநிவர்த்தந்தே" என்று வாங்மனஸ்ஸுக்களுக்கு நிலமில்லாதபடியாலே ப்ரஹ்மாதிகளுக்கும் தூரஸ்தனாயிருக்கும். (சிறியனணியன்) ஸம்ஸாரிகளுக்கு இவ்வருகாய்ப் பிறந்து அநுகூலர்க்கு அண்ணியனாயிருக்கும். (ஆயனித்யாதி) அண்ணியனானமைக்கு உதாஹரணம், இடையனாய், ஶ்ரீமத்த்வாரகைக்கு நிர்வாஹகனாய், ஒரு க்ஷுத்ரனுக்குத் தோற்கவல்ல ஆஶ்சர்ய குணத்தையுடையவன் தேர்த்தட்டிலேநின்று "உன்னுடைய ஸகலதூருக்கும் நானேகடவேன்; நீசோகிக்கவேண்டா" என்றருளிச்செய்தவார்த்தையைத் தஞ்சமாக நினைத்திருக்கைக் கடியான தத்வஜ்ஞாந மின்றிக்கே ஈஶ்வரன் (உ) "தாநஹம்த்விஷத:க்ரூராந் - தாநஹம்த்விஷத:க்ரூராந்" என்று நினைக்கும்படி சத்ருக்களாய், தாங்களும் க்ருஷ்ணனெங்களுக்கு சத்ருவென்று மிருப்பார்கள். எக.

(க) தைத்திரீயம் ஆநந்தவல்லி. (உ) கீதை - கசு. கக.

http://acharya.org

அரு.—எழுபத்தோராம்பாட்டு.—க்ஷத்ரன்-ஜராஸந்தன், உகத்து மெய்ஞ்ஞாநமில் ஏதிலராய்க் கல்லா ரென்றபடி. எக

இல்லற மில்லேல் துறவறமில் லென்னும்
சொல்லற மல்லனவும் சொல்லல்ல,—நல்லறம்
ஆவனவும் நால்வேத மாத்தவமும், நாரணனே
ஆவதீதன் றென்பாரார். எஉ

அந்.—இல் என்னும் இல்லறம் இல்லேல் துறவறம் (5) சொல் அல்லன அறமும் சொல்லல்ல. நல்லறமாவனவும் (10) நால்வேதம் மா தவமும் நாரணனேயாவது ஈதன்று (15) என்பார் ஆர்? (19)

அர்.—(வேதத்தில்) உபாயங்களாகச் சொல்லப்பட்ட க்ருஹஸ்ததர்மமும் அல்லாத நிவ்ருத்திதர்மமும் (ரு) (இதிஹாஸ புராணங்களில்) ப்ரதிபாதிக்கப்பட்ட அல்லாத தர்மமும் ஒருசொல்லன்று (உபாயங்களாகமாட்டா). விலக்ஷணங்களான கர்மஜ்ஞாநாதிகளும் (கo) நாலுவேதங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஶ்லாக்யமான தபஸ்ஸும் நாராயணனுடையப்ரஸாதத்தாலே பலப்ரதங்களாகும். இப்படியன்று (கரு) என்று சொல்லுவா ரார்? (ஒருவரும் சொல்லார்கள்). (கஎ) எஉ.

வ்யா.—அவ.—எழுபத்திரண்டாம்பாட்டு.—(இல்லறம்) நீரோதி னீராகில் இதுக்குப்பொருள் சொல்லுமென்னச் சொல்லுகிறார்.

(இல்லறமில்லேல்) கர்மயோகமன்றாகில்; ப்ரவ்ருத்தி தர்மமன்றாகி லென்றுமாம். (துறவறமில்லென்னும் சொல்) நிவ்ருத்தி தர்மம் ஸ்தாநமென்னுமது ப்ரமாணம். ஜ்ஞாநயோகமென்றுமாம். (அறமல்லனவும் சொல்லல்ல) அல்லாத தர்மங்களை விதிக்கிறவை ப்ரமாணங்களுமன்று. அல்லாத தர்மங்களென்கிறதும், கர்த்ருத்வ பலாபிஸந்தி ரஹிதமாக அநுஷ்டிக்கும் கர்மங்க ளன்றிக்கே இதிஹாஸ புராணங்களிற் சொல்லுகிற நாமஸங்கீர்த்த நாதிகளாகவுமாம். "சொல்லறமல்லன" என்று பதச்சேத மானபோது ப்ரமேயபரம். "இல்லென்னுஞ்சொல்" என்றபோது ப்ரமாணபரம். (நல்லறமாவனவும்) பலாபிஸந்திரஹிதமான கர்மங்கள். இதிஹாஸ புராணங்களிற் சொல்லுகிற நாமஸங்கீர்த்தனங்கள். (நால்வேத மாத்தவமும்) பூர்வபாகத்தில்சொன்ன கர்மயோகம், இவையெல்லாம் நாராயண ப்ரஸா

http://acharya.org

தமடியாக. இதர தர்மங்களைச் சொல்லுகிறது ப்ரமாணங்க ளன்றென்று நீர்சொல்லுகிற தெத்தாலே யென்னில், அவை பலப்ரதங்களாம்போது, பகவத் ப்ரஸாதம் வேணும். பகவான் உபாயமாமிடத்தில் அவை ஸஹகரிக்க வேண்டாவென்னும் ப்ரமாண பலத்தாலே சொல்லுகிறேன். (ஈதன் றென்பாரார்) அல்லாதவை போலன்றிக்கே உபாயமாகவற்றானஇத்தை அன்றென்ன வல்லாருண்டோ.

அரு.— எழுபத்திரண்டாம்பாட்டு.— இல்லறம்—க்ருஹஸ்தன் பண்ணுகிறதர்மம்; கர்மாதிகளென்றபடி. மேல்தெரியாது. ஆனாலும் மோக்ஷோபாயமான கர்மாதிகளைப் ப்ரதிபாதிக்கிற ப்ரமாணங்களும் தத்ப்ரமேயமான கார்ஹஸ்த்யாதி தர்மங்களுமான இவை ப்ரமாணங்களுமன்று; ப்ரமேயங்களுமன்று; இனிப்ரமாணம் சரமஸ்லோகமே. தத்ப்ரமேயமும் ஸித்தோபாயமான ஈஸ்வரனே என்று பாட்டுக்குத் தாத்பர்யம். பதத்தோறும் தெரிந்தால் கண்டுகொள்வது. எஉ.

ஆரே யறிவா ரனைத்துலகு முண்டுமிழ்ந்த,
பேராழி யான்றன் பெருமையைக்,—கார்செறிந்த
கண்டத்தா னெண்கண்ணு னெ்காணன், அவன்வைத்த,
பண்டைத்தா னத்தின் பதி.   எங.

அந்.— அனைத்து உலகம் உண்டு உமிழ்ந்த பேர் (5) ஆழியான்தன் பெருமையை அறிவார் ஆர். அவன் (10) வைத்த பண்டை தானத்தின் பதி செறிந்த (15) கார் கண்டத்தான் எண்கண்ணன் காணான். (19)

அர்.—ஸகல லோகங்களையும் அமுதுசெய்து வெளிப்புறப்படவிட்டவனாய், பெரிய (நு) திருச்சக்கரத்தை யுடையனான ஸ்ரீக்ருஷ்ணனுடைய மஹிமையை யறியத்தக்கவர் யார்? (ஒருவருமறியார்). அந்த ஸ்ரீக்ருஷ்ணன் (கo) ஸாதித்துவைத்த அநாதியாய் பரமபதத்துக் குபாயமான சரமஸ்லோகத்தை நிபிடமான (கரு) கறுப்பைக் கண்டத்திலுடையநீலகண்டனும் (அறியான்). எட்டு நேத்ரங்களையுடைய ப்ரஹ்மாவு மறியான். (கக) எங.

வ்யா.—எழுபத்து மூன்றாம்பாட்டு.—(ஆரேயறிவார்) இப்பாட்டையும் பட்ட ரருளிச்செய்தார். (ஆரேயித்யாதி) ஸகலலோகத்தையும் வயிற்றிலே வைத்து வெளிநாடுகாண உமிழ்ந்த பெரியவனுடைய நைரபேக்ஷ்யத்தை யாரறிவார்? இவனுடைய பெருமையைப் பரிச்சேதிக்க வல்லாரா ரென்றுமாம், (அவனித்யாதி) அவ

http://acharya.org

னென்று முண்டாக்கிவைத்த பரமபதத்தை நீலகண்டன், அஷ்ட நேத்ரனான ப்ரஹ்மா என்கிறவர்களால் காணப்போகாது. (க) "க்ருஷ்ணம்தர்மம் ஸநாதநம்" என்கிறவன் உபாயபாவமிவர்களா லறியப்போகா தென்றுமாம். எ௩.

அரு.—எழுபத்துமூன்றாம்பாட்டு.—(பண்டைத்தானத்தின்பதி) என்று முண்டா யிருக்கிறபரமபத மாதல்,பதி-பதி(வழி)யாய், பந்தாவென்றாய், வழி உபாயமாகையாலே ஸநாதந உபாயமென்னுதல்.

பதிப்பகைஞர்க் காற்றாது பாய்திரைநீர்ப் பாழி,
மதித்தடைந்த வாளரவந் தன்னை,—மதித்தவன்றன்
வல்லாகத் தேற்றிய மாமேனி மாயவனை,
அல்லாதொன் றேத்தாதென் னா. எச.

அ௩—பதிப்பகைஞர்க்கு ஆற்றாது பாய் திரை நீர் (5) பாழி மதித்து அடைந்த வாள் அரவம்தன்னை (10) மதித்து அவன்தன் வல் ஆகத்து ஏற்றிய (15) மா மேனி மாயவனை யல்லாது ஒன்று என்நா (20) ஏத்தாது. (21)

அர்.—ஸஹஜசத்ருவானபெரியதிருவடிக் கெதிர்நிற்கையையும் ஸஹியாமல் பரந்த அலைகளையுடைய நீர்நிறைந்த (ரு) ஸமுத்ரம்போல் குளிர்ந்ததனதுபடுக்கையை ரக்ஷகமாகநினைத்து ஆஸ்ரயித்த தேஜஸ்ஸையுடைய ஸுமுகனென்கிறஸர்ப்பத்தை (க௦) யாதரித்து அப்பெரியதிருவடியினுடைய பலிஷ்டமான திருமேனியிலேயிட்டு (ரக்ஷித்தவனாய்) (கரு) பெரிய திருமேனியையுடையனாய் ஆஸ்சர்யபூதனான ஸர்வேஸ்வரனையல்லது வேறொருதேவதையை என்நாக்கு (உ௦) ஸ்தோத்ரம்செய்யாது. (உக) எச.

வ்யா.—அவ.—எழுபத்து நாலாம்பாட்டு.—(பதி) (உ) "நக்ஷேர இக்ஷ்வாகு நக்ஷமாமி கதாசந" (௩) "நத்யஜேயம் கதஞ்சந" ஆஸ்ரிதர்பக்கல் அபகாரம்பண்ணினாரை ஒருகாலும் பொறேனென்ற வார்த்தைக்கும், மித்ரபாவமுடையாரை மஹாராஜர் தொடக்கமானார் விடவரிலும்விடேனென்ற வார்த்தைக்கும் அவிருத்தமாகச் செய்தருளினபடி-ஸுமுகனென்கிற ஸர்ப்பத்தைஆமிஷமாகத்திருவடி பாதாளத்திலே தேடிச்செல்லுகிற படியை யறிந்து, அது

(க) பாரதம். ஸபாபர்வம். ௩.அ. உ௩.
(உ)
(௩) ஸ்ரீ ராமாயணம் - யுத்த. கரு - ௩.

http://acharya.org

வும், கண்வளர்ந்தருளுகிற திருப்பள்ளிக் கட்டிலைக் கட்டிக்கொண்டு கிடக்க, திருவடியும் ஸ்ரீபாதந்தாங்குவார் சொல்லும் வார்த்தைகளைச் சொல்ல, இஸ்ஸர்ப்பத்தைத் திருவடி கையிலே காட்டிக்கொடுத்துத் திருவடியை யிட்டுப் பொறுப்பித்தது. இவனை யவன் கைக்கொள்ளப் பெறுகையாலே இரண்டர்த்தமும் ஜீவித்தது.

(பகைப்பகைஞர்க் காற்றாது) ஸஹஜ சத்ருவான திருவடிக்கஞ்சி அவர்பலம்பொறுக்கமாட்டாது.(பாய்திரைநீர்ப்பாழி) பரந்த திரையையுடைத்தான கடல்போலே திருப்பள்ளிக்கட்டில். ஓரோயுகத்திலே ஓரோவிடங்களிலே எல்லாம் பிறக்கக் கூடுகையாலே திருப்பாற்கடல் தன்னிலே யாகவுமாம். (மதித்தடைந்த) சரணாகத ரொருதலையானால் பிராட்டி திருவடி திருவநந்தாழ்வானை அஸாதாரண பரிகரத்தை விட்டும் ரக்ஷிப்பானொருவனென்றும் நிஸ்சயித்தடைந்த. (வாளரவம்) சரண்யன் அங்கீகரிப்பதுக்கு முன்னே அவனுடைய சீலவத்தையாலே தன் கார்யம் தலைக்கட்டிற்றென்று பிறந்த ஒளி. (க) "அந்தரிக்ஷகதஸ் ஸ்ரீமாந் - அந்தரிக்ஷகதஸ்ஸ்ரீமான்" என்னும்படியே. (மதித்து) நெஞ்சில் கொண்டென்னும்படியே சரணாகதனாக நினைத்து. (அவனித்யாதி) திருவடிதானே ப்ரஸந்நனாய்த் தன் தோளிலே தரிக்கும்படி பண்ணி அத்தாலே நிறம்பெற்று க்ருதக்ருத்யனாய் ஆஸ்சர்யயுக்தனான ஈஸ்வரனை யொழிய வேறொன்றையேத்தாதென் நா. வேறொன்றென்றது - தேவதாந்தரங்கள் பக்கல் அநாதரம். எச.

அரு.— எழுபத்துநாலாம்பாட்டு.— பதிப்பகை - வழிவழியாக வருகிற சாத்ரவம். பரபலம் போலே திருவடிக்கு விஹிதமான ஹிம்ஸை. எச.

நாக்கொண்டு மானிடம் பாடேன், நலமாகத்
தீக்கொண்ட செஞ்சடையான் பின்சென்று,என்றும் – பூ
வல்லாவா றேத்த மகிழாத, வைகுந்தச் [க்கொண்டு
செல்வனார் சேவடிமேல் பாட்டு. எ௫.

அ்.—தீக்கொண்ட செம் சடையான் வலமாக பூ (5) கொண்டு சென்று என்றும் வல்லவாறு ஏத்த (10) மகிழாத வைகுந்தச்செல்வனார் சே அடிமேல் பாட்டு (15) நாக்கொண்டு மானிடம் பாடேன். (18)

(க) ஸ்ரீ ராமாயணம் யுத்த. கஎ.

http://acharya.org

அர்.—நெருப்புப்போல் சிவந்த ஜடையையுடையருத்ரன் தன் யோக்யதாநுகுணமாகப் புஷ்பங்களை (௫) ஸம்பாதித்துக்கொண்டு போய் எப்போதும் தன்சக்திக்குத்தக்கபடி ஸ்தோத்ரம்செய்ய (௧௦) (அதைத்தனக்கொருஅதிசயமாகநினைத்து) ஸந்தோஷியாத ஸ்ரீவைகுண்டநாதனுடைய அழகிய திருவடிகள்மேல் பாசுரங்களைச்சொல்லத்தக்க (௧௫) நாவினால் மநுஷ்யனைப் பாடமாட்டேன். (௧௮) ௭௫

வ்யா.—எழுபத்தைந்தாம்பாட்டு.—(நாக்கொண்டு மானிடம்பாடேன்) அவனைப்பாடக்கடவ நாவைக்கொண்டு க்ஷுத்ரமநுஷ்யனைப்பாடேன். (தீக்கொண்ட செஞ்சடையான்) அக்நிபோலே சிவந்த ஜடையையுடையவன் அன்றிக்கே (க)"அனற்கங்கையேற்றான்" என்கிறபடியே அக்நியையும் தரித்துச் சிவந்த ஜடையையுமுடையனென்றுமாம். (சென்றித்யாதி) தானேசென்று புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு காலமெல்லாம் ஸத்ருசமாகத்தன் சக்தியுள்ளவளவுஸ்துதிக்க. (மகிழாதவித்யாதி) பரமபதத்தி லைஶ்வர்யத்தையுடையனாகையாலே க்ஷுத்ரரான இவர்களைத்த அவிக்ருதனாயிருக்கிறவனுடைய திருவடிகளில் பாட்டைக்கொண்டுமநுஷ்யரைப்பாடேன். ௭௫

பாட்டு முறையும் படுகதையும் பல்பொருளும்,
ஈட்டிய தீயு மிருவிசும்பும்,—கேட்ட
மனுவும் சுருதி மறைநான்கும், மாயன்
தனமாயை யிற்பட்ட தற்பு. ௭௬

அர்.—பாட்டும் முறையும் படுகதையும் பல் பொருளும் (5) ஈட்டிய தீயும் இரு விசும்பும் கேட்ட (10) மனுவும் சுருதி மறைநான்கும் மாயன் தனமாயையில் (15) பட்ட தற்பு. (17)

அர்.—பாசுரங்களும் ஸ்ரீராமாயணமும் முன்நடந்த இதிஹாஸங்களைப் ப்ரதிபாதிக்கிற மஹாபாரதமும் (அவற்றில் சொல்லப்பட்ட) அநேக அர்த்தங்களும் (௫) செறிந்த அக்நியும் விசாலமான ஆகாசமும் (ஆப்ததமமென்று) கேட்கப்பட்ட (௧௦) மனுஸ்ம்ருதியும் (எழுதாமலே குருமுகமாகக்) கேட்கப்பட்ட நான்குவேதங்களும் ஆஸ்சர்யபூதனான ஸர்வேஸ்வரனுடைய ஸங்கல்பத்தினால் (௧௫) உண்டான தத்வங்கள். (௧௭) ௭௬.

(க) முதல் திருவந்தாதி. ௬௭.

http://acharya.org

வ்யா.— அவ.— எழுபத்தாறும்பாட்டு.— இப்படி புராணங்களில் பரக்கச்சொல்லப்பட்ட அர்த்தங்கள், காரணமான அக்நி, வ்யாபகமான ஆகாசம் (க) "யமெதகிஞ்சநுரவத்தத்பேஷஜம்-யத்வை கிஞ்சமநுரவதத்தத்பேஷஜம்" என்று ச்ருத்யாதிகளி லாப்ததமனுக்கேட்டமநுவும், என்று மோதுவித்துப் போருகிற நாலுவேதமும் இவையெல்லா மாச்சர்யபூதன் ஸங்கல்பத்திலே யுண்டான உண்மையுடைய. எசு.

அரு.—எழுபத்தாறும்பாட்டு.—பாட்டும் - அருளிச்செயலும்; முறையும்-ஸ்ரீமத்ராமாயணமும்; படுகதையும்-மஹாபாரதாதி புராணங்களும்; பல்பொருளும்—இவற்றால் ப்ரதிபாதிக்கிற அர்த்தவிசேஷங்களும்; "தற்பு" என்று ஸத்தையாய் உண்மையை யுடைத்தென்றபடி. எசு.

தற்பென்னைத் தா னறியா னேலும், தடங்கடலைக்
கற்கொண்டு தூர்த்த கடல் வண்ணன்,—எற்கொண்ட
வெவ்வினையும் நீங்க விலங்கா மனம் வைத்தான்,
எவ்வினையு மாயுமால் கண்டு. எஎ

அந்.—தடம் கடலை கல்கொண்டு தூர்த்த கடல் (5) வண்ணன் தான் என்னை தற்பு அறியானேலும் (10) என் கொண்ட எவ்வினையும் நீங்க கண்டு (15) விலங்கா மனம் வைத்தான் ஆல் எவ்வினையும் (20) மாயும். (21)

அர்.—விசாலமான ஸமுத்ரத்தைக் கற்களினு லடைத்த ஸமுத்ரம்போன்ற (ரு) திருமேனியையுடைய (ஸர்வேச்வரனை) தான் என்னை யதார்த்தமாக அறியானாகிலும் (க௦) என்னை (க்ரஹித்துக்கொண்ட ஸகலபாபங்களும் தொலையும்படி கடாக்ஷித்து (கரு) (என்மனஸ்ஸை விஷயாந்தரங்களில் செல்லாதபடி செய்து) (என்னிடத்தில்) திருவுள்ளத்தை வைத்தான். ஆகையால் ஸகலபாபங்களும் (உ௦) நசிக்கும். (உக) எஎ.

வ்யா.—எழுபத்தேழாம்பாட்டு.— (தற்பித்யாதி) என்னையுள்ளபடி யறியானாகிலும். (தடங்கடலைஇத்யாதி) அரியது செய்யுமவன், ஆழக்கடல கல்லைக்கொண்டு நீர்மேலே அணைகட்டினவன். (எற்கொண்டவித்யாதி) நானுருமாயும்படி என்னை க்ரஸித்த மஹாபாபமும் நசிக்

(க) யஜுர்வேதம், உ-உ.

http://acharya.org

கும்படி வேறொருவிடத்திலும் போகாதபடி திருவுள்ளத்தாலே கொண்டு என்பக்கலிலே மநஸ்ஸைவைத்தான். ஆதலால் பாபமென்று சொல்லப்படுகிறவை யடையமாயும். எஎ

அரு—எழுபத்தேழாம்பாட்டு.—தற்பு-உண்மை. என்னை-ஆபி முக்யாதிகளு மின்றிக்கே தோஷபூயிஷ்டனை யென்னை. அறியா னேனும்-அறியாதே இப்படி ஸர்வஜ்ஞரா யிருக்கச்செய்தேயும் தோ ஷம்பாராமல் விஷயீகரிப்பதே! இதென்ன அகடிதகடநா ஸாமர்த்ய மென்கிறார், (தடங்கடலைப்பித்யாதி) என்கொண்ட-என்னை க்ரஸித்துக் கொண்ட; எவ்வினையும் நீங்கக்கண்டு விலங்கா மநம்வைத்தான் ஆல்-ஆகையால், எவ்வினையும் மாயுமென்றபடி. எஎ

கண்டு வணங்கினார்க் கென்னாங்கொல், காமனுடல்
கொண்ட தவத்தாற் குமையுணர்த்த — வண்டலம்பும் [ந்
தாரலங்கல்நீண்முடியான் றன்பெயரேகேட்டிருந்து,அ
காரலங்க லானமையா லாய்ந்து. எஅ

அந்.—காமன் உடல் கொண்ட தவத்தாற்கு உமை (5) உணர்த்த வண்டு அலம்பும் தார் அலங்கல் (10) நீள் முடியான்தன் பெயர் கேட்டு இருந்து (15) அங்கு ஆர் அலங்கலானமையால் ஆய்ந்து கண்டு (20) வணங்கினார்க்கு என்னாங்கொல். (22)

அர்.—மந்மதனுடைய உடலை நீறாக்கின தபஸ்ஸையுடைய ருத்ரனுக்குப் பார்வதி (௫) உபதேசிக்க (ஜ்ஞாபகம்பண்ண) வண்டுகள் ஸஞ்சரிக்கிற திருத்துழாய்க் கதிர்களினால்கட்டப்பட்ட மாலையினா லலங்க்ருதமான (௧௦) நீண்ட திருவபிஷேகத்தை யுடைய ஸர்வேஶ்வரனுடைய திருநாமங்களைக் கேட்டு (அதில்) மக்நனாயிருந்து (௧௫) அப்போதுவாடின மாலைபோல் பரவசனானாகையால் விசாரித்து (ஸர்வேஶ்வரனை) ஸேவித்து (௨௦) ஆஶ்ரயித்தவர்களுக்கு என்னவாகும். (௨௨) எஅ.

வ்யா.—எழுபத்தெட்டாம்பாட்டு.—(கண்டு) அபிமதவிஷயத்திலே ப்ராவண்யத்தை விளைத்தவனை அநங்கனாக்கினவன் நெஞ்சுங்கூட ஶ்ரவணமாத்ரத்திலே பரவசமானபடி கண்டால் இவ்வஸ்துவை ஸாக்ஷாத்கரித்து ப்ரணாமாதிகளைப் பண்ணினார்க்கு எத்தனைநன்மை பிறவாதென்கிறார்.

http://acharya.org

(தவத்தாற்கு) தபஸ்ஸுக்கு பலம் ஒருத்தனுடைய ஹிம்ஸையாம்படி நெஞ்சுதிண்ணிய ஞானவானுக்கு. (உமையுணர்த்த) ப்ராஸங்கிகமாக பகவத்குணங்களைக்கேட்டு சிஷ்யாசார்ய க்ரமம்மாறாடி அவள் வாயாலேதான் கேட்டு. (வண்டித்யாதி) மது வெள்ளத்திலே வண்டுகளலையாநின்ற திருத்துழாய் மாலையையும், ஆதிராஜ்ய ஸூசகமான முடியையுமுடைய ஸர்வேஶ்வரன் திருநாமங்களையே கேட்டு நெஞ்சாலே யநுஸந்தித்துக் கொண்டிருந்து. (ஆரலங்கலானமையால்) அலங்கலென்று அசைவாய் பாரவஶ்யத்தைச் சொன்னபடி. எஅ)

அரு.— எழுபத்தெட்டாம்பாட்டு — அவதாரிகையிலே முதல் பதத்துக்குஅர்த்தமாக்கி அருளிச்செய்கிறார் (அபிமதவிஷயேத்யாதி). ஹிமவத்பார்ஶ்வத்திலே ருத்ரன் தபஸ்ஸுபண்ண, பார்வதி பரிசர்யை பண்ணுகிற வளவிலே மந்மதன்வந்து இருவருக்கும் ஸங்கத்தைப்பிறப்பிக்க, அவ்வளவிலே தபஸ்ஸு குலைகையாலே நெற்றியில் கண்ணைத்திறந்து தஹிக்க, அப்போது அநங்கனானானென்றபடி. (உணர்ந்த) ருத்ரன் த்யாநபரனாயிருக்க, அப்போது பார்வதி "நீரெல்லாருக்கு முபாஸ்யராயிருக்க உமக்குத்யாநத்துக்கு விஷயமுண்டோ" என்று கேட்க, அவன் பகவத்குணங்களை அவளுக்குச் சொல்லி "நமக்கு முண்டுகாண்" என்றீடுபட்டான். அவன் சொன்னானாகிலு மிவளுணர்ந்தக்கேட்டு. நீண்முடியான் தன் பெயரே ஆய்ந்திருந்து அங்காரலங்க லானமையால் கண்டுவணங்கினார்க் கென்னாங்கொ லென்றந்வயம். எஅ.

ஆய்ந்துகொண் டாதிப் பெருமானை, அன்பினால்
வாய்ந்தமனத்திருத்த வல்லார்கள்,— ஏய்ந்ததம்
மெய்குந்த மாக விரும்புவரே, தாமுந்தம்
வைகுந்தம் காண்பார் விரைந்து. எகூ.

அந்.—ஆதி பெருமானை அன்பினால் ஆய்ந்துகொண்டு வாய்ந்த (5) மனத்து இருத்தவல்லார்கள் தாமும் தம்வைகுந்தம் விரைந்து (10) காண்பார். தம் ஏய்ந்த மெய் குந்தமாக (15) விரும்புவர். (16)

அர்.—ஜகத்காரணனான ஸர்வேஶ்வரனை ப்ரீதியுடனநுஸந்தித்துக்கொண்டு தகுந்த (௫) மனஸ்ஸில் ஸ்தாபிக்கவல்லவர்களான தாங்கள் தங்கள் ஸ்ரீவைகுண்டத்தை த்வரையாக (௧௦)

http://acharya.org

ஸேவிப்பார்கள். தம்முடன் சேர்ந்திருக்கிற சரீரத்தை வ்யாதி போல் (பரிஹரிக்கத்தக்கதாக) (கூ) ஆசைப்படுவார்கள். (கக)

வ்யா.—அவ.—எழுபத்தொன்பதாம்பாட்டு.—(ஆய்ந்து) பகவத்விஷயத்திலே ருசியுடையவர்கள் அவனை ஏகாந்தமாய் அநுபவிக்கலாம் தேசம் பரமபதமென்றாசைப்பட்டு அதுக்குக் காற்கட்டாயிற்றென்று சொல்லலாம்படி அபிமாநித்தசரீரத்தை (க)"ஸம்ஸ்ரவ வஸவோஷ-சரீரம்வ்ரணவத்பச்யேத்" என்னும்படியே நோயாக விரும்புவர்களென்கிறார்.

(ஆய்ந்தித்யாதி ஜகத்காரண பூதனான ஸர்வேஸ்வரனை ப்ரேமத்தாலே யநுஸந்தித்துக்கொண்டு இருந்துகைக்கு யோக்யமான நெஞ்சிலே வைக்கவல்லவர்கள். (ஏய்ந்த தம்மெய்) "ஷுதேஹா ஹ்ரு மோஹஷ்-ஸ்துலோஹம் க்ருசோஹம்" என்று தானாகச்சொல்லலாம்படியான சரீரத்தை, குந்தமாக-நோயாக. எகூ

அரு.—எழுபத்தொன்பதாம்பாட்டு.—(ஏய்ந்த) ஏய்கை-பொருந்துகையாய், பிரித்துக்காணப்போகாதே தானேஎன்னலாம்படி பொருந்தி யிருக்கை. மனத்திருத்த வல்லார்கள்தாம் தம் வைகுந்தம்-தமக்கு ஏகாந்தபோக யோக்யமான பரமபதத்தை, விரைந்து காண்பாராக, மெய் குந்தமாக விரும்புவரென்றந்வயம். எகூ.

விரைந்தடைமின் மேலொருநாள் வெள்ளம் பரக்க,
கரந்துலகங் காத்தளித்த கண்ணன்,—பரந்துலகம்
பாடின வாடின கேட்டு, படுநரகம்
வீடின வாசற் கதவு. அ0.

அந்.—பரந்து உலகம் ஆடின பாடின கேட்டு (5) படு நரகம் வாசல் கதவு வீடின (10) மேலொருநாள் வெள்ளம் பரக்க உலகம் கரந்து (15) காத்து அளித்த கண்ணன் விரைந்து அடைமின். (20)

அர்.—ஸஞ்சரித்து உத்க்ருஷ்டராய் (ஸந்தோஷத்தினால்) ந்ருத்யம்செய்தவர்கள் கானம்பண்ணின திருநாமங்களைக் கேட்டு (ரு) (ஸகலரு முஜ்ஜீவித்தார்களாகையால்) பாழான நரகத்தின் [illegible]சல் கதவு பிடுங்கிப்போகடப்பட்டது. (கo) முற்காலத்தில் [illegible]ளயார்ணவம் வ்யாபிக்க லோகங்களைத் தன்கர்ப்பத்தில்மறைத்

க)

http://acharya.org

துவைத்து (கரு) வ்யஸநங்களைப்போக்கி ரக்ஷித்த ஸ்ரீக்ருஷ்ண னை சீக்ரமாக ஆஶ்ரயியுங்கோள். (உ0) அம.

வ்யா.—எண்பதாம்பாட்டு.—(விரைந்தடைமினித்யாதி) முன்பு ப்ரளயம்வருகிறதென்று லோகத்தை வயிற்றிலேவைத்து ப்ரளயந்தே டிவந்தாலு மத்தனைபோதும் தெரியாதபடி மறைத்துக் காத்து ரக்ஷி த்த க்ருஷ்ணனை விரைந்தடையுங்கோள். (உலகமென்று) உத்க்ருஷ் டரைச் சொல்லுகிறது. (பாந்தித்யாதி) பரந்து உத்க்ருஷ்டராய் ஆடினவர்கள் பாடின திருநாமங்களைக் கேட்ட நரகத்துவாசல்களில் கதவுவாங்கிப் பொகட்டன. அன்றிக்கே, நரகத்துவாசல்களில் பிடுங் கிப் பொகட்டகதவுகளை நாட்டி(க)"முனியாது மூரித்தாள்கோமின்" என்னும்படியே விரைந்தடையுங் கோளென்றுமாம். கண்ணனென் றது-கண்ணனை யென்றபடி. அ0.

அரு.—எண்பதாம்பாட்டு.—"கண்ணை விரைந்தடைமின்" படு நரக வரசற்கதவுவீடின என்று பிந்நக்ரியையாதல், "கண்ணனைப்பாடி ன ஆடின கேட்டு நரகவாசலில் வீடினகதவுகளை விரைந்தடைமின்" என்று ஏகக்ரியை யாதல்; இத்தால்நரகம் பாழ்த்ததென்னுதல்;போக் குவரத் தில்லாதபடி வாசலை யடையுங்கோ ளென்னுதல்; இரண்டு தாத்பர்யம். அம.

கதவு மனமென்றுங் காணலா மென்றும்,
குதையும் வினையாவி தீர்ந்தேன்,—விதையாக
நற்றமிழை வித்தியென் னுள்ளத்தை நீவிளைத்தாய்,
கற்ற மொழியாகிக் கலந்து. அக.

அந்.—மனம் கதவென்றும் காணலாமென்றும் குதையும் வினையாவி (5) தீர்ந்தேன். நீ கற்ற மொழியாகி கலந்து (10) நல் தமிழை விதையாக வித்தி என் (15) உள்ள த்தை விளைத்தாய். (17)

அர்.—மனஸ்ஸு (பகவத்ஸாக்ஷாத்கார) ப்ரதிபந்தகமென்றும் ஸாக்ஷாத்காரஹேதுவென்றும், (அறிந்து) அலையப்பண்ணுகிற துஷ் கர்மங்களைத் (ரு) தவிர்த்தேன். நீ, (நான்) அப்யஸித்த கவிக்குவாச் யனாயிருந்து (என்னுள்ளத்தில்) கலந்து (க0) ஶ்லாக்யமான தமிழை விதையாக விதைத்து என்னுடைய (கரு) மனஸ்ஸைப் பலிக் கச்செய்தாய். (கஎ) அக.

(க) முதல்திருவந்தாதி. அஎ.

http://acharya.org

வ்யா.—எண்பத்தோராம்பாட்டு.—(கதவித்யாதி) (க) "மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:-மநஏவமநுஷ்யாணும் காரணம்பந்தமோக்ஷயோ:" என்னும்படியே பகவத்விஷயத்தைக் கிட்டாமைக்கு கதவு மனஸ்ஸென்றுமாம்-காண்கைக்கும் பரிகரம் மனஸ்ஸென்றுமாம். (குதையித்யாதி) தடுமாற்றமான தொழில் தவிர்ந்தேன். (விதையித்யாதி) தடுமாற்றம் தீருகைக்குச் சொல்லுகிறது.

அரு.—எண்பத்தோராம்பாட்டு.— மநஸ்ஸை பந்த மோக்ஷங்களுக்குப் பொதுவென்றறிந்து ஆத்மாவினுடைய தடுமாற்றத்தைப் பண்ணக்கடவதான கர்மத்தைத் தவிர்ந்தேன், குதை-அசைவாய், தடுமாறப்பண்ணுகிறவினையென்றபடி.(கற்றமொழியாகிக் கலந்துவிதையாக நல்தமிழை வித்தி என்னுள்ளத்தை நீவிளைத்தாய்), இதுபாபம் போகைக்குமேஹேது, நீதானே கவிரூபமாய் நெஞ்சிலே கலந்து தமிழை விரைத்து உள்ளத்தை ஸபலமாக்கினை யென்றபடி. அக.

கலந்தானென் னுள்ளத்துக் காமவேள் தாதை,
நலந்தானு மீதொப்ப துண்டே,—அலர்ந்தலர்கள்
இட்டேத்து மீசனும் நான்முகனும், என்றிவர்கள்
விட்டேத்த மாட்டாத வேந்து. அஉ

அந்.— வேள் காமன் தாதை அலர்ந்து அலர்கள் (5) இட்டு ஏத்தும் ஈசனும் நான்முகனும் என்று (10) இவர்கள் விட்டு ஏத்தமாட்டாத வேந்து என்னுள்ளது (15) கலந்தான். ஈதொப்பது நலந்தானும் உண்டே. (19)

அர்.—ஸௌந்தர்ய மன்மதனுக்குப் பிதாவாய் விகஸித்த புஷ்பங்களை (ரு) ஸமர்ப்பித்து ஸ்தோத்ரம்பண்ணுகிற ருத்ரன் ப்ரஹ்மா என்றுப்ரஸித்தர்களான (கu) இவர்கள் வாய்விட்டு ஸ்தோத்ரம் செய்யக்கூடாத (மஹிமையுடைய) ஸர்வேஶ்வரனை ஸ்ரீமந்நாராயணன் என்ஹ்ருதயத்தில் (கரு) ப்ரவேசித்தான். இதுக்கு ஸமானமான நன்மை (வேறொன்று) உண்டா? (கிடையாது.) (ககூ) அஉ.

வ்யா.—எண்பத்திரண்டாம்பாட்டு.—(கலந்தானித்யாதி) எல்லாரும் தன்னையாசைப்பட விருக்குமவனென்னை யாசைப்பட்டு ஹ்ருதயத்திலே கலந்தான். அழகாலே எல்லாரையும் அகப்படுத்துங் காமனுக்கு முத்பாதகனானவன். (ஈதொப்பது நலந்தானுமுண்டே)

(க) ஸ்ரீவிஷ்ணுபுராணம். சு-எ.

http://acharya.org

அவன்தான் காட்டக்கண்ட இதுக்குக் கதிர்பொறுக்கிக் கண்டநலங்கள் ஸத்ருசமோ?(அலர்ந்தலர்களித்யாதி) செவ்விப்பூக்களைக் கொண்டேத்துகிற ருத்ரனும் சதுர்முகனும் வாய்விட்டேத்த மாட்டாத ஸர்வாதிகன் என்னுள்ளத்தைக் கலந்தான். அவ்வழகையும் மேன்மையையு முடையவனென்கை. ௮௨.

வேந்தராய்விண்ணவராய் விண்ணாகித்தண்ணளியாய்,
மாந்தராய்மாதாய்மற்றெல்லாமாய்,—சார்ந்தவர்க்குத் [ம்
தன்னாற்றான்நேமியான் மால்வண்ணன்தான்கொடுக்கு
பின்னால்தான் செய்யும்பிதிர். ௮௩.

அந்.—நேமியான் மால்வண்ணன் சார்ந்தவர்க்கு வேந்தராய் விண்ணவராய் (5) விண்ணாகி தண்ணளியாய் மாந்தராய் மாதாய் மற்றெல்லாமாய் (10) கொடுக்கும். தன்னாற்றான் பின்னால் தான் பிதிர் (15) செய்யும். (16)

அர்.—சக்ரதரனாய் ஆஸ்ரிதவ்யாமோஹமே வடிவெடுத்து வந்தாற்போ லிருக்கிற ஸர்வேஸ்வரன், தன்னையாஸ்ரயித்தவர்க்கு ரக்ஷகனாராஜாவாய், பலப்ரதமான தேவதையாய், (௫) போகஸ்தானமான ஸ்வர்க்கமாய் (அங்குதேவர்கள்பண்ணும்) க்ருபையாய், பந்துக்களாய், தாயாய், மற்றெல்லாமுமாயிருந்து (௧0) (ஐஹிகாமுஷ்மிக ஸுகங்களைக்) கொடுக்கும். (இவ்வளவிலும்) தான் த்ருப்தியில்லாதவனாய் மறுபடியும் தான் பிருந்தமோக்ஷத்தையும் (௧௫) கொடுக்கும். (௧௬) ௮௩.

வ்யா.—அவ.—எண்பத்துமூன்றாம்பாட்டு.—(வேந்தராய்) இத்தோடொக்குமழகுண்டோவென்று அத்தை யுபபாதித்துக் காட்டுகிறார்.

(வேந்தராயித்யாதி) சிறியத்தைப் பெரியது தின்றதபடி நோக்கும் ராஜாக்களாய், பூமியிலுள்ளார்க்கு வர்ஷத்தாலே யுபகரிக்கும் தேவர்களாய், பூமியிலுள்ளார் பண்ணின பல மநுபவிக்கும் ஸ்வர்க்கமாய், அங்கிவர்களுக்குப் பண்ணும் தண்ணளியாய், இவர்களுக்கு ஸஜாதீயரான மநுஷ்யராய், அழகாயென்னவுமாம், (௧)“ஸஹஸ்ரஹிவிதாதா-ஸஹஸ்ரம்ஹிபிதார்மாதா” என்னவுமாம். அநுக்தமானவெல்லாமுமாய். (சார்ந்தவர்க்கு)இப்படி யெல்லாமாவது தன் பக்கல் ந்யஸ்தபரரானவர்களுக்கு, (தன்னாற்றான் நேமியான் தான்கொடுக்

(௧)

http://acharya.org

கும்) எல்லாம் செய்தும் ஒன்றுஞ் செய்யானாய்க் கொடுக்கும். (பின்னால்தான் செய்யும்பிதிர்) பின்னைச் செய்யுமது வ்யாவ்ருத்தம்; அவன்குமிழ்நீருண்டிட இவன் குமிழ்நீருண்ணக் காணுமத்தனை. அங.

அரு.—எண்பத்துமூன்றாம்பாட்டு.— மாதுபோலே மாந்தரும் அழகுக்குவாசகம். மற்றெல்லாமாய்-மாதாவாயென்னுதல்; தனித்தனியே மற்றெல்லாமாயென்னுதல். தன்னாற்றான்-கீழ்ச்சொன்ன வற்றிலும் ஆற்றான்-த்ருப்தனாகான். பிதிர்-அதிசயம்; மிச்சமென்றபடி.

பிதிரு மனமிலேன் பிஞ்ஞகன் றன்னோடு,
எதிர்வ னவனெனக்கு நேரான்,—அதிரும்
கழற்கால மன்னனையே கண்ணனையே, நாளும்
தொழுங்காதல் பூண்டேன் தொழில். அச.

அ்.—அதிரும் கழல் கால மன்னனையே கண்ணனையே (5) நாளும் தொழும் தொழில் காதல்பூண்டேன். பிதிரும் (10) மனமிலேன், பிஞ்ஞகன்தன்னோடு எதிர்வன். அவன் எனக்கு (15) நேரான். (16)

அர்.—சப்திக்கிற வீரத்தண்டையினாலலங்க்ருதமான திருவடிகளையுடைய ராஜாவான ஸ்ரீக்ருஷ்ணனையே (ரு) ப்ரதிதினமும் ஆஶ்ரயிக்கையாகிற வ்யாபாரத்திலே ஆசையுடையேனானேன். விஷயாந்தரஸக்தமான (க0) மனஸ்ஸையுடையேனாகாதநான் ருத்ரனோடு ஸமானனாவேன். (ரஜஸ்தமஃ ப்ரதானனான) அந்தருத்ரன் என்னோடு (கரு) ஸமானனாகமாட்டான். (கசு) அச.

வ்யா.—அவ.—எண்பத்து நாலாம்பாட்டு.—(பிதிரும்) அவனோபாதிநானும் வ்யாவ்ருத்தனென்கிறார்.

(பிதிருமனமிலேன்) ஏகரூபமன்றிக்கே யிருக்கிற மநஸ்ஸையுடையேனல்லேன். (பிஞ்ஞகனித்யாதி) (க) "ஐஶ்வர்யம் ஈஶ்வராதிச்சேத் ஜ்ஞாநமிச்சேஜ் ஜநார்தநாத்" என்கிறதேவனோடொப்பான். (அவனெனக்கு நேரான்) ஸத்வம் தலையெடுத்தபோது எம்பெருமான் ரக்ஷகனென்றிருக்கிறவன்எனக்கொப்போ? (அதிருமித்யாதி) த்வநியாநின்ற வீரக்கழலைத் திருவடிகளிலேயுடைய ஸர்வாதிகனான க்ருஷ்ணனைத் தொழுகையே தொழிலாகக் காதல்பூண்ட எனக்கு ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலையெடுத்தபோது (உ) "ஸோऽஹம் ஸர்வேஶ்வரோऽஹம்" என்றிருக்குமவனொப்பன்று. அச.

(க) ப்ரஹ்மாண்டபுராணம். (உ) கீதை-கசு-கச.

http://acharya.org

அரு.—எண்பத்துநாலாம்பாட்டு.—தொழுகையே தொழிலாம்படியானகாதல் பூண்டஎனக்கு. அச.

தொழிலெனக்குத் தொல்லைமால் தன்நாம மேத்த,
பொழுதெனக்கு மற்றதுவே போதும்;—கழிசினத்த
வல்லாளன் வானரர்கோன் வாலி மதனழித்த,
வில்லாளன் நெஞ்சத் துளன். அரு.

அ.—கழிசினத்த வல்லாளன் வானரர்கோன் வாலி மதன் (5) அழித்த வில்லாளன் நெஞ்சத்து உளன். எனக்கு (10) தொழில் தொல்லை மால்தன் நாமம் ஏத்த. (15) எனக்கு மற்று பொழுது அதுவே போதும். (20)

அர்.—அதிககோபத்தையுடையனாய் பலிஷ்டனாய் வாநரராஜாவான வாலியினுடைய கர்வத்தைப் (ரு) போக்கின தநுர்த்தரனான சக்ரவர்த்தித்திருமகன் (என்) ஹ்ருதயத்தில் வாஸம்பண்ணுகிறான். எனக்கு (கo) வ்யாபாரம் அநாதியான ஸர்வேஸ்வரனுடைய திருநாமங்களை ஸ்தோத்ரம்செய்கை. (கரு) எனக்கு எல்லாக் காலமும் அதுக்கே போதுமாயிருக்கிறது. (உo) அரு.

வ்யா.—எண்பத்தைந்தாம்பாட்டு.—(தொழிலித்யாதி) எதிரிகள் சதுரங்கம் பொரப்பொருவீரோ வென்றழைக்க இவர்சொல்லும்படி-எனக்குத் தொழில் புராணனை ஸர்வேஸ்வரனை ஏத்த. (பொழுதித்யாதி) நாங்களு மெல்லாக்கார்யம்செய்து பகவந்நாம ஸங்கீர்த்தநமும் பண்ணுகிறிலோமோவென்ன; எனக்கு ராமவ்ருத்தாந்தங் கிடக்க வேறொன்றுக்குப் போதுபோராது. (கழிசினத்தவித்யாதி) மிக்க சினத்தையுடையனாய் வாநரராஜாவான வாலியுடைய செருக்கைவாட்டின சுக்ரவர்த்தித் திருமகன் என்னெஞ்சிலே ஸந்நிஹிதன். அரு.

அரு.—எண்பத்தைந்தாம்பாட்டு.—மதன்-மதம், செருக்கென்றபடி. அரு.

உளன்கண்டாய் நன்னெஞ்சே யுத்தம னென்றும்
உளன்கண்டாய்; உள்ளுவா ருள்ளத்-துளன்கண்டாய்,
தன்னொப்பான் தானா யுளன்காண் தமியேற்கு,
என்னொப்பார்க் கீச னிமை. அசா.

அ.—நல்நெஞ்சே உத்தமன் உளன்கண்டாய் என்றும் உளன்கண்டாய். (5) உள்ளுவார் உள்ளத்து உளன்கண்டாய்.

http://acharya.org

தமியேற்கு என்னொப்பார்க்கு (10) தன்னொப்பான் ஈசன் தானாய் உளன் இமை. (15)

அர்.—அநுகூலமான ஹ்ருதயமே! புருஷோத்தமன் (நமக்கு ஸத்தாஹேதுவாக) இருக்கிறான்கிடாய். (ப்ரளயாதி) ஸர்வகாலங்களிலு மிருக்கிறான்கிடாய் (௫) த்யாகபரர்களுடைய ஹ்ருதயத்தில் நித்யவாஸம்பண்ணுகிறான்கிடாய். எனக்கும் என்போல்வார்க்கும் (௧௦) தனக்குத்தானே ஸமானனான ஸர்வேஶ்வரன் ரக்ஷகனாக இருப்பனென்று நிஶ்சயித்திரு. (௧௫) அ௬.

வ்யா.—அவ.—எண்பத்தாறும்பாட்டு.—(உளன்) அல்லாதார்க்கும் ஸர்வேஶ்வரன் உளனென்று உபபாதித்தேன். நீயு மிவ்வர்த்தத்தை உண்டென்று நினைத்திருவென்று திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்.

(உளன்கண்டாய்) பரிஹரிக்க வொண்ணாத ஆபத்துவந்தாலும் பரிஹரிக்க வல்லவனுண்டு. (நன்னெஞ்சே) ஸர்வேஶ்வர னுளனென்று உபபாதிக்கப் பாங்கானநெஞ்சே! (உத்தமனென்று முளன்கண்டாய்) இதுக்கு முன்பு நிர்ஹேதுகமாக ரக்ஷித்தவன் ப்ராப்திதசையிலும் ரக்ஷிக்கும். (உள்ளுவாருள்ளத் துளன்கண்டாய்) அவன் ரக்ஷிக்க இத்தலையால் செய்யவேண்டுவது-ஆணையிடாமை. (தன்னொப்பானித்யாதி) அகிஞ்சநனான எனக்கும் என்னைப்போலே உபாயசூந்யரானவர்களுக்கும் தனக்கு உபமாநமின்றிக்கே யுள்ளனான ஈஶ்வரனுளன். (இமை) புத்திபண்ணென்றபடி. அ௬.

இமயப் பெருமலைபோ லிந்திரனார்க் கிட்ட,
சமய விருந்துண்டார் காப்பான்,—சமயங்கள்
கண்டா னவைகாப்பான் கார்க்கண்டன்நான்முகனோடு,
உண்டா னுலகோ டுயிர். அஎ.

அந்.—பெரு இமயமலைபோல் இந்திரனார்க்கு சமயம் இட்ட (5) விருந்து உண்டு காப்பார் ஆர்? சமயங்கள் (10) கண்டான் அவை காப்பான் கார்க்கண்டன் நான்முகனோடு (15) உலகோடு உயிர் உண்டான் ஆர்? (19)

அர்.—பெரிய ஹிமவத்பர்வதம்போல இந்த்ரனுக்கு (மழைபெய்கைக்காக வருஷத்திலொருகாலிடவேணுமென்கிற) ஸங்கேதத்தினால் குவித்திட்ட (௫) அந்நத்தை யமுதுசெய்து (கோகோ

http://acharya.org

பர்களை; ரக்ஷிப்பவர் யார்? ஸித்தாந்தங்களைப் (௧௦) ப்ரவர்த்திப்பித்தவனும் அவைகளை ரக்ஷித்தவனும் நீலகண்டனோடும் சதுர்முகனோடும் (௧௫) லோகங்களோடும் ப்ராணிகளைத் (தன்னுதரத்தில்) வைத்துரக்ஷித்தவன் யார்? (௧௯) அஎ.

வ்யா.—அவ.—எண்பத்தேழாம்பாட்டு.—(இமயவித்யாதி) தம்மையொக்கும் அகிஞ்சநர்க்கிவன் நிர்வாஹக ஞனபடியைக் காட்டுகிறார்.

(சமயவிருந்து) ஸமயம்பண்ணின விருந்து. (ஆர்காப்பார்) இந்த்ரன்பாதகனாய் வர்ஷிக்கிறபோது எம்பெருமானன்றோ காத்தான். இடையரோ? (சமயவித்யாதி) வைதிக ஸமயத்தைக் கண்டானும், அவற்றை ரக்ஷிப்பானும், நீலகண்டன் சதுர்முகன் முதலானவர்கள் துரிதங்களைப் போக்குமவனும், இவ்வாத்மாக்களையும் வயிற்றிலே வைத்துப் பரிஹரித்தானும் எம்பெருமானை யொழிய மற்றார்? அஎ.

அரு.—எண்பத்தேழாம்பாட்டு.—இமயம்-ஹிமவத்பர்வதம். உலகோடு உயிருண்ட வெம்பெருமானை யொழிய மற்றுண்டோ? வேறு காப்பாரில்லை யென்றபடி. அஎ.

உயிர்கொண் டுடலொழிய வோடும்போ தோடி,
அயர்வென்ற தீர்ப்பான்பெயர் பாடி,—செயல்தீரச்
சிந்தித்து வாழ்வாரே வாழ்வார், சிறுசமயப்
பந்தனையார் வாழ்வேல் பழுது. அஅ.

அந்.—உடல் ஒழிய உயிர் கொண்டு ஓடும்போது (5) ஓடி அயர்வுஎன்ற தீர்ப்பான் பெயர் பாடி (10) செயல் தீர சிந்தித்து வாழ்வாரே வாழ்வார். சிறுசமயம் (15) பந்தனையார் வாழ்வேல் பழுது. (18)

அர்.—சரீரத்தைப் பொகட்டுவிட்டு ப்ராணனை யெடுத்துக் கொண்டு (யமபடர்கள்) ஓடும்போது (௫) அவர்களுடனோடி, துக்கமென்றுபேருள்ளவையெல்லாவற்றையும் போக்கவல்லஸர்வேஶ்வரனுடைய திருநாமங்களைக் கானம்செய்து (௧௦) இதரவ்யாபாரங்களைவிட்டு த்யாநித்து ஸுகமாக இருக்கிறவர்களே ஸுகப்படுவார்கள். அற்பமாய் (இந்த கர்மத்துக்கு இதுவேபலமென்று) வ்யவஸ்த்திதமாய் (௧௫) பந்தஹேதுவானகர்மபரவசர்களுடைய வாழ்க்கை நிரர்த்தகம். (௧அ) அஅ.

வ்யா.—அவ.—எண்பத்தெட்டாம்பாட்டு.—(உயிர்) இப்பாட்டிலும் அவ்வர்த்தத்தையே விஸ்தரிக்கிறார்.

http://acharya.org

(உயிரித்யாதி) இவ்வாத்மா சரீரத்தைப்பொகட்டு. ப்ராணனைக் கொண்டு யமபடராலே ப்ரேரிதமாய்ப் போம்போது. (ஓடியித்யாதி) ஆஶ்ரிதரானவர்களை ஆஸ்ரிட்டத்திதொழாதே தானே யோடி அவர்கள் தர்சநத்தாலேவந்த அறிவுகேடுமுதலான துரிதங்களையெல்லாம் போக்குமவன் திருநாமத்தை ப்ரியத்தோடேசொல்லி, இவ்வாத்மா செய்யக்கடவதொன்றுமில்லை; எம்பெருமானே நிர்வாஹகனென்றிருக்குமவர்கள்வாழ்வார். (சிறுசமயமித்யாதி) துக்கஹேதுவான அஹங்கார கர்ப்பமாகையாலே பந்தகமாய் க்ஷுத்ரமான கர்மாத்யுபாய பேதங்களைப்பற்றினார்க்கொரு ப்ரயோஜநமில்லை. அஅ.

அரு.— எண்பத்தெட்டாம்பாட்டு.— அயர்வென்ற - அறிவுகேடென்று சொல்லப்பட்டவைமுதலான; பந்தனையார் - பந்தகஹேதுவான கர்மாத்யுபாயங்களை, அணைந்தவர்கள்-பற்றினவர்கள். இத்தால் சரமகாலத்திலே திருநாமத்தைச் சொன்னாலும் அவர்களையும் யமபடர்கையிலே காட்டிக்கொடானென்றபடி. அஅ.

பழுதாகா தொன்றறிந்தேன் பாற்கடலான் பாதம்,
வழுவா வகைநினைந்து வைகல்—தொழுவாரை,
கண்டிறைஞ்சி வாழ்வார் கலந்த வினைகெடுத்து,
விண்டிறந்து வீற்றிருப்பார் மிக்கு. அகூ,

அ.— பழுதாகாது ஒன்று அறிந்தேன். பாற்கடலான் பாதம் (5) வழுவாவகை நினைந்து வைகல் தொழுவாரை கண்டு (10) இறைஞ்சி வாழ்வார் கலந்த வினை கெடுத்து (15) விண் திறந்து மிக்கு வீற்றிருப்பார். (19)

அர.—வ்யர்த்தமாகாத ஒருஉபாயத்தை யறிந்தேன். (அதாவது) க்ஷீராப்திநாதனுடைய திருவடிகளை (ரு) அஸ்கலிதமாக்கத்திறு லநுஸந்தித்து ப்ரதிதினமும் ஆஶ்ரயித்தவர்களை ஸேவித்து (கo) நம்ரராய் ஸுகிப்பவர்கள் (ஆத்மாவோடு) சேர்ந்திருக்கிற பாபங்களைப் போக்கிக்கொண்டு (கரு) பரமபதவாசலைத் திறந்து (அங்கு) பெரிய மஹிமையுடனிருப்பார்கள். (ககூ) அகூ

வ்யா.— அவ.—எண்பத்தொன்பதாம்பாட்டு.—(பழுதாகாது) பழுதாகாத உபாயங்களில் உத்க்ருஷ்டமான உபாயம். (ஒன்றறிந்தேன்.)பாகவதஸமாஶ்ரயணமென்றறிந்தேன். (கலந்தவித்யாதி) ஆத்மாவோடு அவிநாபூதமான பாபத்தைப்போக்கி ஸ்ரீவைகுண்டத்தில் வாசல்திறந்து அங்கே அதிஸம்ருத்தமான ஜ்ஞாநபக்திகளையுடையராய்

http://acharya.org

பாகவத்கைங்கர்யத்தில் தலைவரான நித்யஸூரிகளுக்கு அடிமைசெய்யப் பெறுவார்கள். அசு.

அரு.— எண்பத்தொன்பதாம்பாட்டு.— இங்கே பாகவதர்களை ஆஶ்ரயிக்கையாலே அங்கு நித்யஸூரிகளுக்கு அடிமைசெய்யப்பெறுவரென்கிறது. அகூ.

வீற்றிருந்து விண்ணாள வேண்டுவார், வேங்கடத்தான்
பால்திருந்து வைத்தாரே பன்மலர்கள்,—மேல்திருந்து
வாழ்வார் வருமதிபார்த் தன்பினராய், மற்றவர்க்கே
தாழ்வா யிருப்பார் தமர். கூ௦.

அந்.—வேங்கடத்தான்பால் பல் மலர்கள் திருந்து வைத்தார் (5) வீற்றிருந்து விண் ஆளவேண்டுவார், மதிவரும் திருந்து (10) பார்த்து அன்பினராய் அவர்க்கே தாழ்வாயிருப்பார் தமர். (15) மற்று மேல் வாழ்வார். (18)

அர்.—திருவேங்கடமுடையான்விஷயமாக அநேக புஷ்பங்களைச் சோதித்து ஸமர்ப்பித்தவர்களே (௫) அத்யதிகமஹிமையுடனிருந்துபரமபதத்தைப் பரிபாலநம்செய்யவேண்டுவார்களாவார்,(ஸர்வேஶ்வரன்) திருவுள்ளத்தி லிருப்பதைச் செவ்வையாய்(க௦)அறிந்து ப்ரீதியுக்தராய், அந்த ஸர்வேஶ்வரனுக்கே அடிமைசெய்யும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தாஸரான பாகவதர்கள் (க௫) இன்னமுமதிகமாக ஸுகிப்பார்கள். (கஅ) கூ௦.

வ்யா.—தொண்ணூறாம்பாட்டு.— (வீற்றிருந்தித்யாதி) விலக்ஷணமான பகவத்கைங்கர்யத்திலே அதிகரித்து ஸ்ரீவைகுண்டத்திலுள்ளார்க்கும் அப்படியே வர்த்திக்கவேண்டி யிருக்கப்பெற்றவர்கள் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே நிரந்தரமாகவே யாஶ்ரயித்தவர்கள். அதிலும் விலக்ஷணமான பாகவதப்ராப்தி காமராய், அதுபெற்றவர்கள் பாகவதராலே அங்கீக்ருதரானவர்க ளென்கிறார். (வருமதியித்யாதி) எம்பெருமான் திருவுள்ளத்திலே செல்லுவன அறிந்து அதுக்கீடான அடிமைகளிலே ஸ்நேஹித்து அவன்பக்கல் ப்ரவணரானவர்களாலே விஷயீக்ருதரானவர்கள். கூ௦.

அரு.— தொண்ணூறாம்பாட்டு.— "யயோபாஸநம் ஹஶ்ரூஷ-யதோபாஸநம்பலம்" என்கிறபடியே பகவத்ஸமாஶ்ரயணத்தாலே பகவானைப்பெறுவர்; பாகவதஸமாஶ்ரயணத்தாலே பாகவதர்களைப்பெறுவரென்கிறதிப்பாட்டு - விண்ணாள - அங்குள்ளார்க்கும் பூஜ்யராய்,

அவர்களுமப்படியே வர்த்திக்க - தங்களிடத்திலே கைங்கர்யத்திலே அதிகரித்து வர்த்திக்க. மேல்திருந்து என்ற பதத்துக்கு மர்த்தமாய் மேலுக்கலதாரிகை யருளிச்செய்கிறார் (அதிலுமித்யாதி). மற்றவர்க் கேஈஸ்வரனுக்கே, தாழ்ந்த பாகவதர்களுக்கு முத்தமர் அவர்களை யாஸ்ரயித்தவர்களென்றபடி. க0.

தமராவார் யாவர்க்கும் தாமரை மேலார்க்கும்,
அமரர்க்கு மாடரவார்த் தார்க்கும்,—அமரர்கள்
தாள்தாமரைமலர்க ளிட்டிறைஞ்சி, மால்வண்ணன்
தாள்தாமரையடைவோ மென்று. கக.

அ.—மால்வண்ணன் தாள்தாமரை மலர்கள் இட்டு இறைஞ்சி (5) தாள்தாமரை அடைவோமென்று தமராவார் தாமரைமேலார்க்கும் ஆடு (10) அரவு ஆர்த்தார்க்கும் அமரர்க்கும் யாவர்க்கும் அமரர்கள். (15)

அர்.—ஸ்யாமவர்ணனான ஸர்வேஸ்வரனுடைய திருவடித்தாமரைகளிலே புஷ்பங்களை ஸமர்ப்பித்து நம்ராய் (ரு) அத்திருவடித்தாமரைகளை யடைவோமென்று (நிர்ப்பரராயிருக்கும்) பாகவதர்கள், கமலாஸநனான ப்ரஹ்மாவுக்கும் ஆடுகிற (க0) ஸர்ப்பத்தை ஹாரமாகவுடைய ருத்ரனுக்கும் (மற்ற) தேவர்களுக்கும் எல்லாருக்கும் (பூஜ்யரான) தேவதைகளாவார்கள். (கரு) கக.

வ்யா.—தொண்ணூற்றோராம்பாட்டு.— (தமரித்யாதி) "தாள் தாமரைமலர்களிட்டிறைஞ்சி, மால்வண்ணன் தாள்தாமரை அடைவோமென்று தமராவார் யாவர்க்கும் தாமரைமேலார்க்கும் அமரர்க்கும் ஆடரவார்த்தார்க்கும் அமரர்கள்" என்றந்வயம். அமரர்கள்-நித்யஸூரிகள். மால்வண்ணன் - க்ருஷ்ணன். கக

அரு.—தொண்ணூற்றோராம்பாட்டு.—தாள்தாமரை - தாளையுடையதாமரை. ஆடரவார்த்தார்க்கும் - ஆடுகிறபாம்பை ஆபரணமாகவுடைய ருத்ரனுக்கும் அமரர்கள்-நித்யஸூரிகளோபாதி இங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் ப்ரஹ்மாதிகளுக்குப் பூஜ்யரென்றபடி. கக.

என்று மறந்தறியே னென்னெஞ்சத் தேவைத்து,
நின்று மிருந்தும் நெடுமாலை,—என்றும்
திருவிருந்த மார்பன் சிரீதரனுக் காளாய்,
கருவிருந்த நாள்முதலாக் காப்பு. கஉ.

அந்.—திரு என்றும் இருந்த மார்பன் சிரீதரனுக்கு (5 ஆளாய் கருவிருந்தநாள்முதலா காப்பு திருமாலை என்னெஞ் சத்தே (10) வைத்து நின்றும் இருந்தும் என்றும் மறந் தறியேன். (15)

அர்—பெரியபிராட்டி எப்போதும் வாஸம்பண்ணுகிற திரு மார்பையுடைய ஸ்ரீதரனுக்கு (ரு) தாஸனானான், கர்ப்பத்திலிருந்த நாள்முதல் ரக்ஷிக்கையாலே ஸ்ரீய:பதியை என்ஹ்ருதயத்திலே (கo) ஸ்தாபித்து நின்றபோதும் இருந்தபோதும் எப்போதும் மறந்தறியமாட்டேன். (கரு) கூஉ.

வ்யா.— தொண்ணூற்றிரண்டாம்பாட்டு.— (என்றுமித்யாதி) கர்ப்பத்திலே யிருந்தநாள்தொடங்கி எம்பெருமா னென்னை நோக்கிக் கொண்டுபோருகையாலே; என்றும் திருவிருந்தமார்பன் சிரீதரனுக் காளாகவும் பெற்று, வ்யாமுக்தனானவனை என்னெஞ்சிலே வைத்து என்று மொக்க நின்றபோதோடு இருந்தபோதோடு வாசியின்றிக்கே மறந்தறியேனென்கிறார். கூஉ.

அரு.—தொண்ணூற்றிரண்டாம்பாட்டு.—கருவிருந்த நாள்மு தலாக்காப்பு அவனுகையாலே, என்றும் திருவிருந்த மார்பன் சிரீதர னுக்காளாய் நெடுமாலை என்னெஞ்சத்தே வைத்து என்றும் நின்று மிருந்தும் மறந்தறியே னென்கிறார் என்றந்வயத்திலே அர்த்தம். ஜா யமான கடாக்ஷம்பண்ணுகையாலே இதெல்லாம் பெற்றேனென்ற படி. கூஉ.

காப்பு மறந் தறியேன் கண்ணனே யென்றிருப்பன்,
ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும்,—ஆக்கை
கொடுத்தளித்த கோனே குணப்பரனே, உன்னை
விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம். கூங.

அந்.—கண்ணனே காப்பு என்றிருப்பன் மறந்தறியேன். ஆங்கு (5) ஆப்பு ஒழியவும் பல்உயிர்க்கும் ஆக்கை கொ டுத்து (10) அளித்த கோனே குணப்பரனே! மெய் தெ ளிந்தார் (15) உன்னை விட துணியார். (18)

அர்.—ஸ்ரீக்ருஷ்ணனே ரக்ஷகன் என்றிருப்பேன். (இதை) மறக்கமாட்டேன். ப்ரளயகாலத்தில் (ரு) சரீரங்கள் போனாலும் (ஸ்ரு ஷ்டிகாலத்தில்) ஸகலப்ராணிகளுக்கும் சரீரத்தைக் கொடுத்து!

http://acharya.org

(௧௦) ரக்ஷித்த ஸ்வாமியான குணுநிகனே! யதார்த்த மறிந்த வர்கள் (௧௫) உன்னை விடுகைக்கு ஸாஹஸம்செய்யார்கள். (௧௮)

வ்யா.—தொண்ணூற்றுமூன்றும்பாட்டு.—(காப்பித்யாதி) எம்பெருமானுடைய ரக்ஷையமறந்தறியேன். க்ருஷ்ணனே ப்ராப்ய ப்ராபகங்களென்றிருப்பன். (ஆப்பித்யாதி) ஸர்வாத்மாக்களுக்கும்காரணகளேபரங்களையிழந்தால் அத்தைமீளவும் கொடுத்து ரக்ஷிக்கைக் குறுப்பான ஸ்வாபாவிகமான சேஷசேஷிபாவமான ஸம்பந்தத்தையுடையவனே ! இஸ்ஸம்பந்தத்தை மெய்யாகவறிந்தவர் உன்னை விடத் துணியாரென்கிறார். ௯௩.

அரு.—தொண்ணூற்றுமூன்றும்பாட்டு.—ஆப்பு-பந்தமாய், அத்தால் கரணகளேபரங்களைச்சொல்லுகிறது. குணப்பரனே-குணுநிகனென்றபடி. அந.

மெய்தெளிந்தா ரென்செய்யார் வேறுனர் நீறாக,
கைதெளிந்து காட்டிக் களப்படுத்து,—பைதெளித்த
பாம்பி னணையா யருளா யடியேற்கு,
வேம்பும் கறியாகு மென்று. ௯௪.

அ.—வேறுனர் நீறாக தெளிந்து கைகாட்டி களம் (5) படுத்து தெளிந்த பை பாம்பு அணையாய் (10) அடியேற்கு அருளாய், என்று வேம்பும் கறியாகும். (15) மெய்தெளிந்தார் என்செய்யார். (17)

அர்.— சத்ருக்களான துர்யோதனாதிகள் பஸ்மமாம்படி ஸங்கல்பித்துப் படைவகுத்து யுத்தரங்கத்தில் (௫) விழச்செய்து நிர்மலமாய்ப் பரந்தபணங்களையுடைய திருவநந்தாழ்வானுகிற படுக்கைமேல்கண்வளர்ந்தருளுகிறவனே ! (௧௦) அடியேன்விஷயமாகக் க்ருபைபண்ணியருளாய். இஷ்டமிருந்தால் வேம்பினிலைசளும் கறியமுதாகும். (௧௫) தத்வமறிந்தவர்களென்செய்யமாட்டார்கள். (௧௭) ௯௪.

வ்யா.—அவ.—தொண்ணூற்றுநாலாம்பாட்டு.— (மெய்தெளிந்தாரித்யாதி) அத்யந்தஹேயனுகிலும் என்னை விஷயீகரித்தருளவேணும்; என்னிலுந் தண்ணியாரையும் (௧) "யதிவா ராவணஸ்ஸ்வயம் -

(௧) ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டம். ௧௮ ஸ.[illegible]

http://acharya.org

யதிவாராவணஸ்வயம்'' என்னும்படியே வஸ்துஸ்த்திதி அழகியதாக அறியுமவர்களென்றும் விஷயீகரிக்கப்படுமவரென்கிறார். ௯௪.

(வேறாரித்யாதி) ஒன்றாய்வாழாதே வேறான தூர்யோதநாதிகள் பஸ்மமாம்படி பாஹிம்ஸையென்று கலங்காதே ஆஶ்ரிதவிரோதிகளாகையாலே திருவுள்ளந்தெளிந்து அணிவகுத்து யுத்தக்களத்திலே கொண்டுவிழவிட்டுப் பின்னும்படுக்கையிலே சாய்ந்தவனே! (கைதெளிந்த) எம்பெருமானோட்டைஸ்பர்சத்தாலே குளிர்ந்தபணைகள். அவர்கள் தக்கவைவர்; நீஹேயரையுமேறிட்டுக்கொண்டால் ரக்ஷிக்கலாம். கறியாகக் கொள்ளுவோமென்று அபிமாநிக்க வேம்பு கறியாகிறாப்போலே வஸ்து ஸ்திதி அறிவார். எவ்வளவு செய்யார்கள் (க) "க்ஷிப்த்வாவிதுருயதூஜ - கிமத்ர சித்ரந்தர்மஜ்ஞ" இதிவத். ௯௫.

அரு.—தொண்ணூற்று நாலாம்பாட்டு —வேம்புங்கறி-என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார். (அத்யந்தஹேயனித்யாதி) பொல்லாதவனை விஷயீகரிக்கப் போமோவென்ன, மெய்தெளிந்தாரென்றத்தைப் பற்ற அருளிச் செய்கிறார் (என்னிலுமித்யாதி). அவதாரிகாத்வயம். இது பிழை. ஆனாலும் தோஷவான்களும் வஸ்துஸ்த்திதி அழகியதாக அறியுமவர்களாலே விஷயீகரிக்கப்படுவரென்றவதாரிகைக் கர்த்தம். கைதெளிந்துகாட்டி - தெளிந்து கைகாட்டி. தக்கவை வரன்றோ? உமக்குக்கூடுமோவென்று சங்கை. என்று கொள்ளுகை-அபிமாநிக்கை. வேம்பு போலே தோஷவானைகொள்ளக் கூடுமோவென்ன அருளிச்செய்கிறார் (வஸ்து ஸ்த்திதீத்யாதி) சரணாகதி தர்மமறிந்தவர்கள் எல்லாம் செய்வர்கள்; தோஷவானையும் கைக்கொள்வர்களென்றபடி. ௯௪.

நான்முகன் திருவந்தாதி வ்யாக்யாந அரும்பதம் முற்றிற்று.

அப்பிள்ளை திருவடிகளே சரணம்.

என்றேனடிமை யிழந்தேன் பிறப்பிடும்பை,
ஆன்றேனமரர்க்கமராமை,—ஆன்றேன்
கடனாடும் மண்ணாடும் கைவிட்டு, மேலை
இடநாடுகாண வினி. ௯௬.

http://acharya.org

அ்.—அடிமை என்றேன். பிறப்பு இடும்பை இழிந்தேன். அமரர்க்கு (5) அமரராமை ஆன்றேன். கடன் நாடும் மண் நாடும் (10) கைவிட்டு மேலை இடம் நாடு காண (15) இனி ஆன்றேன். (17) ௯௫.

அர்.—தாஸ்யத்தை யேற்றுக்கொண்டேன். ஜந்மதுக்கங்களில்நின்று மிறங்கினேன். (ப்ரஹ்மாதி) தேவர்களுக்கும் (௫) கிட்டவொண்ணாதபடி ஜ்ஞாநாதிகனானேன். கடன்போல வஶ்யமநுபவிக்கத்தக்க ஸ்வர்க்கத்தையும் பூலோகத்தையும் (௧௦) விட்டுவிட்டு ஸர்வோத்க்ருஷ்டமாய் விசாலமான திருநாட்டை ஸேவிக்க (௧௫) இப்போது பாக்யமுடையேனானேன். (௧௭)

வ்யா.—தொண்ணூற்றைந்தாம்பாட்டு.—(என்றேனடிமை) அடிமையென்றால் மருந்துபோலே யிராதே அதிலேபொருந்தினேன். (இழிந்தேனித்யாதி) அடிமைக்கு விரோதியாய் ஸாம்ஸாரிகமான அஹங்காரமமகாரமாகிற பர்வதத்தில்நின்று மிழிந்தேன். (ஆன்றேனித்யாதி) ப்ரஹ்மாதிகளுக்கு மென்னைக்கண்டால் கூசவேண்டும்படி ஜ்ஞாநபக்த்யாதிகளால் பூர்ணனானேன். அதுக்குமேலே புண்யபலம் புஜிக்கும் ஸ்வர்க்காதிலோகங்களையும் புண்யார்ஜநம் பண்ணும் பூமியையும் உபேக்ஷித்து அவற்றில் விலக்ஷணமாய் இடமுடைத்தான ஸ்ரீவைகுண்டம் காணலாம்படி இப்போது பரபக்தியுக்தனானே னென்கிறார். ௯௫.

இனியறிந்தே னீசற்கும் நான்முகற்கும் தெய்வம்,
இனியறிந்தேனெம்பெருமா னுன்னை;—இனியறிந்தேன்
காரணன்நீ கற்றவைநீ கற்பவைநீ, நற்கிரிசை
நாரணன்நீ நன்கறிந்தேன்நான். ௯௬.

நான்முகன் திருவந்தாதி முற்றிற்று.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

அ்.— எம்பெருமான் உன்னை ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் (5) இனி அறிந்தேன் நீ காரணன் இனி (10 அறிந்தேன். கற்றவை நீ கற்பவை நீ (15) இனி அறிந்தேன். நல்கிரிசை நீ நாரணன் (20) நான் நன்கு அறிந்தேன். (23)

http://acharya.org

அர்.—ஸர்வஸ்வாமியான உன்னை ருத்ரனுக்கும் ப்ரஹ்மாவுக்கும் தேவதையென்று (ரு) இப்போ தறிந்தேன். நீ ஜகத் காரணபூதனென்று இப்போது (கo) அறிந்தேன். (இதுவரையில் அறிந்தபதார்த்தங்களும் நீ, (மேல்) அறியத்தக்கபதார்த்தங்களும் நீயே (கரு) என்றிப்போ தறிந்தேன். (நிர்ஹேதுகரக்ஷணமாகிற) நல்ல வ்யாபாரத்தையுடைய நீ ஸர்வசேஷியான நாராயணனென்று (உo) நான் நன்றாகத் தெரிந்துகொண்டேன். (உ௩) கூகூ.

வ்யா.—கொண்ணூற்றாறும்பாட்டு.— (இனியறிந்தேன்) இப்போது ஈசனுக்கும் நான்முகனுக்கும் தெய்வமென்றெனக்குக் கைவந்தது. இப்போது நீயானபடியே யுன்னையறிந்திருந்தேன். ஸர்வத்துக்குக்காரணன் நீ; இதுக்குமுன்பு அறிந்தனவும் இனிமே லறியக்கடவ பதார்த்தங்களுமெல்லாம் நீயிட்டவழக்கு. (நற்கிரிசை) நிர்ஹேதுகமாக ரக்ஷிக்கும் ஸ்வபாவனு யதுக்கடியான சேஷியான நாராயணன் நீ. (நன்கறிந்தேன்நான்) இப்பொருளெனக் கழகியதாகக் கைவந்ததென்கிறார். கூகூ.

நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

H1306
(2086)
T
86-00+9
T363

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

௪-திருவந்தாதிகளின் பாசுர

அட்டவணை.

பாசுரங்கள்.	திருவந்தாதி.	பாசுர ஸங்க்யை.	பாசுரங்கள்.	திருவந்தாதி.	பாசுர ஸங்க்யை.
அ.					
அகைப்பில்	௪	௩௮	அழைப்பன் திருவேங்கட	௪	௩௧
அங்கற்கு	௩	௬௫	அறிந்தைந்தும்	௨	௬
அடிச்சகடம்	௪	௩௩	அறியார்சமணர்	௪	௬
அடிமூன்றில்	௨	௫	அறியும்	௧	௨௨
அடியால்முன்	௨	௯௨	அறிவென்னும்	௩	௧௨
அடியும்	௧	௪௭	அன்பாவாய்	௪	௫௧
அடிவண்ணம்	௩	௫	அன்பாழியானை	௧	௭௨
அடுத்த	௧	௮௦	அன்பேதகளியா	௨	௧
அடைந்தகரவணை	௩	௨௮	அன்றது	௨	௯
அடைந்தவருவினை	௧	௫௩	அன்றிவ்வுலகம்	௩	௩௪
அத்தியூரான்	௨	௯௬	ஆ		
அதுநன்றிது	௩	௮௮	ஆங்காரவாரமது	௪	௧௦
அமுதென்னும்	௨	௮௫	ஆங்குமலரும்	௩	௬௭
அயனின்ற	௧	௫௭	ஆட்பார்த்து	௪	௬௦
அரணும்	௩	௭௮	ஆமேயமரர்க்கு	௧	௪௫
அரன்நாரணன்	௧	௫	ஆய்ந்தவருமறையோன்	௩	௭௭
அரவமடல்	௧	௫௪	ஆய்ந்துகொண்டாதி	௪	௭௯
அரியபுலன்	௧	௫௦	ஆய்ந்துரைப்பன்	௨	௭௩
அரியதெளிதாகும்	௨	௨௨	ஆரேதுயர்	௩	௨௭
அருள்புரிந்த	௨	௫௯	ஆரேயறிவார்	௪	௭௩
அருளாதொழியுமே	௩	௧௧	ஆலநிழற்கீழ்	௪	௪௭
அவரெடுத்த	௩	௯௭	ஆளமர்வென்றி	௧	௮௧
அவரவர்தாம்தாம்	௧	௧௪	ஆறியவன்பில்	௧	௩௫
அவரிவரென்றில்லையரவ	௨	௧௨	ஆறுசடை	௪	௪
அவரிவரென்றில்லையனங்க	௪	௫௬	இ		
அவற்கடிமை	௩	௩௭	இசைந்தவரவமும்	௩	௬௪
அவனென்னையாளி	௪	௩௦	இடங்கைவலம்புரி	௨	௭௧
அவனேயருவரையால்	௩	௫௧	இடந்தபூமி	௧	௩௯
அவன்கண்டாய்	௨	௨௪	இடமாவது	௪	௬௬
அவன்தமர்	௧	௫௫	இடம்வலமேழ்	௩	௭௩
அழகன்றே	௩	௬	இடரார்படுவார்	௧	௭௮
அழகியான்	௪	௨௨	இதுகண்டாய்	௨	௬௬
அழைப்பன்திருமாலை	௨	௫௦	இதுவிலங்கை	௪	௨௮

http://acharya.org

பாசுரங்கள்.	திருவந் தாதி.	பாசுர ஸங்க்யை.
இமம்சூழ்	௩	௯௮
இமயப்பெருமலை	௪	௮௭
இமையாத	௧	௩௨
இயல்வாக	௧	௧௩
இருந்தண்கமலத்து	௨	௩௭
இலை துணை	௪	௮
இல்லறமில்லேல்	௪	௭௨
இவையவன்	௩	௩௧
இவையாபிலவாய்	௪	௨௧
இறையாய்நிலனாகி	௩	௩௯
இறையும்நிலனும்	௧	௨௯
இறையெம்பெருமான்	௨	௯௯
இனிதென்பர்	௨	௩௫
இனியவன்	௬	௮௩
இனிபறிந்தேன்	௪	௯௬
இனியார்	௧	௮௭
இன்றாகநாளையேயாக	௪	௭
இன்றாவறிகின்றேனல்லேன்	௨	௮௭
இன்றேகழல்கண்டேன்	௩	௨
உ		
உகந்துன்னை	௨	௮
உகப்புருவம்	௪	௨௯
உணர்வாரார்	௧	௬௮
உணரில்	௩	௮௨
உணர்ந்தாய்	௨	௪௮
உயிர்கொண்டு	௪	௮௮
உய்த்துணர்வென்னும்	௩	௯௪
உரைமேல்	௧	௨௫
உலகுமுலகிறந்த	௧	௬௧
உலகும்முழுழியும்	௬	௪௪
உளதென்று	௨	௪௫
உளனாய	௩	௮௪
உளன்கண்டாய்	௧	௯௩
உளன்கண்டாய்	௩	௪0
உளன்கண்டாய்	௪	௮௬
உறங்கண்டாய்	௨	௭௭
உற்றுவணங்கி	௨	௯௪
ஊ		
ஊரும்வரியரவம்	௧	௩௮
ஊனக்குரம்பையின்	௧	௯௯

பாசுரங்கள்.	திருவந் தாதி.	பாசுர ஸங்க்யை.
எ		
எங்கள்பெருமான்	௨	௯௭
எண்மர்பதினொருவர்	௧	௫௨
எமக்கென்று	௨	௩௮
எய்தான	௩	௫௨
எழில்கொண்டு	௩	௮௬
எழுவார்	௧	௨௬
எளிதில்	௧	௫௧
எனக்காவார்	௧	௮௯
எனைக்காவார்	௪	௫௧
என்றுகடல்	௧	௨
என்று மறந்தறியே னென்	௪	௯௨
என்றுமறந்தறியேனேழ்பிற	௨	௫௫
என்னொருவர்	௧	௬௪
என்னெஞ்சமேயானிருள்	௪	௫௮
என்னெஞ்சமே யானென்	௨	௯௫
ஏ		
ஏறேழும்	௨	௬௩
ஏற்றான்	௧	௭௪
ஏன்றேனடிமை	௪	௯௫
ஒ		
ஒருங்கிருந்த	௪	௫[illegible]
என்றுமறந்தறியேன்	௧	[illegible]
ஓ		
ஓத்தின்பொருள்	௨	௩[illegible]
ஓரடியும்	௧	௪0
ஓருருவனல்லை	௨	௬[illegible]
ஓர்த்தமனத்தராய்	௩	௭[illegible]
க		
கடிது	௨	௯[illegible]
கடைநின்று	௨	௧௧
கடைநின்று	௪	௫[illegible]
கண்டுவணங்கினார்க்கு	௪	௭[illegible]
கண்டேன்திருமேனி	௨	௬௭
கண்ணும்கமலம்	௩	௧[illegible]
கதவிக்கதம்	௨	௮[illegible]
கதவுமனமென்றும்	௪	௮[illegible]
கதைப்பொருள்தான்	௪	௩௨
கதையின்பெரும்பொருளு	௨	௬[illegible]
கலந்தான்	௪	௮௨
கலந்துமணி	௬	௮[illegible]
கல்லாதவர்	௪	௫[illegible]

http://acharya.org

பாசுரங்கள்.	திருவந்தாதி.	பாசுர எண்ணிக்கை.	பாசுரங்கள்.	திருவந்தாதி.	பாசுர எண்ணிக்கை.
கவிழினர்	௩	௮௫	சிறியார்	௨	௩௯
கழலெடுத்து	௨	௭	சினமாமத	௩	௪௩
கழலொன்றெடுத்து	௧	௪௮	சு		
கழல்தொழுதும்	௩	௭	சுருக்காக	௨	௪௦
களிறுமுகில்	௩	௭௧	சூ		
கா			சூதாவது	௪	௯௫
காணக்கழி	௨	௫௯	சூழ்ந்ததுழாய்	௩	௫[illegible]
காணலுறுகின்றேன்	௪	௪௧	செ		
காண்காணெ	௩	௩௫	செவிவாய்	௧	௧௨
காப்புமறந்தறியேன்	௪	௯௩	செலிக்கின்பம்	௪	௯௧
காப்புன்னையுன்ன	௧	௭௫	செற்றதுவும்	௩	௪௧
காய்ந்திருளை	௩	௯௧	செற்றெழுந்து	௧	௯௪
காலையெழுந்து	௧	௯௯	சென்றிலங்கை	௨	௨௫
கு			சென்றநாள்	௩	௧௭
குறிப்பெனக்கு	௪	௩௪	சென்றால்குடையாம்	௧	௫௩
குறைகொண்டு	௪	௯	சென்றுவணங்கினர்க்கு	௪	௪௨
குறையாக	௨	௮௩	சே		
குன்றனைய	௧	௪௧	சேயனணியன்	௪	௭௧
குன்றொன்றினைய	௩	௭௨	சேர்ந்ததிருமால்	௬	௬௦
கூ			சொ		
கூற்றமும்	௪	௫௦	சொல்லுந்தனையும்	௧	௭௦
கை			ஞா		
கையகனலாழி	௩	௯௬	ஞானத்தால்	௨	௨
கையவலம்புரியும்	௧	௨௮	த		
கொ			தமராவார்	௪	௯௧
கொண்டதுலகம்	௨	௧௮	தமருகந்தது	௧	௪௪
கொண்டானை	௧	௭௯	தமருள்ளம்	௨	௭௦
கொண்டுகுடங்கால்	௪	௪௪	தரித்திருந்தே	௪	௯௩
கொண்டுவளர்க்க	௨	௯௮	தவஞ்செய்து நான்முகனால்	௪	௧௯
கோ			தவஞ்செய்துநான்முகனே	௨	௭௮
கோவலனாய்	௩	௪௨	தழும்பிருந்த	௧	௨௩
கோவாகி	௨	௯௧	தற்பென்னை	௪	௭௭
ச			தனக்கடிமை	௨	௧௯
சரணாமறை	௧	௯௦	தா		
சா			தாமுளரே	௨	௨௧
சார்ந்தகடு	௩	௭௫	தாழ்சடையும்	௩	௯௩
சார்வுநமக்கு	௩	௧௦௦	தாழ்ந்துவரங்கொண்டு	௨	௨௩
சி			தாளால்சகடம்	௩	௫௪
சிலம்பும்	௩	௯௦	தாளாலுலகம்	௪	௬௫
சிறந்தவென்	௩	௨௯	தானேதனக்குமவன்	௬	௩௮
சிறந்தார்க்கு	௨	௪௪	தானொருவனாகி	௪	௭௦

http://acharya.org

பாசுரங்கள்.	திருவந் தாதி.	பாசுர ஸங்க்யை.	பாசுரங்கள்.	திருவந் தாதி.	பாசுர ஸங்க்யை.
தி			நாடினும்	௧	௮
திசையும்	௧	௭	நாமம்பலசொல்லி	௩	௮
திரிந்தது	௨	௧௫	நாம்பெற்ற	௨	௫௮
திருக்கண்டேன்	௩	௧	நாராயணன்	௪	௧௪
திருநின்ற	௪	௬௨	நாவாயிலுண்டே	௧	௯௫
திருமகளும்	௧	௪௨	நான்முகனை	௪	௧
திருமங்கை	௨	௫௭	நான்றமுலைத்தலை	௧	௧௮
திறம்பாதென்	௧	௯௬	நி		
திறம்பிற்றினி	௨	௮௮	நிகழ்ந்தாய்	௪	௨௪
திறம்பேல்மின்	௪	௬௮	நிலமன்னும்	௪	௧௬
து			நிறம்கரியன்	௨	௫௨
துடரெடுத்த	௨	௧௩	நிறம்வெளிது	௬	௫௬
துணிந்தது	௨	௩௩	நினைத்துலகில்	௩	௯௩
தெ			நினைப்பன்	௨	௪௨
தெளிதாக	௧	௬0	நின்றதோர்	௨	௬௧
தெளிந்தசிலாதலத்தின்	௬	௫௮	நின்றபெருமானே	௩	௪௭
தே			நின்றுநிலமங்கை	௧	௨௧
தேசும்	௩	௧0	நின்றெதிராய	௩	௮0
தேருங்கால்	௪	௨	நீ		
தேவராய்	௪	௫௪	நீயன்றுலகளந்தாய்	௨	௩0
தொ			நீயன்றேநின்று	௩	௪௮
தொகுத்தவரத்தனைய்	௪	௫	நீயுந்திருமகளும்	௧	௮௬
தொட்டபடை	௩	௯௯	நீயேயுலகெல்லாம்	௪	௨0
தொழிலெனக்கு	௪	௮௫	நெ		
தொழுதால்	௬	௨௫	நெஞ்சால்	௩	௮௧
தொழுதுமலர்	௧	௫௮	நெறியார்	௨	௫௩
தோ			நெறிவாசல்	௧	௪
தோளவனை	௧	௬௩	நே		
தோளிரண்டு	௨	௪௬	நேர்ந்தேனடிமை	௨	௮0
ந			ப		
நரமருள்	௧	௩௩	பகல்கண்டேன்	௨	௮௧
நரிழைத்து	௨	௪	படிகண்டறிதியே	௧	௮௫
யமேவன்	௧	௬௪	படிவட்டத்தாமரை	௩	௧௩
லமேவலிது	௩	௭௪	படையாரும்	௧	௮௨
வின்றுணரத்த	௨	௮௬	பணிந்துயர்ந்த	௩	௧௫
ன்கோதும்	௩	௪௧	பணிந்தேன்	௨	௬௫
ன்மணி	௪	௪௭	பண்டிப்பெரும்பதியை	௨	௧௪
ன்றுபிணி	௧	௭௧	பண்டெல்லாம்	௩	௬௧
நா			பண்புரிந்த	௧	௪௬
கத்தணைக்குடந்தை	௪	௩௬	பதிப்பகைஞர்க்கு	௪	௭௪
க்கொண்டு	௪	௭௫	பதியமைந்து	௨	௨௭

http://acharya.org

http://acharya.org

பாசுரங்கள்.	திருவந்தாதி.	பாசுர எண்ணிக்கை.	பாசுரங்கள்.	திருவந்தாதி.	பாசுர எண்ணிக்கை.
மு					
முடிந்தபொழுதில்	௩	௮௯	வாய்மொழிந்து	௩	௧௦
முதலாவார்மூவர்	௧	௪௫	வாரிசுருக்கி	௧	௬௦
முயன்றுதொழு	௩	௫௬	வாழும்வகை	௩	௫௯
முரணைவலி	௧	௩௯	வாழ்த்தியவாயராய்	௩	௯௭
முன்னுலகம்	௩	௨௦	வாழ்த்துகவாய்	௪	௧௬
மெ			வாணுகி	௧	௯௨
மெய்தெளிந்தார்	௪	௯௪	வானுலவு	௪	௩௭
மே			வி		
மேல்நான்முகன்	௪	௩௬	விண்ணகரம்	௩	௬௨
யா			வித்துமிட	௪	௨௩
யானேதவம்	௨	௭௪	விரலொடுவாய்	௧	௨௪
வ					
வகையறு	௧	௩௭	விரும்பிவிண்மண்ணளந்த	௩	௨௩
வகையாலவனி	௨	௩௪	விரைந்தடைமின்	௪	௮௦
வகையால்மதியாது	௪	௨௫	விலக்காட்படுவர்	௪	௫௨
வடிக்கோல	௨	௮௨	வினையாலடர்ப்படார்	௧	௬௫
வடிவார்	௩	௨௨	வீ		
வந்தித்தவனை	௨	௨௯	வீடாக்கும்பெற்றி	௪	௧௩
வந்துதைத்த	௩	௧௯	வீற்றிருந்து	௪	௯௦
வயிறழல	௧	௧௩	வெ		
வரங்கருதி	௨	௮௪	வெற்பென்றிருஞ்சோலை	௨	௫௪
வரத்தால்	௧	௯௦	வெற்பென்றுவேங்கடம்பாடினேன்	௪	௪௦
வருங்கால்	௩	௨௪	வெற்பென்றுவேங்கடம்பாடும்	௩	௬௧
வரைகுடை	௧	௮௩	வே		
வரைச்சந்தன	௨	௭௯			
வலமாக	௪	௬௩	வேங்கடமும்விண்ணகரும்	௧	௭௭
வலிமிக்க	௨	௯௮	வேங்கடமேவிண்ணோர்	௪	௬௮
வழக்கன்று	௨	௧௯	வேந்தராய்	௪	௮௩
வழிநின்று	௧	௭௯	வை		
வா			வைப்பன்	௪	௬௯
வாயவனை	௧	௧௧	வையந்தகளியா	௧	௧

இயற்பா

ச - திருவந்தாதிகளினட்டவணை

முற்றிற்று.

http://acharya.org